REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மே 13 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 තිනකරන්

வரு. 92 இல. 113 | Monday 13, May, 2024 | 20 பக்கங்கள் | 50/-




## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

பாராளுமன்றம் இன்று திங்கட்கிழமை, நாளை (14) செவ்வாய்க்கிழமை ஆகிய இரு தினங்களிலும் கூடவுள்ளதாக, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் 06

### O/L ஆங்கில வினாத்தாளை 'வட்ஸ் அப்' குறூப்பில் வெளியிட்ட

# ரியூசன் ஆசிரியர் இருவர் கண்டி, கம்பஹாவில் கைது

### வவுனியாவில் பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவர் இடைநிறுத்தம்

**கண்டியில் சுமார் 1,025 மாணவர்களின் 'வட்ஸ் அப்' குழுக்களில் வினாத்தாள் பகிர்வு; வவுனியாவில் பரீட்சையை உரிய நேரத்திற்கு முன் ஆரம்பித்து முடிவுறும் நேரத்திற்கு முன்பே முடித்த மண்டப மேற்பார்வையாளர் மீதும் விசாரணை**

லோரன்ஸ் செல்வநாயகம்

கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையின்ஆங்கில வினாத்தாளை வட்ஸ் அப் மூலம் விடுவித்துள்ள சம்பவம் தொடர்பில் ஹசலக பிரதேச டியூஷன் வகுப்பு ஆசிரியர் ஒருவரும் கம்பஹா பகுதி ஆசிரியையும் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்படி பரீட்சை தற்போது நடைபெற்று வரும் நிலையில் குறித்த டியூஷன் ஆசிரியர் பரீட்சைக்கான ஆங்கில வினாத்தாளை இவ்வாறு வட்ஸ் அப் மூலம் வெளியிட்டுள்ளதாகவும் அவரை கண்டியில் வைத்து கைது செய்துள்ளதாகவும் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஆசிரியையை கம்பஹாவில் வைத்து கைது செய்துள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆசிரியை ஆசிரியர் பயிற்சி கல்லூரியொன்றில் ஆசிரியையாக பணி புரிவதுடன் கம்பஹா பகுதி பிரதான பாடசாலையொன்றின் பரீட்சை நிலைய உத்தியோகத்தராகவும் செயற்பட்டுள்ளார்.

அவர் தமது கையடக்கத் தொலைபேசியில் 'வட்ஸ் அப்' மூலம் ஆங்கில 06

### பொருளாதார வளர்ச்சி 03 வீத எதிர்பார்ப்பு;

## எதிர்வரும் வருடமும் அரசாங்க ஊழியருக்கு சம்பள அதிகரிப்பு

### சர்வதேச தாதியர் தின விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு



2025ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 3% ஆக உயரும் என எதிர்பார்ப்பதாகவும் அதற்கமைய அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அலரிமாளிகையில் நேற்று (12) நடைபெற்ற சர்வதேச தாதியர் தின நிகழ்வில் கலந்து கொண்டு 06

## அரசின் ஒருநாள் வருமானம் 842 கோடி ரூபா; செலவு 1467 கோடி ரூபா

### தேர்தலை கோருபவர்கள் சிந்திப்பது அவசியம்



லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கத்தின் ஒருநாள் வருமானம் 842 கோடி ரூபாவாகவுள்ள நிலையில் ஒருநாள் செலவு 1467 கோடி ரூபாவாக காணப்படுவதாகவும் அந்த வகையில் ஒருநாளை கொண்டு நடத்த 625 கோடி ரூபா பற்றாக் குறையாகவுள்ளதாகவும் ஊடகத்துறை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். இந்த நாட்டை ஆட்சிசெய்யும் அனைவருமே அதுதொடர்பில் விவாதிக்க வேண்டும் என்றும் அரசாங்கத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்பது 06

## தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அரசு அக்கறை

### அதற்கான பொறிமுறை உள்நாட்டில் தயாரிக்கப்படும்



இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. காணாமல் போனோர்கள் தொடர்பில் அவர்களின் உறவினர்கள் நீதி கோரி போராடுகின்றனர். அதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. ஆனால் அந்த பொறிமுறையை உருவாக்குவதற்கான பொறுப்பினை சர்வதேசத்துக்கு வழங்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் 06

## போலி தேசிய மாயையிலிருந்து விலகிச் செல்லும் தமிழ் மக்கள்

### இனியும் எடுபடாது என்கிறார் அமைச்சர் டக்ளஸ்



பொது வேட்பாளர் விடயம் என்பது தமிழ் மக்களுக்கு பயனற்ற விடயம். அதை முன்னெடுப்பது தோல்வியிலேயே முடியும் என மக்கள் வெளிப்படையாக கூறத் தொடங்கியுள்ளதானது தமிழ் மக்கள் தம்மை பீடித்திருந்த போலித் தேசியம் என்ற மாயை அரசியலிலிருந்து படிப்படியாக வெளிச்சத்தக்கு வருவதை உணர்த்துகின்றது என தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நடைமுறைச் சாத்தியமான எமது கட்சியின் வழிமுறையுடன் மக்கள் கைகோர்ப்பார்களானால் விரைவில் அனைத்து பிரச்சினைகளுக்கும் 06

### இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள

## ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர் குருஜியை சந்தித்துரையாடிய ஜீவன்



இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள வாழும் கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர் குருஜியை, இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் (11) சந்தித்து உரையாடினார்.

எதிர்வரும் 18 முதல் 20 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கி இருக்கும் குருஜி நுவரெலியா, சீதையம்மன் ஆலயத்துக்கும் 06

### சுயாதீன தொலைக்காட்சி தொரமடலாவ

## நிகழ்ச்சியில் இன்று அமைச்சர் பந்துல குணவர்தன பங்கேற்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

சுயாதீன தொலைக்காட்சி சேவையில் பிரதி திங்கட்கிழமை தோறும் ஒளிபரப்பாகும் தொரமடலாவ நேரடி கலந்துரையாடலில் இன்றைய தினம் (13) இரவு 10:30 மணிக்கு இடம் பெறும் நிகழ்ச்சி "2023 மத்திய வங்கி அறிக்கை வெளிப்படுத்தும் பொருளாதார நிலைப்பாடு" என்ற தொனிப்பொருளில் இடம் பெறவுள்ளது.

இந்த கலந்துரையாடலில் ஊடகத்துறை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் 06

## அரசாங்க ஊழியர்களுக்கு தாய்லாந்து செல்ல வாய்ப்பு

### விண்ணப்பங்கள் இணையத்தளத்தில்

அரச உத்தியோகத்தர்களை தாய்லாந்திற்கு (Thailand) தற்காலிக நியமனத்திற்கு அனுப்பும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் இணையத்தளம் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும்என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.குறித்த தகவல்கள் பௌத்த சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு (Ministry of Buddhasasana, Religious and Cultural Affairs) விடுத்துள்ள விசேட 06

## பலஸ்தீனத்திற்கு ஐ.நா உறுப்புரிமை

### 143 நாடுகள் ஆதரவாக வாக்களிப்பு



ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக விண்ணப்பிக்க பலஸ்தீனம் பொருத்தமான நாடு என்று அதன் பொதுச் சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் போது பலஸ்தீனத்துக்கு 06

## தமிழரசுக் கட்சியின் மத்திய குழு 19இல் கூடும்

### பொது வேட்பாளர் குறித்து ஆராயும்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வவுனியாவில் உள்ள மாவட்டக் கிளைக் காரியாலயத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த கூட்டத்தில் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது தொடர்பில் 06

## தமிழ் பொதுவேட்பாளர் விடயம் வெற்றுக்கோஷம்

### தமிழ் மக்கள் ஜனாதிபதிக்கே பூரண ஆதரவு



தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயமெல்லாம் வெறும் அரசியல் கோஷங்கள் மாத்திரமே, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பேராதரவு வழங்க வேண்டும். அப்போதுதான் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குரிய சூழ்நிலை 06

### வெசாக் மற்றும் பொசன் தினங்களில்

## சலுகை விலையில் சதொச நிறுவனத்தில் பொருட்கள்



எதிர்வரும் வெசாக் மற்றும் பொசன் தினத்தை முன்னிட்டு நுகர்வோருக்கு பொருட்களை சலுகை விலையில் வழங்குவதற்கு சதொச நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அன்னதான நிகழ்வுகளுக்குத் தேவையான உணவுப் பொருட்களை வழங்கும் வகையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய அந்தந்தப் பிரதேசங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தானசாலைகளுக்குத் தேவையான 06



## 03 பாடசாலை மாணவர் மதிய உணவு தொடர்பில் விஷமப் பிரசாரம்

### சீர்குலைக்க வேண்டாம் என சுசில் வேண்டுகோள்

## கடும் உஷ்ண நிலையால் சரும, பங்கஸ் தொற்று

### சுகாதார தரப்பு மக்களுக்கு எச்சரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக தோல் சம்பந்தப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தோல் நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் இந்திரா கஹவிட்ட தெரிவித்துள்ளார்.

அவ்வாறு ஏற்படும் நோய்களுக்கு தாமே மருந்துகள் எதனையும் தயாரித்து உபயோகிக்கக் கூடாது 06

## SLFP தலைமை பதவியிலிருந்து மைத்திரி இராஜினாமா

### அமைச்சர் விஜேதாச தலைவரானார்

லோரன்ஸ் செல்வநாயகம்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார். அத்துடன் அவர் அந்த கட்சியின் நிறைவேற்றுக் குழுவிலிருந்தும் பதவி விலகியுள்ளதாக அந்த கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். நேற்றைய தினம் எதுல்கோட்டேயிலுள்ள ஹோட்டல் ஒன்றில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 06

## போலி கடவுச்சீட்டு மூலம் கனடா செல்ல முயற்சி

### இருவர் விமான நிலையத்தில் அதிரடி கைது



போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி கனடாவுக்குத் தப்பிச் செல்ல முயன்ற இரண்டு இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை (11) இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் இந்த சம்பவத்திற்கு உதவிய சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் வசிக்கும் 47 வயதுடைய நபரும், வவுனியா பிரதேசத்தில் வசிக்கும் 37 வயதான இருவரும் துபாய் ஊடாக கனடா செல்வதற்காக 06

## மலையக மக்களுக்கு நன்மை நடந்தால் பூரண ஆதரவு

### பாராளுமன்றில் மனோ MP தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



மலையக பெருந்தோட்ட மக்களுக்கு நல்லது நடக்குமாயின் நாம் அதற்கு முழுமையான ஆதரவு வழங்கத் தயாராக உள்ளோம் என மனோ கணேசன் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனினும், மலையக பெருந்தோட்ட மக்களின்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் தோல்வியடைந்துள்ளன என்பதை முதலில் 06

# நகர்வலம்



### இ.போ.சவில் 2018ஆம் ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில்

# கடமையாற்றிய சுமார் 1000க்கும் அதிகமானோருக்கு அமைச்சரினால் நிரந்தர நியமனம் வழங்கி வைப்பு

### நிகழ்வில் அமைச்சர் பந்துல குணவர்தன பங்கேற்பு





இலங்கை போக்குவரத்துச் சபையில் 2018 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிவரும் 1,605 சாரதிகள் மற்றும் நடத்து நர்களுக்கான நிரந்தர நியமனங்கள் வழ ங்கும் திட்டத்தின் கீழ் ஆயிரத்துக்கும் மே ற்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான நிகழ்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போது நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து டிப்போக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், இதுவரை ஒப்பந்த அடிப்படையில் கடமையில் ஈடுபட்டு, தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்த சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் அடங்கிய குழுவிற்கான நியமனங்கள் வழங்கப்பட்டன.

இலங்கை போக்குவரத்து சபையின் அண்மைக்கால வரலாற்றில் ஒரே நேரத்தில் ஆகக்கூடிய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது இதுவே முதற்தடவையாகும்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன; "அமரர் பண்டாரநாயக்கவினால் மக்கள் மயப்படுத்தப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபை அறுபத்தாறு வருடங்களுக்கும் மேலாக பல சவால்களுக்கு மத்தியில் பொதுமக்களுக்கான தனித்துவமான போக்குவரத்து சேவைகளை மேற்கொண்டு வருகின்றது.இலங்கை முழுவதும் உள்ள பாடசாலைகள் மூலம் இலவசக் கல்வியைப் பெற்று உயர் நிலையை அடைந்த பலரின் போக்குவரத்துச் சாதனமாக இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் இருந்துள்ளதாகவும் குறிப்பிட்ட அமைச்சர், தனியார் போக்குவரத்துச் சேவைகள் இல்லாத பின்தங்கிய பிரதேச வீதிகளிலும் பணிக்குச் செல்பவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளை எமது இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் ஏற்படுத்திக் கொடுப்பதுடன், பாடசாலை மாணவர்களை பாடசாலை பருவச் சீட்டுடன் குறித்த நேரத்திற்கு பாடசாலைக்கு அழைத்துச் செல்லும் போக்குவரத்து சபையின் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் சேவையை பலரும் பாராட்டுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.நாடு எதிர்நோக்கிய நெருக்கடியின் காரணமாக விவசாயம் தொழில் சேவை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு துறைகள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டன. அது மாத்திரமின்றி வரலாற்றில் முதல் முறையாக பொருளாதாரம் பெரும் பின்னடைவைக் கண்டது

பொது மக்களுக்கான எரிபொருள் , எரிவாயு போன்றவற்றின் விநியோகத்திலும் நெருக்கடி நிலை ஏற்பட்டது. வெளிநாட்டு கையிருப்பு போன்றவையும் நெருக்கடி நிலைக்கு உள்ளாகின. நாட்டின் இக்கட்டான சூழ்நிலையை தீய சக்திகளும் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டன என்று கடந்த கால நிலைமையை இதன்போது அமைச்சர் விபரித்தார்.

ஜனாதிபதிகள் மற்றும் அரசாங்கங்கள் மாறினாலும், தற்போதைய ஒப்பந்தத்தை மாற்ற முடியாது. இதன் காரணமாக தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நாம் மதிக்க வேண்டியுள்ளது. அதற்கமைவாக வரி செலுத்தும் நாட்டு மக்களுக்கு அரச நிறுவனங்கள் சுமையாக இருக்கக்கூடாது என்பது நிபந்தனைகளில் ஒன்றாகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வெலிகம பகுதியில் பெண் சடலமாக மீட்பு

**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெலிகம மக வீதிய பகுதி வீடொன்றில் 78 வயது மதிக்கத்தக்க திருமணம் ஆகாத பெண் ஒருவர் கை கட்டப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வெலிகம பொலிஸார் (06) தெரிவித்தனர். கடந்த திங்கள் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண் தங்கியிருந்த வீட்டுக்குள் இனம் தெரியாத சந்தேக நபர்கள் புகுந்து வீட்டிலிருந்த பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்து விட்டு கொலை செய்துள்ளதாக தெரிய வருகின்றது.

உயிரிழந்த பெண் அவருடைய சகோதரி மற்றும் சகோதரியின் கணவருடன் வசித்து வருவதுடன் அவர்கள் வெளியே சென்ற சமயமே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பாக இது வரை எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் இது விடயமாக விசாரனைகள் மேற்கொண்டு வருகின்றதாக வெலிகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உபுல் குமார தெரிவித்தார்.

### வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்

## குருநாகல் தெலியாகொன்ன பிரதேசத்திற்கு கள விஜயம்



**புத்தளம் தினகரன் நிருபர்**

வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் (10) குருநாகல் மாவட்டத்தில் உள்ள தெலியாகொன்ன பிரதேசத்திற்கான நேரடி கள விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இவ்விஜயத்தின் போது சுமார் பத்தாயிரத்திற்கு அதிகமான மக்கள் தொகையை கொண்ட தெலியாகொன்ன பிரதேசத்தில் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக பொது விளையாட்டு மைதானம் இல்லாது இப்பிரதேச இளைஞர்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும், இதன் காரணமாக இப் பிரதேச விளையாட்டு வீரர்கள் தமது திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிக்கொண்டு வருவதற்கு சிரமப்படுவதாகவும், மக்கள் ஆளுநருக்கு சுட்டி காட்டினர்.

இதை கவனத்தில் எடுத்த ஆளுநர் விரைவில் பொது விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவதுடன் மக்களின் ஏனைய அடிப்படை தேவைகளையும் நிறைவேற்றுவதாகவும் உறுதியளித்தார்.

## புத்தளம் மாவட்டத்திலுள்ள தென்னை மரங்களுக்கு புதுவகை நோய் தாக்கம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் மாவட்டத்தில் பல பகுதிகளில் உள்ள தென்னை மரங்களுக்கு "வெண்ணிற ஈ நோய்த் தாக்கம்" ஏற்பட்டுள்ளதனால் தெங்கு செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இந்த நோய்த் தாக்கம் காரணமாக தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தென்னையில் இருந்து எதிர் பார்த்த விளைச்சலைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெங்கு செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதேவேளை ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டு அந்நியச் செலாவனியும் குறைந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தென்னை இலைகளின் பச்சையம் இல்லாமல் நாளுக்கு நாள் தென்னை மரங்கள் பழுதடைந்து வருவதுடன் தேங்காய்களின் விளைச்சலும் குறைந்துள்ளதாக தெங்கு செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னர் ஒரு ஏக்கரில் 1000 முதல் 1500 வரை தேங்காய்களை பறித்த தாங்கள் தற்போது ஐநூறு தேங்காய்களை கூட பறிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன், தென்னைத் தோட்டத்தில் கடமைபுரியும் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கும், தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

பொருளாதார ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் தாம் கடன்களை பெற்று, நகைகளை அடகு வைத்து தென்னத் தோட்டத்தை பராமரித்து வருவதுடன், தாம் பெற்ற கடனை மீண்டும் செலுத்துவதற்கு கூட வழியின்றி பெரும் கஷ்டப்படுவதாகவும் செய்கையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெங்கு செய்கையாளர்கள் கோரிக்கை விடுகின்றனர்.

## மதவாச்சி துப்பாக்கிச் சூட்டில் பெண்ணொருவர் காயம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

மதவாச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திவுல்வெவ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக கடந்த (10) இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பெண் மதவாச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

அட்டவீரகொல்லாவ பகுதியில் வசித்து வரும் 44 வயதுடைய பெண் ஒருவரே இச்சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதுடன் சந்தேக நபரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

### கற்பிட்டி ஆலங்குடா பகுதியில்

## சட்டவிரோத தங்கத்தினாலான தொல்பொருட்களுடன் ஒருவர் கைது



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கற்பிட்டி ஆலங்குடா பகுதியில் வீடொன்றிலிருந்து சட்டவிரோதமான முறையில் வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் தங்கத்திலான தொல்பொருட்களுடன் சந்தேகநபரொருவர் நேற்று முன்தினம் (11) கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கற்பிட்டி, ஏத்தாளை பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்படைக்கு சொந்தமன விஜய கடற்படையினரும், புத்தளம் பிரிவு குற்ற விசாரணை பிரிவின் அதிகாரிகளும் இணைந்து குறித்த பகுதியில் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது குறித்த தொல்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றினை சோதனை செய்த போது, அந்த வீட்டிற்குள் மிகவும் சூட்சுமமான முறையில் சட்டவிரோதமாக பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் தொல்பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

தங்கத்தில் தயாரிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வால் ஒன்றும், ஆமை , குதிரை மற்றும் இரண்டு சிறிய சிலைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரும், பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்திலானது என சந்தேகிக்கப்படும் தொல்பொருட்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் குற்ற விசாரணை பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் மேலும் குறிப்பிட்டனர்.

## தென் மாகாண பாடசாலைகளுக்கு 870 பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம்



**(வெலிகம தினகரன் நிருபர்)**

தென் மாகாண பாடசாலைகளில் நிலவும் சிங்களம் மற்றும் ஆரம்ப பிரிவு ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக முதல் கட்டமாக 870 பட்டதாரிகளுக்கு நியமன கடிதங்கள் வழங்கும் வைபவம் கடந்த (10) வெள்ளிக்கிழமை தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தலைமையில் வெலிகமை நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

தென் மாகாண பாடசாலைகளில் 3230 ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவி வருகின்றது. ஏனைய பாடங்களுக்கான நியமனங்கள் எதிர்வரும் காலங்களில் வழங்கப்படவுள்ளன.

இந் நிகழ்வில் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தென் மாகாண செயலாளர் சட்டத்தரணி சுமித் அலஹக்கோன், தென் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரஞ்சித யாப்பா உட்பட கல்வி அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

### உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றிய நிதியில்

## வட மத்திய மாகாண அலுவலகத்துக்கு உழவு இயந்திரம் வழங்கி வைப்பு



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

வடமத்திய மாகாணத்தில் உள்ள எட்டு நிர்வாக அலுவலகங்களின் நடவடிக்கைகளுக்காக எட்டு உழவு இயந்திரங்கள் ஆளுநர் மஹிபால ஹேரத்தினால் மாகாண சபை வளாகத்தில் வைத்து (10) வழங்கப்பட்டுள்ளது.

எட்டு உழவு இயந்திரங்களயும் கொள்வனவு செய்வதற்கு உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன நிதி வழங்கியிருந்தமை விசேட அம்சமாகும்.

இந்த மாகாணத்தின் அபிவிருத்தி பணி மற்றும் மக்களின் வினைத்திறனை மேம்படுத்துவதே இதன் நோக்கம் என ஆளுநர் தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 மே 13 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.35
லுஹர் - 12.08
அஸர் - 03.28
மஃரிப் - 06.20
இஷா - 07.33

**இன்றைய சுபதினம்**

குரோதி வருடம் சித்திரை 30

ராகுகாலம் : காலை : 7.24 - 8.54வரை
சுபநேரம் : காலை : 11.54 - 1.24வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# பாடசாலை மாணவர் மதிய உணவு தொடர்பில் விஷமப் பிரசாரம்

## சீர்குலைக்க வேண்டாம் என சுசில் வேண்டுகோள்

நாட்டிலுள்ள பாடசாலைகளில் ஆரம்ப தரத்தில் பயிலும் அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கி 17 இலட்சம் மாணவர்களுக்காக 26 பில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாடசாலை மதிய உணவுத் திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த சந்தர்ப்பத்தில் சில அரசியல்வாதிகள் அரசியல் மேடைகளில் சீர்குலைக்கும் கருத்துக்களை தெரிவித்துவருவதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். நாட்டில் உள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்படும் என கூறும் இவ்வாறான அரசியல்வாதிகள் , நடைமுறை எண்ணியல் பகுப்பாய்வை மேற்கொண்ட பின்னரே இவ்வாறான கருத்துக்களை வெளியிட வேண்டும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.



ஜெர்மன் தொழில்நுட்ப நிறுவக மாணவர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட ஆறு மாடிகளை கொண்ட புதிய விடுதி வளாகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கல்வி அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார். இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டில் நிலவிய நிலைமையை கூட்டிக்காட்டிய அமைச்சர், மிகக் குறுகிய காலத்தில் அந்த நிலை முற்றாக மாற்றப்பட்டு நாட்டில் தற்போது சாதகமான சூழல் உருவாகியுள்ளதாக தெரிவித்தார். அதற்காக பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் தொடர்ந்தும் இந்த நிலையை தக்கவைத்துக்கொள்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். முன்னர் இருந்த பேரழிவு நிலையை இன்று பலருக்கு நினைவுகூர வேண்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

முன்னாள் வித்யோதயா, வித்யாலங்கார பிரிவேனாக்களாக செயல்பட்டவை பின்னர் ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் களனி பல்கலைக்கழகங்களாக மாறிய பின்னர், சித்திரவதை மையங்களாகப் பயன்படுத்தப்பட்ட காலகட்டம் இருந்ததாகவும், அதனை தற்போதைய இளைஞர் தலைமுறையினர் புரிந்து கொள்ளவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். பெரும் முயற்சிகளுக்குப் பிறகு உருவாகியுள்ள தற்போதைய சுமுக சூழலை மீளவும் பழைய நிலைக்கு மாற்றக் கூடாது என்றும் அமைச்சர் கூறினார். அதற்கு மக்கள் புத்திசாலித்தனமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



தினகரன்
THINAKARAN
තිනකරන්

**92 வருடங்களுக்கு முன் தினகரன்**

**இன்று 13 மே 1932**



கண்டி லேக் மரண மர்மம்

ஒரு மணி நேரம் வரை கூறப்பெற்ற விதவையின் சாக்ஷியம்

கொலை! கொலை!!

நீதிபதிக்குக் கிடைத்த அநாமதேயக் கடிதங்கள் மேலதிகமான விசாரணை ஒத்திப் போடப்பட்டது

## கண்டி லேக் மரண மர்மம்

### ஒரு மணி நேரம் வரை கூறப்பெற்ற விதவையின் சாட்சியம்

### கொலை! கொலை!!

**நீதிபதிக்குக் கிடைத்த அநாமதேயக் கடிதங்கள் மேலதிகமான விசாரணை ஒத்திப் போடப்பட்டது**

இன்று கண்டிப் போலீஸ் நீதிபதி மிஸ்டர். எஸ்.எப். விக்ரமசிங்கியின் முன்பாக, சொலமன் டீ. சில்வா என்னும் நகை வியாபாரியைக் கொன்றதாக டப்ளியு.பீ. சார்ல்ஸ் என்னும் வாலிப நகை வியாபாரி குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் வழக்கில் மேலதிகமான விசாரணை நடைபெற்றது. இவ் விசாரணையில், இறந்த மனிதனின் மனைவியாகிய மிஸிஸ். ஜனட்.டீ. சில்வா மீளவும் விசாரணைக் கழைக்கப்பட்டு, ஏறக்குறைய ஒருமணி நேரம்வரை சாட்சியம் கூறினாள்.

மேலதிகமான விசாரணை இம்மாதம் 16ந் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

# தனியார் மயப்படுத்தும் வேலைத் திட்டத்தை ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை மக்கள் நலன்கருதி ஒத்திப் போடுங்கள்

## அரசாங்கத்திற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச யோசனை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்கத்தின் தனியார் மயப்படுத்தல் வேலைத்திட்டத்தை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை ஒத்திப் போடுமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்று அது தொடர்பில் அவர் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதுடன் தற்போதைய அரசாங்கம் இடைக்கால அரசாங்கம் என்பதால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் அதிகாரத்திற்கு வரும் தரப்பினருக்கு அரச நிறுவனங்கள், சொத்துக்கள் தொடர்பில் தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தை வழங்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் தற்போதைய அரசாங்கமானது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் பதவிக்காலத்தின் மீதிக் காலத்திற்காக நாட்டை நிர்வகிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட இடைக்கால வேலைத்திட்டமாகும்.

அந்த வகையில் தற்போது அரசாங்கத்தின் வளங்களை அவசரமாக விற்பதானது நாட்டுக்கான சிறந்த பிரதிபலனைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கே இட்டுச் செல்லும். இது தனியார் மயமாக்கலுக்கு ஆதரவான தரப்பினரும் புரிந்து கொண்டுள்ளன விடயமாகும். அத்துடன் ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. அந்த நிலையில் அரச வளங்களை விற்பதற்கு எதிராக நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பகரமான சூழ்நிலையை தவிர்க்கும் வகையிலேயே தாம் இந்த யோசனையை முன் வைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

06

# கொலன்ன பிரதேச செயலாளர் பிரிவு புதிய மகாவலி பிரிவாக பிரகடனம்

## அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி நடவடிக்கை

**லோரன்ஸ்செல்வநாயகம்**



இரத்தினபுரி மாவட்டத்தின் கொலொன்ன பிரதேச செயலகப் பிரிவில் அனைத்து கிராம உத்தியோகத்தர்கள் பிரிவும் (29) மற்றும் எம்பிலிப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளடங்கலாக கொலன்ன பிரதேசம் புதிய மகாவலி பிரிவாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன, வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

கொலன்ன புதிய மகாவலி பிரிவை உத்தியோகபூர்வமாக அறிவித்த பின் அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி அந்த பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்திலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

1981 ஆம் ஆண்டு இலங்கை மகாவலி அதிகாரசபை சட்டத்தின் 3.1 வது பிரிவின் கீழ் வர்த்தமானி இலக்கம் 137 வளவ மகாவலி விசேட அதிகாரசபையில் புதிதாக 47 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்வாங்கப்பட்டு அந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் இதுவரை மகாவலி அதிகார சபையின் கீழ் அந்தப் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் உள்ள கொலன்ன பிரதேசத்தை அபிவிருத்தி செய்யுமாறு

06

# போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் கைது

மட்டக்களப்பு புகையிரத நிலைய வீதியில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டாரென சந்தேகத்தின் பேரில் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு கடற்படை முகாமின் புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கல்லடி முகாமில் உள்ள அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட வைத்தியரின் சிபாரிசின்றி பயன்படுத்தக்கூடாத 1,440 ஆபத்தான போதைப்பொருள் கெப்சூல்களை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இதன் போது கைப்பற்றியுள்ளனர். இந்த போதைப்பொருளை காரில் கொண்டு சென்ற போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 32 வயதுடைய மட்டக்களப்பைச் சேர்ந்தவராவார். மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேலும் தெரிவித்தனர்.

# வலஸ்முல்லை ஆதார வைத்தியசாலை மீது மின்னல் தாக்கி சொத்துக்கள் சேதம்

வலஸ்முல்லை ஆதார வைத்தியசாலையில் கடந்த (10) இரவு பெய்த கடும் மழையுடன் மின்னல் தாக்கத்தினால் வைத்தியசாலைக்கு சுமார் ஐம்பது லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மின்னல் தாக்கத்தினால் வைத்திய சாலையின் அனைத்து மின்சார உபகரணங்களும் எரிந்துள்ளன.

மின்னல் தாக்கத்தினால் ஏற்பட்ட தீயினால் கட்டிடமும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பிலான நிலைமைகளை கண்டறிவதற்காக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று முன்தினம் (11) வைத்தியசாலைக்கு சென்றார்.

இந்த சம்பவம் தொடர்பில் அமைச்சர் மஹிந்த அமரவீர, தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவுடன் தொலைபேசியில் கலந்துரையாடினார்.

அவசர சிகிச்சைப் பிரிவை புனரமைப்பதற்காக தென் மாகாண சுகாதார அமைச்சிலிருந்து நிதி வழங்கப்படும் எனவும், ஆளுநர் வைத்தியசாலையை பார்வையிடவுள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

மின்னல் தாக்கிய போது மூன்று நோயாளிகள் அப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர் என்றும் அவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. ஆனால் தீ விபத்தால், நோயாளிகளை வெளியே கொண்டு வர பெரும் முயற்சி எடுக்க நேரிட்டதாக, ஊழியர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.



கொழும்பு ஜெயந்தி நகர் ஜிந்துபிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் இன்று ஆரம்பமாகும், வைகாசி விசாகத் திருவிழா நிகழ்வில் கலந்து கொள்வதற்காக, இந்தியா தமிழ்நாட்டில் இருந்து "தெய்வத்தமிழிசை அறிஞர்" "திருமுறை கலைக்களஞ்சியம்" "முனைவர்" திருவிடைமருதூர் சிவ.ச.நடராஜதேசிகர் அவர்கள் நேற்று கொழும்பு விமான நிலையத்திற்கு வருகை தந்தார். அவரை ஆலயத்தின் திருஞானசம்பந்த கானசபா சார்பில் எஸ். உலகநாதன், எஸ்.சிங்காரவேலு, ஆகியோர் வரவேற்றபோது எடுத்தபடம். இன்று முதல் 23 ஆம் தேதிவரை வைகாசி விசாகத் திருவிழா நடைபெறும்.

# வெளிநாடு சென்றுள்ள தொழிலாளர்கள் மூலம் நாட்டுக்கு 2 பில்லியன் டொலர் வந்தடைவு

இவ்வருடத்தின் முதல் காலாண்டியில் மாத்திரம் , புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வங்கி மூலம் 2.079 பில்லியன் அமெரிக்க டொலர்களை அனுப்பியுள்ளனர். குறிப்பாக அவர்கள் ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் 543.8 மில்லியன் டொலர்களை அனுப்பி வைத்துள்ளனர் .





கடந்த வருடத்தின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் அந்நியச் செலாவணி 11.4 வீதத்தால் அதிகரித்துள்ளது. அத்துடன் கடந்த வருட ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் 19.7 சத வீதம் அதிகரித்துள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் பின்னர் இதுவரை 10,807 மில்லியன் அமெரிக்க டொலர்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்களால் நாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவர் அமைச்சுப் பொறுப்பை ஏற்கும் போது புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் நாட்டிற்கு அனுப்பும் மாதாந்த அந்நியச் செலாவணித் தொகை 200 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்திருந்தது.

அப்போது நாட்டில் எரிபொருள், மருந்துகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கும் நிலை ஏற்பட்டது.

அதன்படி எரிபொருள், எரிவாயு வரிசைகள் மற்றும் மருந்துப் பற்றாக்குறையை நீக்கி நாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வங்கி முறை மூலம் சட்டப்பூர்வமாக பணம் அனுப்ப 500 மில்லியன் டொலர்களின் பங்குதாரராக இருக்குமாறு அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். அதன்படி முறையாக பணம் அனுப்ப ஊக்குவிக்கப்பட்டது.

நாட்டிற்கு சட்டப்பூர்வமாக பணம் அனுப்பும் புலம்பெயர்ந்த தொழிலாளிகளுக்கு மின்சார வாகன இறக்குமதி உரிமங்களை வழங்கல் , வீட்டுவசதி ,பல்நோக்கு கடன் முன்மொழிவுகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு ஊழியர்களுக்காக விமான நிலையத்தில் "ஹோப் கேட்" என்ற சிறப்பு வாயில் போன்றவைகள் விசேடமாக வழங்கப்பட்டுள்ளன

# நாட்டின் சில பகுதிகளில் மண் சரிவு எச்சரிக்கை

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 100 மில்லிமீற்றர்க்கும் அதிகமான மழை வீழ்ச்சி இடம்பெறும் என்றும் மலைநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக சில பிரதேசங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் சில பிரதேசங்களில் கடந்த 24 மணித்தியாலங்களில் 75 மில்லி மீற்றக்கும் அதிகமான மழைவீழ்ச்சி காணப்படுவதால் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இந்த மண் சரிவு எச்சரிக்கையை விடுத்துள்ளது. அதற்கிணங்க பதுளை, கேகாலை, குருநாகல்_ மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு முதல் கட்ட மண் சரிவு தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.



அதேவேளை, பிற்பகல் வேளையில் நாட்டின் சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அந்த வகையில் மத்திய, சப்ரகமுவ, ஊவா, கிழக்கு மாகாணங்களிலும் பொலனறுவை மாவட்டத்திலும் 100 மில்லி மீற்றர் அளவில் மழை பெய்யக்கூடும் எனவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன் மேல் மற்றும் தென் மாகாணங்கள் புத்தளம், மன்னார் – கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. பொதுமக்கள் இயற்கை அனர்த்தங்களில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 30ஆம் நாள் திங்கட்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 04



## குறள் தரும் சிந்தனை

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு

உயிரும் உடலும்போல் அன்பும்
செயலும் இணைந்திருப்பதே
உயர்ந்த பொருத்தமாகும்.

# நாட்டில் டெங்கு நோய் தலைதூக்கும் ஆபத்து!

தற்போது நாட்டில் மழைக்காலநிலை ஆரம்பித்துள்ளது. பல பிரதேசங்களில் பிற்பகலிலும் மாலை வேளையிலும் இடிமின்னலுடனும் மழை பெய்கிறது.

நாட்டில் கடந்த சில மாதங்களாக நீடித்து வந்த கடும் உஷ்ண காலநிலையைத் தொடர்ந்து மழையுடன் கூடிய காலநிலை தற்போது தொடங்கியுள்ளது.

இம்மழையுடன் கூடிய காலநிலையை எல்லோரும் வரவேற்பதைப் பரவலாக அவதானிக்க முடிகிறது. அந்தளவுக்கு நாட்டில் கடும் உஷ்ணம் நிலவியதே அதற்கான காரணமாகும். தற்போதைய மழையுடன் கூடிய காலநிலை வரவேற்கப்படுவதற்கு அதுவே அடிப்படையாக விளங்குகிறது.

ஆன போதிலும், மழையுடன் கூடிய காலநிலையுடன் சேர்த்து வழமையாக தலைதூக்கும் நோய்கள் குறித்தும் கவனம் செலுத்தத் தவறலாகாது. குறிப்பாக மழைக் காலநிலையுடன் சேர்த்து அண்மைக் காலமாக டெங்கு வைரஸ் காய்ச்சல் தீவிரமடைவது வழமையாகும். ஏனெனில் இக் காய்ச்சலுக்கான காரணி நுளம்பின் மூலம்தான் காவிப் பரப்பக்கூடிய ஒன்றாக உள்ளது. இவ்வைரஸ் சுயமாக பரவவோ தொற்றக்கூடிய ஒன்றோ அல்ல.

அவ்வாறான வைரஸே மனிதனுக்கு உயிராபத்து அச்சுறுத்தல் மிக்கதாக விளங்குகிறது. இவ்வைரஸை காவிப்பரப்பும் நுளம்புகள் மழைநீர் உள்ளிட்ட தெளிந்தநீர் தேங்கும் இடங்களில் முட்டையிட்டு பல்கிப் பெருகக் கூடிய பண்பைக் கொண்டுள்ளன.

குறிப்பாக வீட்டுச் சூழலிலும் சுற்றாடலிலும் காணப்படும் திண்மக்கழிவுப் பொருட்கள் இவ்வின நுளம்புகளின் பெருக்கத்திற்கு பாரிய பங்களிக்கக் கூடியனவாக உள்ளன. அதாவது மழைநீர் தேங்கக்கூடிய வகையில் சுற்றாடலில் காணப்படும் கைவிடப்பட்ட பொலித்தீன் உறைகள், பிளஸ்ரிக் பொருட்கள், மட்பாண்டங்கள், சிரட்டைகள், டயர்கள், யோகட் கப்கள் உள்ளிட்ட பலவகையான கழிவுப் பொருட்கள் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு முறையாகவும் தொடராகவும் அப்புறப்படுத்தி சுற்றாடலை சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்திருப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இது ஒவ்வொருவரும் தம் சமூகப் பொறுப்பாகக் கருத வேண்டிய ஒன்றாகும். இருந்த போதிலும் திண்மக்கழிவுகள் குறித்து அவ்வாறு முக்கியத்துவம் கொடுத்து கவனம் செலுத்தப்படாத நிலையே நீடித்து வருகிறது.

இந்தச் சூழலில் மழை பெய்யும் போது சுற்றாடலில் கைவிடப்பட்டுள்ள திண்மக்கழிவுப் பொருட்களில் மழைநீர் தேங்குகிறது. அதனை தமது பெருக்கத்திற்கு சாதகமாக நுளம்புகள் பயன்படுத்திக் கொள்கின்றன. ஆனால் மழைநீர் தேங்கி நுளம்புகள் முட்டையிட்டு பல்கிப் பெருக முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் பேணிக் கொண்டால் டெங்கு வைரஸை காவிப் பரப்பும் நுளம்புகளின் பெருக்கம் கட்டுப்பாட்டு நிலையை அடைந்து விடும். அப்போது டெங்கு வைரஸ் ஒரு அச்சுறுத்தலாகவே இருக்காது.

அதனால் வீட்டிலும் சுற்றாடலிலும் தேங்கியுள்ள மழைநீர் உள்ளிட்ட தெளிந்தநீர் தேங்குவதற்கான வசதிகளை முழுமையாக அப்புறப்படுவதில் ஒவ்வொருவரும் சிரத்தை எடுத்துக்கொள்ளத் தவறலாகாது.

இ வ்வாறான சூழலில் தற்போது மழையுடன் கூடிய காலநிலை ஆரம்பித்துள்ளதால் டெங்கு வைரஸை காவிப்பரப்பும் நுளம்பினம் பல்கிப்பெருகும் அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது.

அதனால் ஆரம்ப காலத்திலேயே இவ்வின நுளம்புகள் பல்கிப் பெருகக்கூடிய வசதிகளை முழுமையாக அப்புறப்படுத்தி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையில் வைத்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

அதேநேரம் மழைக்காலநிலை ஆரம்பித்திருப்பதால் தற்போதைய சூழலில் காய்ச்சலுடன் கூடிய அறிகுறிகள் தென்பட்டால் அசிரத்தையோடோ கவனயீனமாகவோ நடந்து கொள்ளக்கூடாது. சில சமயம் அது டெங்கு காய்ச்சலாகக்கூட இருக்கலாம்.

அதன் காரணத்தினால் தகுதியான மருத்துவரை அணுகி மருத்துவ ஆலோசனைகளுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ளத் தவறாகாது. இவ்வருடத்தின் முதல் ஐந்து மாதங்களிலும் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் டெங்கு நோய்க்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தத் தரவுகள் கடும் உஷ்ணம் நிலவிய காலப்பகுதியிலும் டெங்கு தாக்கம் காணப்படவே செய்திருக்கிறது என்பது தெளிவாகிறது. அதனால் மழையுடன் கூடிய காலநிலை ஆரம்பித்துள்ளதால் மக்கள் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் நடந்து கொள்வது இன்றியமையாதது. அதுவே இப்போதைய அவசரத்தேவையும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் ஜூன் மாதம் நிறைவேறும்

## 'உலகளாவிய வன்கொடுமை எதிர்ப்பு சைகைகள்' 3 கைமுத்திரைகளை வெளியிடும் நிகழ்வில் ஜனாதிபதி



பொருளாதார நெருக்கடியின் போது குடும்பத்தைக் கவனிப்பதில் பெண்கள் எதிர்கொண்ட சவால்களை தாம் நன்கு அறிவதாகவும், பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் முதன்முறையாக பெண்களை வலுவூட்டும் வகையில் அரசாங்கம் இரண்டு சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குறித்த சட்டமூலங்களை எதிர்வரும் ஜூன் மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இதன் மூலம், ஆண் பெண் சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுதல் தொடர்பான தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்தல், பெண்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழுவை நிறுவுதல், பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையை ஸ்தாபித்தல் மற்றும் பெண்கள் உரிமைகள் மீறப்படுதல்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவும் முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.





பொது இடங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு நிகழும் பாலியல் வன்முறைகளுக்கு எதிரான 'உலகளாவிய வன்கொடுமை எதிர்ப்பு சைகைகள்' 3 கைமுத்திரைகளை வெளியிடும் நிகழ்வு கொழும்பு தாமரைத்தடாக அரங்கில் DP Education ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

"தம்மிக்க பெரேரா ஒரு மாற்றத்தை ஆரம்பித்துள்ளார். பெண்களுக்கு நிகழும் வன்முறைக்கு எதிராக அவர் தொடங்கிய திட்டம் பாராட்டுக்குரியது. DP Education போன்ற செயற்பாடுகள் எதிர்கால கல்வியின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

மேலும் கல்வி காலத்துக்குக் காலம் மாறியது. விகாரை கல்வி முதல் பாடசாலைக் கல்வி வரை மாறுகிறது. இன்று ஸ்மார்ட் வகுப்பறை பாடசாலைக்கு வந்துள்ளது. தம்மிக்க பெரேரா DP Education மூலம் கல்வியின் புதிய பரிமாணத்தை அறிமுகப்படுத்தி, இந்த நிதியத்தின் செலவில் 600 பாடசாலைகளுக்கு வசதிகள் வழங்கியுள்ளார்.

பெண்களுக்கு நிகழும் வன்முறைகளுக்கு எதிராக சைகைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது இன்று இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிரான சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வருகிறோம். பெண்களுக்கு எதிரான வன்முறையை எப்படி நிறுத்துவது என்பதை இந்த கை சமிக்ஞைகள் தெரிவிக்கும். பெண்களின் உரிமைகளை பாதுகாப்பதில் உறுதியாக உள்ளோம். அதை வார்த்தைகளுக்குள் மட்டுப்படுத்த முடியாது. இந்தச் சைகைகள் மூலம் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை சமூகம் உணர்ந்து அதற்கு எதிராகப் போராட முடியும்.

பெண்களை வலுவூட்ட எதிர்பார்க்கிறோம். பெண்கள் வலுவூட்டலுக்கான சட்டம் மற்றும் பாலின சமத்துவச் சட்டம் என்பன பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளன. பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டல் தொடர்பான தேசியக் கொள்கையை அமுல்படுத்துதல், தேசிய மகளிர் ஆணைக்குழுவை நிறுவுதல், பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறிமுறையை நிறுவுதல், பெண்களின் உரிமை மீறல்களுக்கு வழக்குத் தாக்கல் செய்தல் உள்ளிட்ட நோக்கங்களை கொண்டு இந்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் உரிமை பாதுகாப்பு ஆணைக்குழு ஒன்றும் நிறுவப்படவுள்ளது. எந்தப் பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடந்தாலும் அதற்கான தீர்வுகளை ஆணைக்குழு வழங்கும்.

இரண்டு சட்டங்களையும் ஜூன் மாதம் நிறைவேற்ற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலுக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் நான் ஏற்கனவே பிரதமருடன் கலந்துரையாடியுள்ளேன். பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை குறைந்தபட்சம் 25% ஆக அதிகரிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அத்துடன், மாகாண சபைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம்".

DP Education ஸ்தாபகரும் பாராளுமன்ற உறுப்பினருமான தம்மிக்க பெரேரா உரையாற்றுகையில்,

"தம்மிக மற்றும் பிரசிலா மன்றம் 2016 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. கல்வி வளம் மிக்க நாட்டை எப்படி உருவாக்கலாம் என்று சிந்தித்தே இந்த மன்றம் உருவாக்கப்பட்டது. இன்று ஒழுக்கமான பாடசாலை மாணவர்களை உருவாக்குவதற்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க முடிந்துள்ளது. பதினைந்து இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு எங்களால் வசதிகளை செய்து கொடுக்க முடிந்ததுள்ளது. முன்பள்ளிக் குழந்தைகளுக்கான தனித் திட்டத்தையும் நாம் செயல்படுத்தியுள்ளோம்" என்றார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இராஜாங்க அமைச்சர்களான அனுப பெஸ்குவல், லசந்த அழகியவன்ன, அரவிந்த குமார், பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, சஞ்சீவ எதிரிமான்ன, ஏ.எச்.எம். பௌசி, அங்கஜன் இராமநாதன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதி சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான வதிவிடப் பிரதிநிதி குன்லே அதெனி, தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், இராஜதந்திரிகள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# மீண்டும் உயிர்ப்படையும் ரூமஸ்ஸல பொனவிஸ்டா பவளப்பாறை

ரூமஸ்ஸலவில் உள்ள பொனவிஸ்டா பவளப்பாறையின் அழகை மீட்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட, Life to Reef திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. Wildlife and Ocean Resource Conservation (WORC) அமைப்புடன் இணைந்து 2017 இல் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டமானது, சூழல் நிலைபேறான தன்மைக்கான இலங்கையில் முன்னணியில் உள்ள பல்வகைத்துறை கூட்டு நிறுவனமான DIMO நிறுவனத்தின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்.

1998 இற்கு முன், பொனவிஸ்டா பவளப்பாறையானது இயற்கை அழகு நிறைந்த ஒரு கடற்பரப்புச் சூழல் தொகுதியாக அமைந்திருந்தது. 1998 மற்றும் 2016 இல் எல் நினோ போன்ற இயற்கை பேரழிவுகள் அதன் பரப்பளவில் 95% இற்கும் அதிகமான பகுதியை அழிவுக்குட்படுத்தியிருந்தது. இப்பவளப்பாறைத் தொகுதியை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த DIMO நிறுவனம், WORC உடன் இணைந்து இத்திட்டத்திற்கு நிதியளித்தது.

இந்த பவளப்பாறைகளின் மறுசீரமைப்பானது பல படிமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என்பதோடு, இயற்கையாக உடைந்த பவளப்பாறைகள், விசேட சீமெந்துக் கலவையைப் பயன்படுத்தி ஒன்றிணைக்கப்படும் பவளப்பாறை உருவாக்கும் பணியானது நிபுணர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. WORC இனால் சீமெந்து மற்றும் இறந்த பவளப் பாறை துண்டுகளைப் பயன்படுத்தி ஒரு செயற்கை மேற்பரப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு பாறைகளை மீளுருவாக்கம் செய்வதற்கு ஏற்ற மேற்பரப்பு இல்லாததால், சீமெந்து மற்றும் இரும்பு ஆகியவற்றின் ஆதரவுடன், பவளப் பாறைகள் இணைக்கப்பட்டு கடலின் அடிப்பகுதியில் வைக்கப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு புத்தாக்கமான முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், அவற்றை வைப்பதற்காக இந்த செயற்பாட்டில் தொழில்சார் சுழியோடிகள் அல்லாத தன்னார்வம் மிக்கவர்களே ஈடுபட்டுள்ளனர். இங்கு, பவள வளர்ச்சியின் போது ஏற்படக்கூடிய வளர்ச்சி பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக, ஒரே இன பவளப்பாறைகளை இணைக்கவே இரும்பு ஆதரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பவளப் பாறையின் சிறிய துண்டுகளுக்கு உச்சபட்ச பாதுகாப்பை Nursery racks வழங்குவதோடு, உயர் வளர்ச்சியை உறுதி செய்கிறது.





இத்திட்ட செயன்முறையானது, பவளப்பாறைகளை வளர்ப்பதுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், பவளப்பாறைகள் மீது தொடர்ச்சியாக கவனம் செலுத்துவதை அடிப்படையாகக் கொண்டு, பாறைகளை சுத்தம் செய்தல், இறந்த பவளப்பாறைகளை அடையாளம் காணுதல், மீன்பிடி வலைகள், பிளாஸ்டிக் குப்பைகள் மற்றும் பாசிகள் போன்ற அச்சுறுத்தல்களிலிருந்து பவளப்பாறைகளை பாதுகாத்தல் ஆகிய விடயங்கள் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த Life to Reef திட்டத்தின் மூலம், ரூமஸ்ஸல பவளப்பாறையின் உயிர்ப் பல்வகைமைப் பெருக்கத்தில் குறிப்பிடும்படியான அதிகரிப்பு ஏற்பட்டதோடு, WORC இன் கூற்றுப்படி திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட 4 வகையான Butterflyfish மீனினங்கள் தற்போது 13 ஆக அதிகரித்துள்ளன. இந்த Butterflyfish இனத்தின் வளர்ச்சியானது, வாழும் பவளப்பாறைகளின் விரிவாக்கத்தின் விளைவாக ஏற்பட்ட உயிர்ப் பல்வகைமைப் பெருக்கத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். WORC இன் கூற்றுப்படி, எல் நினோ நிலைமைக்குப் பின்னர், Angelfish இனத்தின் ஒரு இனம் மாத்திரமே இருந்துள்ள நிலையில், அது தற்போது 4 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், இந்த திட்டத்தின் விளைவாக, சுமார் 250 வகையான மீனினங்கள் உருவாகியுள்ளன. இந்தத் திட்டமானது 3.5 ஏக்கர் பரப்பளவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 30 வகையான பவளப்பாறைகளை மீளுருவாக்கியுள்ளது. இன்று, சில பவள இனங்கள் 10cm முதல் 15cm வரையான உயரம் வரை வளர்ச்சியடைந்து, பல்வேறு வகையான மீன்களுக்கான வாழ்விடத்தை வழங்குகின்றன. Green Turtles, Loggerhead Sea Turtles, Hawksbill Sea Turtles போன்ற ஆமை இனங்கள் போனவிஸ்டா பவளப்பாறைக்கு திரும்பியமையையும் இந்த திட்டத்தின் மற்றுமொரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். அத்துடன், இங்கு அடிக்கடி தென்படும் மீன் கூட்டங்கள் மூலம், இத்திட்டத்தினால் கடல்வாழ் உயிரினங்களில் சாதகமான தாக்கம் ஏற்பட்டுள்ளமையை அறியலாம்.

இந்த திட்டத்தின் சாதகமான தாக்கமானது, கடல்வாழ் உயிரினங்களுக்கு அப்பால் பொனவிஸ்டா பவளப்பாறையின் ஒப்பிட முடியாத இயற்கை அழகின் காரணமான பிரபலமான சுற்றுலா தலமாகவும் அதனை மாற்றியுள்ளது. இது சுழியோடல் உபகரணத் தொகுதிகளை வாடகைக்கு விடுதல் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு உணவு விற்பனை மூலம் வருமானம் ஈட்டவும் உள்ளூர் சமூகங்களுக்கு உதவுகிறது. இதன் மூலம், பவளப்பாறைகளை பாதுகாப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு சமூகத்தில் ஏற்பட்டுள்ளதுடன், கடல் சூழலை பாதுகாக்கும் கூட்டுப் பொறுப்பையும் சமூகத்தில் ஏற்படுத்த முடிந்துள்ளது.

DIMO நிறுவனத்தின் Life to Reef திட்டமானது, சூழல் பாதுகாப்பிற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகிறது. WORC உடன் ஏற்படுத்தப்பட்ட ஒத்துழைப்புடன், உள்ளூர் சமூகத்தை இந்த திட்டத்தில் ஈடுபடுத்தியதன் மூலம், ஒரு மதிப்புமிக்க பவளப் பாறையை DIMO மீட்டெடுத்துள்ளதோடு மட்டுமல்லாமல், நிலைபேறான எதிர்காலத்தை நோக்கிய சமூகங்களின் கனவுகள் மற்றும் அபிலாஷைகளுக்கும் வலுவூட்டியுள்ளது. அதேபோல் இந்த திட்டமானது, எமது பெறுமதியான சூழல் தொகுதிகளைப் பாதுகாப்பது தொடர்பான கூட்டு நடவடிக்கைக்கான வாய்ப்பை மிகச் சிறப்பாக நிரூபிக்கிறது.

ரிஸ்வான் சேகு மொஹிதீன்...

# மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மருத்துவமனைகளுக்கு ஆளுநர் விஜயம்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரச வைத்தியசாலைகளுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு அங்குள்ள பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி ,போரைதீவுப்பற்று, ஆரையம்பதி மற்றும் அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு வைத்தியசாலைகளுக்கு விஜயம் மேற்கொண்ட அவர், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுடன் அங்கு காணப்படும் அவசர தேவைகள் குறித்து கலந்துரையாடினார்.

மேலும் அங்குள்ள நோயாளிகளிடம் அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை திருப்தி அளிக்கிறதா என்பதையும் கேட்டறிந்தார்.





வைத்தியசாலைகளில் காணப்படும் பிரச்சினைகளை கேட்டறிந்த ஆளுநர் அதற்கான தீர்வினை வழங்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

மாளிகைக்காடு குறூப் நிருபர்...

## மானுடவியல்



164

பிள்ளையார் "அவ்வினைக்கிவ்வினை" என்னும் திருநீலகண்டப் பதிகத்தைப் பாடியருளினார். உடனே அந்நகரவாசிகளுக்கு மாத்திரமேயன்றி, அந்நாளிலே பனிப்பிணி அந்நாடு முழுதுந்தீர்ந்தது. பிள்ளையார் சிலநாள் அங்கெழுந்தருளியிருந்து, பின் அவ்விடத்தை நீங்கி, திருப்பாண்டிக்கொடுமுடி, திருவெஞ்சமாக் கூடல், திருக்கருவூர் என்னுந் தலங்களை வணங்கிக் கொண்டு கொங்கநாட்டைக் கடந்து, சோழநாட்டை அடைந்தருளினார்.

சோழமண்டலத்திலே திருப்பராய்த்துறை, திருக்கற்குடிமலை, திருமூக்கீச்சரம், திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, திருப்பாற்றுறை, திருவெறும்பியூர், திருநெடுங்களம், மேலைத்திருக்காட்டுப்பள்ளி, திருவாலம்பொழில், திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருவெண்ணி, திருச்சக்கரப்பள்ளி, திருப்புள்ளமங்கை, திருநல்லூர், திருக்கருகாவூர், திருவவளிவணனல்லூர், திருப்பரிதிநியமம், திருப்பூவனூர், திருவாவூர் என்னுந் தலங்களை வணங்கிக் கொண்டு, திருவலஞ்சுழியை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்து கொண்டிருந்தார். இருக்குநாளிலே முதிர்வேனிற்காலம் வந்தது. அம்முதிர்வேனிற்காலத்திலே பிள்ளையார் திருவலஞ்சுழியின்றும் நீங்கி, திருப்பழையாறைக்குப் போதற்கு அடியார்கள் உடன் செல்லச் சென்றருளி திருவாறைமேற்றளியை அடைந்து வணங்கி, திருச்சத்திமுற்றத்திற்சென்று, சுவாமி தரிசனஞ்செய்து கொண்டு திருப்பட்டீச்சரத்துக்குப் போகப் புறப்பட்டார். அப்பொழுது வெய்யில் வெப்பத்தைத் தனிக்கும் பொருட்டு, பிள்ளையாருடைய திருமுடியின்மேலே, சிவபூதம் முத்துப்பந்தரை எடுத்து "பட்டீசர் எம்மை விடுத்தருளினார்" என்று சொல்லிற்று. அந்தச் சொல்லும் முத்துப்பந்தரும் ஆகாயத்திலே தோன்ற; பிள்ளையார் திருவருளைத் துதித்து, பூமியிலே விழுந்து நமஸ்கரித்தார். பிள்ளையாருடைய பரிசனங்கள் அந்த முத்துப்பந்தரைக் காம்பிலே பிடித்தார்கள். பிள்ளையார் அந்த முத்துப்பந்தர் நிழற்றச் சென்று திருப்பட்டீச்சரத்தை அடைந்து, சுவாமி தரிசனஞ் செய்தார். பின் அவ்விடத்தினின்றும், நீங்கி, திருவாறைவடதளி, திருவிரும்பூளை, திருவரதைப்பெரும்பாழி; திருச்சேறை, திருநாலூர்மயானம், திருக்குடவாயில், திருநாறையூர், அரிசிற்கரைப்புத்தூர், திருச்சிவபுரம், திருக்குடமூக்கு, திருக்குடந்தைக்காரோணம், திருநாகேச்சரம், திருவிடைமருதூர், திருக்குரங்காடுதுறை என்னுந் தலங்களை வணங்கிக் கொண்டு, திருவாவடுதுறையை அடைந்தார்.



திருவாவடுதுறையிலே சுவாமிதரிசனஞ் செய்து கொண்டிருக்கு நாளிலே, சிவபாதவிருதயர் பிள்ளையாரை நோக்கி, "நான் யாகஞ்செய்தற்கு ஆகுங்காலஞ் சமீபித்தது. அது செய்யும்படி போதற்குப் பொருள் தரல்வேண்டும்" என்றார். பிள்ளையார் அதைக் கேட்டு, திருக்கோயிலிற் சென்று வணங்கி, "இடரினுந்தளரினும்" என்னுந் திருப்பதிகம் பாடினார்.

(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# காரைதீவு கண்ணகை அம்மனின் சடங்கு இன்று ஆரம்பம்





கிழக்கில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மனின் திருக்குளிர்த்தி சடங்கு இன்று திங்களன்று(13) கடல்நீர் எடுத்துவந்து கல்யாணக்கால் நடலுடன் ஆரம்பிக்கின்றது. இச் சடங்கு எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையவிருக்கிறது.

வரலாறு.

'அணியாரங் கற்பிற் அருங்கலமே நல்ல வணிகர் குலத்துதித்த மாதே பணிமணியின் சேர் சிலம்பணியும் செல்வியே காரைநகர் தாயே எமைக் காத்தருள் ' என்கிறது அம்மன் பாடல்..

சேரமன்னனின் அழைப்பின்பேரில் கடல் சூழ் இலங்கை மன்னன் கஜபாகு சென்றான் என்பது வரலாறு . முப்பெரும் விழாவிற்கு சென்ற கஜபாகு மன்னனின் அழைப்பின் பேரில் சேரன் செங்கூட்டுவனின் வழி வந்த சேனாதிராசனின் விதவை மகளான தேவந்தி அம்மையார் தனது மகள் சின்ன நாச்சியாருடன் கதிர்காம யாத்திரை மேற்கொண்டு இலங்கை வந்து கண்டி மன்னரின் விருந்தினராக தங்கியிருந்த சில நாட்களின் பின்னர் யாத்திரையை மேற்கொண்டார்.

அம்மையார் தான் வரும்பொழுது தன்னுடன் பத்தினித் தெய்வத்தின் மூன்று சிலைகளை கொண்டு வந்ததாகவும் அவற்றில் இரு சிலைகள் அகோரவடிவுடையதாகவும் ஒன்று சாந்த சொரூபமான வடிவம் கொண்ட சிலையாகும் என்று கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

அம்மையாரின் யாத்திரை வழியில் ஏறாவூரில் அவர் அவருடைய சிலைகளில் ஒன்றினை ஸ்தாபித்து வழிபட்டார் பின்னர் மீதி இது சிலைகளுடன் காரைதீவு எனும் சைவமும் தமிழும் போற்றப்பட்ட பழம்பெரும் பதியில் வந்து தங்கினார் .தேவந்தி அம்மையார் காரைதீவில் விருந்தோம்பலில் கவரப்பட்டு தங்கியிருந்த வேளையிலே அங்குள்ள வேம்பு மரத்தின் கீழ் தான் கொண்டுவந்த இரு விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்து பூசை வழிபாடு இயற்றினார்.

அந்த காலத்தில் கண்டி அரசனின் ராஜ பிரதிநிதியாகிய வன்னிமை அவரது மனைவி சகிதம் சிங்காரத் தோப்பில் இருந்து யானை மீதேறி நகர்வலம் வந்தார்..அவர் அம்மையாரின் பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டார். .அங்கு வன்னிமையின் மனைவியின் கண்ணொளி மங்க பெற்று அம்மையாரின் வேண்டிக்கொண்டதால் மீண்டும் கண்ணொளி பெற்றமை வரலாறு.

இதற்காக வன்னிமை அங்கு புனித ஆலயத்தை ஸ்தாபித்து அதனை நிர்வகிப்பதற்கு நூற்றி ஒரு ஏக்கர் நெல் காணிகளை நேர் கடனாக வழங்கினார். இதனை 'கண்கண்வெளி' என அழைப்பர். .இன்றும் அது உள்ளது.

கிராமத்தில் தேவந்தி அம்மையாரும் அவரது மகளான சின்ன நாச்சியாரும் வாழ்ந்து வருகையில் அங்கு வாழ்ந்து கொண்டிருந்த குடிமக்களின் பிள்ளைப்பேறு குறைந்துகொண்டு செல்வதனால் இதற்கு காரணமாக அமைந்த அமைந்த பத்தினி தெய்வத்தின் அகோர வடிவத்தை மக்களின் கோரிக்கையின் படி ஜனசந்தடி அற்ற பட்டிமேடு என்னும் கிராமத்தில் தேவந்தி அம்மையார் பிரதிஷ்டை செய்தார் .

அழகு நிறைந்த சின்னநாச்சியார் மீது மையல் கொண்ட இளைஞர்கள் அம்மையாருக்கும் அவரது மகளுக்கும் தொந்தரவு கொடுத்தனர். அதன் காரணத்தினால் சாந்த சொரூபமான பத்தினி தெய்வ விக்ரகத்துடன் தனது மகளுடனும் தம்பிலுவில் என கிராமத்திற்கு இடம் பெயர்ந்து விக்கிரகத்தை வைத்து வழிபட்டு வந்தார்.

இந்நிலையில் காரைதீவு கிராம மக்களுக்கு கொள்ளை நோய் அம்மை நோய் என்பது துயரங்களை கொடுத்தன .இதன் காரணமாக மக்கள் தம்பிலுவில்கிராமத்துக்குச் சென்று தேவந்தி அம்மையாரை மன்றாடி மீண்டும் காரைதீவுக்கு அழைத்து வந்து பத்தினி தெய்வத்தை மீண்டும் பிரதிஷ்டை செய்து அம்மையாரின் வேண்டுகோளின்படி கற்புக்கரசி கண்ணகி குளிர்விக்கும் பொருட்டு பொங்கலிட்டு பெருவிழா எடுத்தனர்.

இப்பெரு விழாவில் கொம்பு முறித்தல் போர்த் தேங்காய் உடைத்தல் தட்டு வசந்தன் போன்ற நிகழ்வு கள் நிகழ்ந்தன என்பது வரலாறு கூறும் செய்திகள் ஆகும்.

பெருவிழா வைகாசித் திங்களில் வருடா வருடம் ஆரம்பிக்கின்றது. முதல் நாள் பட்டயம் கூறுகின்ற நிகழ்வும் இடம்பெற்று வந்தது. அது இம்முறை நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

வைகாசிப்பொங்கல் திருக்குளிர்த்தி குழுத்தி எனும் நாமங்கள் அழைக்கப்பட்டு வந்த இந்த சடங்கு இன்றும் தொடர்ந்து நடைபெறுவது அம்பாளின் அனுக்கிரகமே.திருக்குளிர்த்திபொதுவாக ஈழநாட்டிலுள்ள கண்ணகி அம்மன் ஆலயங்களில் திருவிழா தமிழ் மாத வைகாசி பவுர்ணமியில் இடம் பெறும் .ஆயினும் காரைதீவு மற்றும் வற்றாப்பளையில் கோயில் கொண்டிருக்கும் பத்தினி தெய்வத்தின் திருவிழா வைகாசி பௌர்ணமி திங்கட்கிழமை நடைபெறும். ஆயினும் திங்கட்கிழமை அல்லது வைகாசி பவுர்ணமியில் பௌர்ணமிக்கு அடுத்து வரும் திங்கட்கிழமை நடைபெறுவது மரபாகும்.

கண்ணகி வழக்குரையில்... 'வைகாசித் திங்கள் வருவேன் என்று '...என்று கூறுகின்றது. அதை அடியொற்றி திங்கள் என்பது பௌர்ணமியும் திங்கட்கிழமையும் குறிப்பதாகும்.

காரைதீவு கண்ணகி அம்பாள் ஆலயத்தில் தமிழ் மாதம் வைகாசி திங்கட்கிழமை நடைபெற்று வருவது மரபுவழி வந்ததாகும்.முதல் நாள் நிகழ்வுஇவ்வாலயத்தின் திருவிழாவானது குளிர்த்தி நடைபெறும் திங்கட்கிழமைக்கு முன்வரும் திங்கட்கிழமை அன்று சமுத்திர தீர்த்தம் எடுத்தவுடன் கல்யாண கால் நடுவது உடன் ஆரம்பமாகின்றது. இங்கு கல்யாண காலாக பூவரசம் மரமே தெரிவு செய்யப்படுவது மரபாகும். சமுத்திரத்திலே தீர்த்தம் எடுத்து வரும் பொழுது ஏலவே தெரிவுசெய்யப்பட்ட மெய்யன்பர் ஒருவரின் காணியில் உள்ள பூவரச மரத்தில் உள்ள பூவரசு மரத்தின் கிளையை ஆயுதம் பாவிக்காமல் முறித்து அதனை சமுத்திர தீர்த்தத்துடன் ஆலயத்திற்கு கொண்டு செல்வார்கள். ஆலயத்திலேயே பத்தினி தெய்வத்திற்கு முன்பாக பூவரசு மரககிளையை நட்டு கப்புகனார் கிரியைகள் செய்து கூறை சேலை அணிவித்து ஆலயத்தில் உணர்வு பூர்வமாக நடுவார்கள். அங்கு பூசைசெய்து முதல் நாள் நிகழ்வு நிறைவடையும்.

அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு கல்யாண காலுக்கும் அம்பாளுக்கும் பூஜைகள் நடைபெற்று பின்னர் உடுக்கை அடித்து ஊர் சுற்று காவியம் பக்தர்களால் பாடப்பெறும்.

மறுநாள் புதன்கிழமை தொடங்கி ஞாயிறு வரைக்கும் பகல் ஒரு மணிக்கு அம்பாளுக்கு பூசையும் மாலை 7 மணிக்கு மணிக்கு அம்பாளுக்கு உடுக்கை அடித்து ஊர்சுற்றுக்காவியம் பாடுதலுடன் 5 நாட்களில் நிகழ்வு நிறைவு வரும் .ஐந்து நாட்களிலும் பத்தினி தெய்வத்தின் பகல்பூஜை செய்யும்போது அம்பாளுக்கு சோறும் கறியும் படைக்கப்படும்.

இதனை பச்சை கட்டுதல் என்று அழைப்பார்கள். இவ்வாலயத்தில் அம்பிகை அடியார்களுக்கு வழங்கப்படும் மரபுரீதியான சிறப்பான பிரசாதம் சோறும் கறியும் ஆகும். குளிர்த்திஇறுதி நாளான திங்கட்கிழமை முழு நாளும் பூஜைகள் இடம்பெறுவதில்லை. அன்றைய தினம் பக்தர்கள் நேர்த்திக் கடன்களை செலுத்துவார்கள் ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும் பெண்கள் கற்பூரச்சட்டி எடுத்தும் காவடி எடுத்தும் நேர் கடன்களை செலுத்துவார்கள்.

அன்றைய தினம் பக்தர்கள் உபவாசமிருந்து பத்தினி தெய்வத்திடம் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு வேண்டி விரதம் அனுஸ்டிப்பார்கள்.திங்கள் முழு நாளும் பக்தர்களால் சிலப்பதிகாரக் கதைபாடப்படும்.

இறுதிநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு அம்பாளுக்கு சிறப்பான விசேட பூஜை இடம்பெற்று தொடர்ந்து குளிர்த்திபாடல் பாடி வழிபடுவர்.

பத்தினித் தெய்வமாம் கண்ணகி அம்மனை குளிர்விக்கும் பொருட்டு (குரச்சி) கலயத்தில் மந்திரிக்கப்பட்ட தூய நீரில் வெற்றிலை பாக்கு வாழைப்பழம் தாமரைப் பூக்கள் சிலம்பு அம்மானைக் காய் என்பவற்றுடன் அம்பாளின் தல விருட்சமான வேம்பு மரத்தின் பெறப்பட்ட இலைகளால் பாடல்களின் கருத்துகளுக்கு ஏற்ப கலயத்தில் எடுத்துச்செல்லப்படும் நீர் தெளிக்கபடும்.

அவ்வேளையில் ,எட்டு திசைகளிலும் இருந்து வழிபடும் அம்பிகை அடியார்கள் மீது கலயத்தில் உள்ள தீர்த்தம் வேப்பிலைக் கொத்தால் தெளிக்கப்படும். இறுதியில் குளிர்த்தி பாடல்கள் பாடி முடித்ததும் கப்புகனாரால் மங்கல கீதம் பாடப்பெற்று சிறப்பு பூஜைகள் நடைபெறும்..

குளிர்த்தி முடிவடைந்ததும் பக்தர்களுக்கு தீர்த்தம் வழங்கப்படும்.

எட்டாம் சடங்குகுளிர்த்தி முடிந்து. அடுத்து வரும் திங்கட்கிழமை அம்பாளுக்கு எட்டாம் சடங்கு இடம்பெறும். பிற்பகல் 3 மணியில் இருந்து கிராமத்து மக்கள் அங்கு தனித்தனியாக புதிய நெல்லில் இருந்து பெறப்பட்ட அரிசியை கொண்டு பொங்கலிட்டு நேர்த்தி செய்வார்கள். இது ஆலயத்தின் விசேஷமான அம்சம் என்பதை குறிப்பிடலாம். யாழ் நூல் தந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரையும் சேவையின் சின்னம் சுவாமி நடராஜானந்தாவையும் இந்நாட்டிற்கு ஈன்றளித்த கற்பின் தெய்வம் கண்ணகி தாயை காரைதீவு தமிழ் கிராம மக்கள் குலதெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் வழிபட்டு வருகின்றார்கள்.

விபுலமாமணி **வி.ரி. சகாதேவராஜா**

## சைவ மஞ்சரி

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 87



சமுதாயத்திற்கு நாம் புறம்பாக நடந்து கொள்ளக் கூடாது. அது நன்றி கெட்டத்தனமாகி விடும். இப்பூலக மற்றும் பரலோக வாழ்வு. உடல் மற்றும் ஆத்மா சம்பந்தப்பட்ட வாழ்வு ஆகியவைகளின் மங்கல மயம் உண்டாக நாம் பிறர் நலம் பேணுதல் வேண்டும். பிறருக்காக வாழ வேண்டும்.

இவைகளை புறக்கணிப்பது என்பது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் சீரழித்துவிடும். இந்த தத்துவத்தை அனுபவப் பூர்வமாக உணர்ந்து கொண்ட வியாச முனிவர் பின் வருமாறு கூறுகிறார்.

எவன் ஒருவன், எப்போதும் பிறருக்காக வாழ்கிறானோ. பிறருடைய நலத்தையே விரும்புகிறானோ, அவன் பிறப்பின் பயனை எய்துவான். பரோபகாரம் பிறருக்கு உபகாரம் செய்பவனுக்கு பயம் இருக்காது. அவன் இம்மையிலும் மறுமையிலும் சிறப்பாக போற்றப்படுவான். மனவலிமை மிகும் போது தான் ஒருவன் தன் துணிவை, தன் உணர்வாற்றலை, திறமையை, கலை நுணுக்கத்தை காட்டிட முடியும். வெறும் புத்தி பலத்தால் மட்டும் இது சாத்தியமாகாது. இதயம் மற்றும் இதயத்தின் உணர்ச்சி வெளிபாடு மனிதனுக்கு மட்டுமல்லாமல் மற்ற ஜீவராசிகளுக்கு உண்டு. மனவலிமையை போல். வாழ்வில் வெற்றிக் கொள்ள சில நற்பண்புகள் உள்ளன. அவையாவன அன்பு. நன்னடத்தை, நற்குணம், சிரத்தை, பக்தி, ஈடுபாடு, உண்மை முதலியன.

படித்தவன் நற்பண்புகள் கொண்ட இதயமில்லாதவனாக இருந்தால் அவனுக்கு செல்வம், வெற்றி. புகழ் என பல இருந்தாலும் வாழ்வில் அவன் துன்பப்பட்டுக் கொண்டு தானிருப்பான். அதே வேளையில் பிறரிடம் அன்பு பாராட்டுபவன். சகோதர பாசம், தாய்பாசம், புத்திர பாசம் நம்பிக்கை, உண்மை நட்பு ஆகிய நற்பண்புகளுடன் விளங்கும். ஒருவன் படிக்காதவனாக இருந்த போதும், அவன் ஏழையாக இருந்தாலும், அவனது வாழ்வில் சுகம் நிறைந்து காணப்படும். படிக்காத பலருடைய வாழ்க்கை, குடும்ப ரீதியாகவும், தாம்பத்ய ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் இன் சுவை நிறைந்து காணப்படுகிறது. அறிவு. புத்தி பலம் என்றால் அன்பு, கருணை. நற்பண்பு, பக்தி, ஈடுபாடு நட்பு, நம்பிக்கை, உண்மை இவை யாவும் மனோபலமாகும்.

புத்தி பலத்தை விட மனோபலம் சிறந்தது. இவையெல்லாவற்றையும் ஒன்று படுத்தி அதற்கு வித்யா என சான்றோர்கள் பெயரிட்டுள்ளனர். தற்காலத்து கல்விமுறை இந்த 'வித்யாவில் அடங்காது. வாழ்வில் முன்னேற வித்யா அவசியம்.

## இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நாட்டு விழா





கண்டி, மகியாவ அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின் மூன்று தள இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டு விழா எதிர் வரும் 23ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை 10.30 மணிக்கு நடைபெற இருக்கின்றது. இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரும் அழைக்கப்படுகின்றார்கள். (தகவல்: மு. தீபன்)

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**20031) சைவ சமயத்தில் கடவுள் கொள்கைகளையும், சிவ வழிபாட்டு முறைமைகளையும் விளக்கிக் கூறுகின்ற முதன்மையான நூல்கள் எவை?**

வேதங்கள், சிவ ஆகமங்கள் (பிரமாணங்கள்) ஆகும்.

**20032) வேதங்கள் எத்தனை?**

நான்கு

**20033) நான்கு வேதங்களும் எவை?**

ரிக், யசுர், சாமம்,அதர்வணம்

**20034) சிவ ஆகமங்கள் எத்தனை?**

28 ஆகும்.

**20035) வேத, சிவ ஆகமங்கள் யாரால் அருளிச் செய்யப் பெற்றவை?** சிவபெருமானால்

**20036) இதனை, "வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்று யார் குறிப்பிடுவார்?** திருமூலர்

**20037) வேதங்கள் நான்கும் எதைப்பற்றிக் கூறுகின்றன?**

இந்து சமயத்தின் கொள்கைகளை

**20038) ஆனால் சிவ ஆகமங்கள் எதைப்பற்றிக் கூறுகின்றன?**

சைவ சமயத்தின் நெறிமுறைகளை மட்டும் கூறுகின்றன.

**20039) சிவாகமங்களில் என்னென்ன கூறப்பட்டுள்ளன?**

கடவுளின் இயல்புகள், கடவுள் ஆன்மாவிற்குச் செய்யும் அருள்நிலை, கடவுளை வழிபடும் முறைகள், வழிபடும் இடங்களின் அமைப்புகள், கடவுள் திருவுருவங்களின் அமைப்புகள், திருக்கோயில்களில் நடக்கும் சடங்குகளின் வகைகள், அவைகளை நடத்தும் முறைகள், வழிபடுவோர்க்குரிய இயல்புகள், சைவச் சாதனங்கள் ஆகியவை விரிவாக விளக்கப்படுகின்றன.

**20040) வாகனம் புறப்படும் போது சக்கரத்தின் அடியில் எலுமிச்சம்பழத்தை நசுக்குவது ஏன்?**

பயணத்திற்கு உதவும் வாகனம் விபத்திற்குள்ளாகும்போது ஆபத்தில் முடிகிறது. சில உக்கிர சக்திகளால் இந்த விபரீதம் நிகழ்கிறது. எனவே, அவற்றை திருப்தி செய்ய எலுமிச்சம்பழத்தை நசுக்குதல்,

**20041)** எலுமிச்சம்பழத்தை நசுக்குதல் போல் வேறு என்ன செய்யப்படும்?

பூசணிக்காய் உடைத்தல்

## சைவ மங்கையர் வித்தியாலய மாணவ தலைவியர் ஒன்றியத்தின் இலவச மருத்துவ முகாம்







நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி.வசந்தகுமார்

கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய மாணவ தலைவியர் ஒன்றியம் 2024 ஏற்பாடு செய்த "MELIOR" இலவச மருத்துவ முகாம் அண்மையில் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த நேபொட பகுதிகளிலுள்ள அரபலாகந்த பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்த மருத்துவ முகாமில் நெபொட பகுதியிலுள்ள 09 பெருந்தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 750 கலந்து கொண்டு பலன் பெற்றனர். கண், தோல், பல், மகப்பேறு, இரத்த பரிசோதனை செய்து பல நோய்களுக்கு மருந்துகளும் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாட்டை கணபதி அறநெறி பாடசாலை பொறுப்பாளர் ஆர். தனராஜ், அரபலாகந்த பாரதி தமிழ் மகா வித்தியாலய அதிபர் கே. இராஜரட்ணம் செய்துள்ளதால், இந்த செயற்பாடுகளுக்கு அனுசரணைகளை சைவ மங்கையர் அதிபர் அருந்ததி இராஜ விஜயன் தலைமையில் விசேட வைத்திய நிபுணர்கள் வைத்தியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்த மருத்துவ முகாம் மூலம் பலர் நன்மையடைந்துள்ளனர். இம்மாதிரியான மருத்துவ முகாமை மலையக பெருந்தோட்ட மக்களுக்கு செய்ததையடுத்து கலந்து கொண்ட மக்கள் கருத்து கூறுகையில், சைவ மங்கையர் வித்தியாலய மாணவ தலைவியர் ஒன்றியத்துக்கும் அப்பாடசாலை அதிபருக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் இதில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

# வாகன இறக்குமதிக்கு அடுத்த வருடத்தில் அனுமதி

## அரசு எதிர்பார்த்துள்ளதாக அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்கமானது வாகன இறக்குமதிக்கான நடவடிக்கைகள் அடுத்த வருடம் முதல் மீண்டும் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், வாகன இறக்குமதி தொடர்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அதனை கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மாத்திரம் வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி வழங்குவதாக தெரிவிக்கப்படும் கூற்றுக்கள் உண்மைக்குப் புறம்பானவை. அவ்வாறு வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவதில்லை.

சுற்றுலாத்துறை மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு முக்கியமாக தேவைப்படும் வாகனங்களுக்கு மாத்திரமே இதுவரை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்வதற்காக பொருளாதார செயன்முறை மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு மட்டுமே இதுவரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தனியார் உபயோகத்திற்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கே தற்போது இறக்குமதி கட்டுப்பாடு நிலவுகின்றது. அந்த வகையில் அடுத்த வருடத்தில் இந்த கட்டுப்பாடுகளை தளர்த்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. எனினும் படிப்படியாகவே இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் எவரும் எத்தகைய காரணங்களைக் கூறினாலும் நாட்டில் தற்போதுள்ள பொருளாதார வேலைத்திட்டத்தை தவிர்த்து வேறு மாற்று வலிகள் எதுவும் கிடையாது என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு...

அலி சப்ரி தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், உள்ளக பொறிமுறையின் மூலம் ஒருபோதும் தீர்வு கிடைக்காது என்றும், ரோம் சட்டத்திற்கமைய அரசாங்கம் செயற்பட வேண்டும் என்றும் அண்மையில் பாராளுமன்றில் வலியுறுத்தி இருந்தார். எதிர்வரும் 19ஆம் திகதியுடன் யுத்தம் நிறைவுபெற்று 15 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

இவ்வாறானதொரு நிலையில் பொறுப்பு கூறல் விடயத்தில் அரசாங்கத்தின் கடப்பாடு தொடர்ந்தும் விமர்சனத்துக்குட்பட்டதாகவே காணப்படுகிறது.

இது தொடர்பில் தெளிவுபடுத்தும் போதே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. காணாமல் போனோர் அலுவலகத்தில் சென்று தமது உறவுகளை இழந்த மக்கள் அவர்களை தேடித்தருமாறு கோருகின்றனர். அதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். ஆனால் அந்த பொறிமுறையை உருவாக்குவதற்கான பொறுப்பினை சர்வதேசத்துக்கு வழங்க முடியாது.

## போலித் தேசிய மாயை...

என்னால் தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார். தென்மராட்சி பிரதேசத்தை உள்ளடக்கிய கட்சியின் பொறுப்பாளர்கள் வட்டார செயலாளர்கள் வட்டார நிர்வாக உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்களுடனான சந்திப்பு நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் சாவகச்சேரியில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைமுறைச் சாத்தியமான வழிகள் தொடர்பில் எமது கட்சி தெளிவாக இருக்கின்றது. ஆனால் இவ்விடயத்தில் எமது கட்சி இருப்பதை விட மக்களும் தெளிவாக இருக்க வேண்டும். குறிப்பாக நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் அனுர குமார திசாநாயக்க ஆகிய மூன்று வேட்பாளர்கள் பிரதானமானவர்களாக காணப்படுகின்றார்கள். இந்த மூவரில் ஒருவருடன் கலந்துரையாடி எமது வாக்குகளை உங்களுக்குத் தரலாம். எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்று பேரம்பேசலைச் செய்து கலந்துரையாடினால்தான் ஒரு ஆரோக்கியமான சூழல் உருவாகும்.

## மலையக மக்களுக்கு நன்மை...

ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் இடம்பெற்ற காப்பு, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குப்படுத்தல்),( திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்ட விடயங்களை அடிப்படையாக வைத்து உரையாற்றுகையிலேயே மனோ கணேசன் எம்பி இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்களைக் கொண்டு எமது மக்களின் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றன. பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது.

பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் சபையில் தெரிவிக்கப்படும் விடயங்களை உன்னிப்பாக அவதானித்தேன். அவை கற்பனைக் கதைகள் என நான் குறிப்பிடவில்லை. எமது மக்களுக்கு நல்லது நடக்குமாயின் நாம் அதனை எதிர்க்கப் போவதில்லை. முழுமையாக அதற்கு ஆதரவு வழங்குவோம்.

## SLFP தலைமை பதவியிலிருந்து...

நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நடைபெற்றுள்ளது. அந்த கூட்டத்தின் போதே இந்த இராஜினாமா உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.அந்தவகையில்வெற்றிடமாகவுள்ளஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவிக்கு நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவை நியமிப்பதற்கு கட்சியின் நிறைவேற்றுக் குழு இதன்போது ஏக மனதாக தீர்மானித்ததையடுத்து இந்த வைபவத்தின் போது அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அந்த வகையில் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக கீர்த்தி உடவத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை வகிப்பதைத் தடை செய்து நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அதனையடுத்து அவர் நேற்று தமது தலைவர் பதவியை உத்தியோகபூர்வமாக ராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழரசுக் கட்சியின்...

தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு, கட்சியின் புதிய நிருவாகத் தெரிவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக நிகழ்ச்சி நிரலிடப்பட்டுள்ளது.

முன்னதாக, ‘மக்கள் மனு’ கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் மாவை சேனாதிராஜா, சரவணபவன் மற்றும் கிழக்கு மாகாண அங்கத்தவர்களான அரியநேத்திரன், ஸ்ரீநேசன் போன்றவர்கள் பங்கேற்றிருந்தனர். இவர்கள் கொள்கை அளவில் பொதுவேட்பாளர் விடயத்தினை ஆதரித்திருந்ததோடு கட்சி ரீதியாக தீர்மானம் எடுப்பதற்கு 14 நாட்கள் கால அவகாசம் கோரியிருந்தனர்.

இதேவேளை, தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிறீதரன் தவிர ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் பொது வேட்பாளர் விடயத்திற்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். கலையரசன் கட்சி எந்த முடிவினை எடுக்கின்றதோ அதற்கு கட்டுப்படுவதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் பொதுவேட்பாளர்...

உருவாகும் என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கு வடக்கில் உள்ள ஓரிரு கட்சிகள் முன்னெடுத்துவரும் முயற்சி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் ஆனந்தகுமார் மேலும் கூறியதாவது,

இலங்கையிலேயே இனவாதமற்ற, மதவாதமற்ற கட்சியென்றால் அது ஐக்கிய தேசியக் கட்சியாகும். அனைத்து இன மக்களும் ஓரணியில் திரளக்கூடிய கட்சியாகவும் அக்கட்சி திகழ்கின்றது. ஐ.தே.கவின் தற்போதைய தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ‘ஸ்ரீலங்கா பெஸ்ட்’ என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்படுபவர். அவரிடம் இனவாதம், மதவாதம் கிடையாது, அனைவரும் இலங்கையர்கள், அனைவருக்கும் சம உரிமைகள் உண்டு என்ற உறுதியான நிலைப்பாட்டில் செயற்பட்டு வருகின்றார் என அவர் தெரிவித்தார்.

## பாராளுமன்றம் இன்று...

கடந்த வியாழக்கிழமை (09) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய இன்று காலை 9.30 மணிக்குபாராளுமன்றம் கூடவுள்ளதுடன், காலை 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணிவரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான இரண்டு ஒழுங்குவிதிகள், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல், பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள், நிதிச் சட்டத்தின் கீழான இரண்டு கட்டளைகள், அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழான நான்கு ஒழுங்குவிதிகள், ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான ஆறு தீர்மானங்கள், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளை, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் என்பன விவாதத்தின் பின்னர் நிறைவேற்றப்படவுள்ளதுடன், ஜெயா கென்டெய்னர் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் (2022)ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை விவாதமின்றி நிறைவேற்ற சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம், சர்வதேச தேரவாத நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம், சவீர மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம், களனி பௌத்த பெண்கள் அறக்கட்டளை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் என்பன பரிசீலனைக்காக ஆற்றுப்படுத்தப்படவுள்ளன.

மாலை 5.00 மணி முதல் 5.30 மணிவரை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணைக்காக (அரசாங்கம்) நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாளை காலை 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.30 மணிவரை எதிர்க்கட்சியால் கொண்டு வரப்படும் பலஸ்தீன விவகாரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

## எதிர்வரும் வருடமும்...

உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். ஏற்றுமதி பொருளாதாரத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை விரைவான அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்வதற்கு நான்கு பிரதான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவித்த ஜனாதிபதி, மத்திய வங்கியை சுயாதீனமாக செயற்பட அனுமதிக்கும் மத்திய வங்கிச் சட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், அரச கடன் முகாமைத்துவ சட்டம், அரச நிதிச் சட்டம், பொருளாதார பரிமாற்றச் சட்டம் உள்ளிட்ட சட்டமூலங்கள் இந்த ஜூன் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார். நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு இந்த புதிய சட்டங்களை நிறைவேற்ற அனைவரின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் இந்த நாட்டிற்கு கடன் வழங்கிய ஏனைய நாடுகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள சகல நிபந்தனைகளும் எதிர்காலத்தில் சட்டமாக கொண்டுவரப்படும் என்றும் தெரிவித்தார். இந்தச் சட்டங்களை நறைவேற்றுவதிலே நாட்டின் எதிர்காலம் தங்கியிருப்பதாகவும் அதற்காக அனைத்து தரப்பினரின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி கூறினார். நாடு பொருளாதார ரீதியாக ஸ்திரமற்ற நிலையில் இருந்த போது, நாட்டை மீட்பதற்காக அனைத்து தரப்பு மக்களையும் ஒன்றிணைத்து அரசாங்கத்தை உருவாக்கியதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அந்த வேலைத்திட்டம் இன்று வெற்றியடைந்துள்ளதாகவும், புதிய சட்டங்களை நிறைவேற்றி நாட்டின் எதிர்கால பொருளாதார வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டுமெனவும் வலியுறுத்தினார். எதிர்காலத்தில் நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக அதிகளவான நிதியை ஒதுக்க வேண்டியிருக்கும் என குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய பொருளாதார வேலைத்திட்டத்தின் ஊடாக மாத்திமே இதனை செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.தாதியர் சேவையின் ஸ்தாபகரான புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மே 12 அன்று சர்வதேச தாதியர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு சர்வதேச தாதியர் தினத்தின் கருப்பொருள் 'நமது தாதியர்கள் நமது எதிர்காலம், தாதியர் சேவையின் பொருளாதார சக்தி' என்பதாகும்.

## ரியூசன் ஆசிரியர்...

வினாத்தாளை விடுவித்துள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கண்டியில் கைது செய்யப்பட்ட மேற்படி டியூஷன் ஆசிரியரின் ‘வட்ஸ் அப்’ குறுப்பில் 1,025 பேர் அங்கத்தவர்களாக உள்ளனர் என்பதும் விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட டியூசன் ஆசிரியர் ஹசலக்க பிரதேசத்தில் தனியார் டியூசன் வகுப்புகளை நடத்தும் ஆசிரியர் என்றும் அவர் மஹியங்கனை புஹூல்யாய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள ஆசிரியரின் தாயார் ஹசலக பிரதேசத்தில் பிரதான கல்லூரி ஒன்றின் முன்னாள் அதிபர் என தெரிய வருவதாகவும் ஆசிரியர் மற்றும் அவரது தாயார் ஆகியோருக்குச் சொந்தமான இரண்டு கையடக்கத் தொலைபேசிகளையும் பொலிசார் கைப்பற்றியுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அரசின் ஒருநாள் வருமானம்...

தொடர்பில் அந்த விவாதம் அமையவேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். 2018 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த 1600 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ள்ளார். இத்தகைய நிலையில் அனைத்து அரசியல் கட்சிகள், அனைத்து அரசியல் தலைவர்கள், தேர்தலை கோருபவர்கள், தேர்தலை அறிவிக்க எதிர்பார்த்துள்ளவர்களும் அது தொடர்பில் மிகுந்த அவதானத்தை செலுத்தவேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். தாம் இவ்வாறு குறிப்பிடுவது 2023 ஆம் ஆண்டின் நிலைமை தொடர்பிலேயே என குறிப்பிட்டுள்ள அமைச்சர், 2024 ஆம் ஆண்டு தொடர்பில் குறிப்பிடும் போது நாட்டின் சுதந்திரத்தின் பின்னர் பல வருடங்களில் இருந்துள்ள நிலைமையே அதுவாகுமென்றும் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் ஒருநாள் வருமானம் 842 கோடியாகவுள்ள நிலையில் செலவு 1467 கோடி ரூபாவாக காணப்படுவதாகவும், அந்த வகையில் ஒரு நாளில் செலவிடவேண்டிய 625 கோடிரூபா குறைவாகக் காணப்படுவதாகவும் அமைச்சர் மேலும்தெரிவித்துள்ளார்.

## பலஸ்தீனத்திற்கு ஐ.நா...

ஆதரவாக 143 நாடுகளும், இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட ஒன்பது நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. இந்த வாக்கெடுப்பில் 25 நாடுகள் கலந்து கொள்ளவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பலஸ்தீனம் அந்த அமைப்பின் முழு உறுப்பினர் உரிமையைப் பெறாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறுப்புரிமை வழங்குவதற்கான முடிவை ஐநா பாதுகாப்பு பேரவை மட்டுமே எடுக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபைக்கான இஸ்ரேலின் நிரந்தரப் பிரதிநிதி, குறித்த பிரேரணைக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இதனிடையே, பலஸ்தீன மக்களுடன் ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில், ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெறுவதற்கான பலஸ்தீனத்தின் விண்ணப்பத்திற்கு ஆதரவாக இலங்கை வாக்களித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

## போலி கடவுச்சீட்டு...

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளனர் . இவர்கள் இருவரும் போலி கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தியதால், அவர்களைக் கைது செய்ய கட்டுநாயக்க விமான நிலைய குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதனையடுத்து, அவர்களிடம் நடத்திய விசாரணையில், இந்த கடவுச்சீட்டைத் தயாரித்த நபர் தற்போது நீர்கொழும்பில் உள்ள சுற்றுலா விடுதியில் தங்கியிருப்பது தெரியவந்துள்ளது. குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரிகள் அந்த விடுதியை சுற்றிவளைத்து அந்த நபரைக் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் என்பதுடன் இவரிடமிருந்து 07 போலி இலங்கை கடவுச்சீட்டுகள், 5 கனேடிய வதிவிட விசாக்கள் என்பன குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## கடும் உஷ்ண நிலையால்...

என அறிவுறுத்தல் வழங்கியுள்ள அவர், உடனடியாக பொருத்தமான மருத்துவரிடம் அதனை காண்பித்து உரிய சிகிச்சைகளை பெற்றுக் கொள்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறான சில தோல் வியாதிகள் தொடர்பில் பொருத்தமான மருத்துவ சிகிச்சை கட்டாயமாகும் என்பதை தெரிவித்துள்ள அவர், அதிக சூரிய ஒளி படும் இடங்களில் தரித்திருப்பதே இந்த நோய் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் என்றும் அவ்வாறு தரித்திருப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறான சரும நோய் சிறு பிள்ளைகளின் முகத்தில் ஏற்பட வாய்ப்புண்டு முகத்தில், உடலில் குறிப்பாக கைகளின் இடுக்குப் பகுதியில் வெள்ளை நிறத்தில் அதற்கான சில அடையாளங்கள் காணப்படலாம்.

# இன்றைய பலன்கள்

(13.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்** :
பொதுவாழ்வில் இருப்பவர்கள் நிதானமாக செயல்படுவது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்கள் கணக்கு வழக்குகளில் கவனமாக இருக்க வேண்டும்.

**ரிஷபம்** :
எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு போட்டிகளுக்கு மத்தியில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்** :
ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் ஆதரவு பெருகும்.

**கடகம்** :
வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களால் பிரச்சனைகள் வரலாம்.

**சிம்மம்** :
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு ஓய்வில்லாமல் உழைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கன்னி** :
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். வியாபாரம் தொழில் செய்பவர்கள் எதிர்பார்த்த இலக்கை அடைவர்.

**துலாம்** :
பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பிறருக்கு பொறுப்புச் சொல்வதால் பிரச்சினைகள் வரலாம். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வேண்டிய முதலீடுகள் கிடைக்கும்.

**விருச்சிகம்** : பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முன்னேற்ற பாதையை நோக்கி அடியெடுத்த வைப்பர். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு கணிசமான தொகை கைகளில் புரளும்.

**தனுசு** :
வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு ஆலோசனை கைகொடுக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் மட்ட அதிகாரிகளால் நன்மை கிடைக்கும்.

**மகரம்** :
விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். தொழில் சீராக நடைபெறும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முக்கிய பிரமுகர்களின் சந்திப்பால் முன்னேற்றம் கிடைக்கும்.

**கும்பம்** :
பொழுது பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புது முயற்சிகளை யோசித்து செய்வது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு தொழில் போட்டி அதிகரிக்கும்.

**மீனம்** :
தன விரயம் அதிகரிக்கும். அதனால் பொது உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயிர் அதிகாரிகள் முக்கியத்துவம் கொடுப்பர்.

## கொலன்ன பிரதேச ... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பிரதேச மக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் சமூகத் தலைவர்கள் விடுத்த கோரிக்கைகளை கருத்திற் கொண்டு மகாவலி பெருந்திட்டத்தின் பிரகாரம் உடவலவ நீர்த்தேக்கத் திட்ட சமூகத்திற்கான நன்மைகளை விரிவுபடுத்தும் வகையில் வளவ மகாவலி திட்ட மேற் பகுதி 40 வருடங்களின் பின்னர் இவ்வாறு அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதித் தேர்தல்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

அதற்கிணங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் புதிய அரசாங்கம் உருவாக்கப்படும் வரை அரசாங்கத்திற்கு சொந்தமான வளங்கள் மற்றும் நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் இடைநிறுத்துமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி புதிதாக தெரிவு செய்யப்படும் அரசாங்கத்திற்கு கிடைக்கும் மக்கள் ஆணைக்கு இணங்க அரச வளங்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, தாம் ஜனாதிபதியாக பதவி வகித்த ஒன்பது வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் அரசாங்கத்திற்கு சொந்தமான எந்த வளங்களையும் விற்பனை செய்யவில்லை என்றும் அதற்குப் பதிலாக அதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள் விற்பனை செய்த இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், லங்கா ஹொஸ்பிடல்ஸ் போன்ற நிறுவனங்களை மீண்டும் அரசாங்கத்திற்கு சுவீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நிகழ்ச்சியில் இன்று...

பிரியங்க துனுசிங்க மற்றும் மத்திய வங்கியின் உயர்மட்ட பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர். தொரமடலாவ நேரடி கலந்துரையாடல் நிகழ்ச்சியை கலாநிதி ஹசந்த ஹெட்டியாரச்சி தொகுத்து வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசாங்க ஊழியர்களுக்கு...

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், தாய்லாந்து அரசரின் பிறந்த தினத்தை முன்னிட்டு தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான வரலாற்று சமய மற்றும் கலாசார உறவுகளை மேம்படுத்துவதே அதன் நோக்கம் என தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆண்டு இலங்கையில் பௌத்த சமூகத்தினருக்காக விசேட தற்காலிக வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தாய்லாந்து அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

## சலுகை விலையில்...

உணவுப் பொருட்களுக்கான முன்பதிவுகளை பதிவு செய்யுமாறு சதொச நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர்...

வருகை தரவுள்ளார். இந்நிலையில் குருஜியின் அதிதியாக பெங்களூர் சென்றிருந்த அமைச்சர், அவரை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைவரம், மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் நகர்வுகள் பற்றி குருஜிக்கு அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார். அதேபோல பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் பற்றியும் விவரித்துள்ளார். மலையக சமூக மாற்றத்தில் இது முக்கிய திருப்பமாக அமையுமென அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வாழும் கலை நிறுவனத்தின் கீழ், பிரஜா சக்தி, தொண்டமான் அறக்கட்டளை போன்றவற்றின் ஊடாக எமது மக்களுக்கு தொழில் பயிற்சி, தொழில் மேம்பாடு மற்றும் புத்தாக்க வாய்ப்புகள் பற்றி ஆராயுமாறு இதன்போது அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேபோல நீர்வளத்துறை பற்றியும் இருவருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்பின் போது இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக சமூகத்தைச் சேர்ந்த செல்லையா கோபாலன் என்ற கலைஞர் வரைந்த ஓவியத்தை குருஜியிடம் அமைச்சர் நினைவு பரிசாக வழங்கினார்.




மத்திய மாகாணத்தில்

# பட்டதாரி ஆசிரியர்களாக 176 பேர் புதிதாக நியமனம்

**அக்குறணை குறூப் நிருபர்**

மத்திய மாகாணத்தில், பட்டதாரி ஆசிரியர்களாக 176 பேர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி, பல்லேகலையில் அமைந்துள்ள மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற வைபவத்தின் போது இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேயினால் கையளிக்கப்பட்டது.

சிங்கள மொழி மூலம் 127 பேருக்கும், தமிழ் மொழி மூலம் 43 பேருக்கும், ஆங்கில மொழி மூலம் 06 பேருக்கும் இந்நியமனங்கள் வழங்கப்பட்டன.

க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் காணப்பட்ட கணிதம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், வியாபார சந்தைப்படுத்தல் முகாமை, வெளிநாட்டு மொழிகள் போன்ற பாடங்களில் காணப்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இந்நியமனங்கள் வழங்கப்பட்டன. அங்கு உரையாற்றிய ஆளுநர் ஆசிரியர் தொழில் என்பது மற்றைய தொழில்கள் போன்றதல்ல. எதிர்கால சந்ததியை உருவாக்கப் பங்களிப்பு செய்யும் ஒரு கௌரவ சேவையாகும். எனவே அதனை மிகுந்த அர்ப்பணிப்புடன் செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் மாகாண பிரதான செயலாளர் அஜித் பிரேமவன்ச, ஆளுநர் செயலாளர் மஞ்சுலா மடஹபொல, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மேனகா ஹேரத், மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர் குமுதினி எஸ். பிரேமசந்திர, மாகாண கல்விப் பணிப்பாளர் அமரசிரி பியதாச உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



## அஹதியா பாடசாலைக்கு போட்டோ பிரதி இயந்திரம்



கண்டி, தெல்தெனிய கும்புக்கந்துறை அஹதியா பாடசாலை மாணவர்களது நலனுக்காக இலகு போட்டோ பிரதி எடுத்தல் இயந்திரம் ஒன்று (portable photocopy machine) கிராமத்தைச் சேர்ந்த எம். ரவுஸ்தீன் என்பவரால் அன்பளிப்பு செய்யப்பட்டது. அவரது மகள் அதனை அஹதியாப் பாடசாலை நிர்வாகப் பொருளாளர் தேசமான்ய எஸ்.ஏ. ஹனீப் மற்றும் நிர்வாகிகளிடம் கையளித்த போது எடுக்கப்பட்ட படம்.

அக்குறணை குறூப் நிருபர்

## தந்தை போதையில் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மகன்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

துப்பாக்கியால் தனது மகனை சுட்ட தந்தையைப் பொலிஸார் தேடி வருகின்றனர். சூரியவெவ வெவே கம பிரதேசத்தில் நேற்று முன்தினம் தினம் (11) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருமணம் செய்து வேறாக வசித்து வந்த தனது மகனின் வீட்டுக்குச் சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்ட தந்தை, வாக்குவாதம் முற்றவே தனது கையிலிருந்த துப்பாக்கியால் மகனை நோக்கிச் சுட்டுள்ளார். மகன் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தந்தை தலைமறைவாகியுள்ளதாகவும் அவரைத் தேடி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தொழிற்சங்கங்கள் தமது அங்கத்தவர்களை வீதியில் இறக்கி சாதித்தது எதுவுமில்லை

'ஜாதிக பலய' அமைப்பின் ஊடக பேச்சாளர் தெரிவிப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**

தொழிற் சங்கங்கள் தமது அங்கத்தவர்களை வீதியில் இறக்கி சாதித்தது எதுவுமில்லை. எனவே நாம் சேவையில் ஈடுபட்ட வண்ணம் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண 'செங்கடகல பிரகடனம்' என்ற ஒன்றை உருவாக்கியுள்ளோம் என்று 'ஜாதிக குருபல' அமைப்பின் செயலாளர் எல்.ஆர்.மனதுங்க தெரிவித்தார்.

கண்டி டெவோன் ஹோட்டலில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

இரண்டு இலட்சத்து 65 ஆயிரம் பேர் ஆசிரிய மற்றும் கல்வி சேவையில் உள்ளனர். இதில் 5 அல்லது 6 சதவீதமானவர்களுக்கு மட்டுமே கல்வி நிர்வாக சேவைக்கு உள்வாங்கப்படும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. எனவே ஆசிரியர்களாக அல்லது அதிபர்களாக உள்ள எல்லோருக்கும் பதவி உயர்வுகள் கிடைப்பதில்லை. எனவே அது தொடர்பாக ஒரு முறையான திட்டம் தேவையாகும்.

அதிபர் ஆசிரியர்களது 27 வருட கால சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படவில்லை. எனவே வீதியில் இறங்கி போராடுவதை தவிர்த்து சேவையில் இருந்து கொண்டே போராடும் முறை ஒன்றை முன் வைத்துள்ளோம். அதனை செங்கடகல பிரகடனம் என அழைக்கிறோம் என 'ஜாதிக பலய' அமைப்பின் ஊடக பேச்சாளர் எம், பண்டார தெரிவித்தார்.

## மஸ்ஜிதுல் அக்பர் ஜும்ஆ பள்ளியின் புனரமைப்பு பணிகள்

**அக்குறணை குறூப் நிருபர்**



தெல்தெனிய, கும்புக்கந்துறை மஸ்ஜிதுல் அக்பர் ஜும்ஆ பள்ளியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் அண்மையில் இடம் பெற்றது.

ஜும்மா பள்ளியின் முன் முகப்பு அபிவிருத்தி, மேல்மாடிக்கு கொங்கிறீட் போடுதல் உட்பட பல்வேறு வேலைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அதன் நிர்வாக சபைத் தலைவர் எம்.எம். றகீப் தெரிவித்தார்.

## நுவரெலியா மாவட்டத்தில் கனத்த மழை

வெகு நாட்களுக்கு பின்னர் நுவரெலியா மாவட்டத்தில் ஹட்டன், மஸ்கெலியா, பொகவந்தலாவ, நோட்டன், கினிகத்தேன வட்டவளை ஆகிய பகுதிகளில் கனத்த மழை பெய்து வருகிறது.

இதனால் இப் பகுதியில் உள்ள அனைத்து நீர் ஓடைகள் மற்றும் அருவிகள் ஆறுகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. கடுமையான வெப்பமான காலநிலை நீங்கி சற்று குளிரான காலநிலை நிலவுகிறது மழை காரணமாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நீரேந்து பகுதியில் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்களுக்கும் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

## கண்டியில் குறையும் பொருட்களின் விலை

**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டிப் பிரதேசத்தில் சில பொருட்களுக்கான விலை குறைந்துள்ளது. சாதாரணமாக ஒரு கிலோ 700 - 800 ரூபாவிற்கு விற்பனையான பெரிய வெங்காயம் தற்போது 100ரூபாவுக்கு குறைந்துள்ளது.

கடந்த சில தினங்களாக அக்குறணை நகரத்தில் சில இடங்களில் பெரிய வெங்காயம் 100 ரூபாவிற்கு விற்பனையாகியது.

அதேநேரம் ஒரு கிலோ 1200 ரூபா முதல் 1300 ரூபாய் வரை விற்பனையான கோழி இறைச்சி 978 ரூபாவுக்கு விற்பனையாகிறது.

## போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கைது

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

போதைப் பொருள் வைத்திருந்த ஜோடி உட்பட மூன்று சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் அம்பேகமுவ மற்றும் சீனுக்கல பிரதேசங்களில் அவர்களது வீடுகளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு சந்தேக நபரிடம் இருந்து 200 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் இப்பிரதேசத்தின் பிரதான போதைப் பொருள் விற்பனையாளர்கள் என நடத்தப்பட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**திறைசேரி உண்டியல்கள் வழங்கல்**

**ரூ. 177,500 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 மே 15ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124H168 | LKA18224K151 | LKA36425E163 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 45,000 | 77,500 | 55,000 | 177,500 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 மே 15
தீர்ப்பனவுத் திகதி : 2024 மே 17
வழங்கப்படும் திகதி : 2024 மே 17
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 மே 15 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ. பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**



**சிறு விளம்பரம்**

**மோட்டார் வாகனங்கள்** 122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**

விற்பனைக்கு

BIA-2765 Honda grazia 2019 motor cycle அதியுயர் விலைக்கு. வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி.இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0711 210810. 031589

BIA-7911 Yamaha ray ZR, 2019 motor cycle அதி யுயர் விலைக்கு. வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி.இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0711 210810, 0705999163. 031586

**Repeat Your ad For Better Offers**







# கிழக்கின் குரல்

## மாகாண கல்விப் பணிப்பாளர் கல்முனையில் மீளாய்வு கூட்டம்

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)



கல்முனைக் கல்வி வலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் அடைவு மட்டத்தினை அதிகரிக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட வலய மட்டத்திலான பரீட்சை தொடர்பாக சாய்ந்தமருது, நிந்தவூர் மற்றும் காரைதீவு கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் அண்மையில் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் M.S.சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.குலேந்திரகுமார் கலந்து கொண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பான அடைவு மட்டத்தினை அதிகரிப்பதற்கு மாகாண மட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாகவும் இவ்விடயம் தொடர்பாக அதிபர் ,ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாகவும் விளக்கிக் கூறினார்.

இக்கூட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள்,வளவாளர்கள், அதிபர்கள், பிரதி,உதவி அதிபர்கள், தரம் 5 வகுப்புகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## யாழ் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமம் பாதயாத்திரை ஆரம்பம்

(காரைதீவு குறுப் நிருபர்)





இலங்கையின் மிக நீண்ட தூர நடைப்பயணம் கொண்ட கதிர்காமம் பாதயாத்திரை யாழ்ப்பாணம் செல்வசந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகியது.

இந்துக்களின் பாரம்பரிய கதிர்காமத்திற்கான பாதயாத்திரை வழமைபோல இம்முறையும் யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்று ஆரம்பமானது. அடியார்கள் அரோகரா கோஷங்கள் முழங்க பாதயாத்திரையினை ஆரம்பித்தனர்

கடந்த வருடத்தினை போன்று இவ்வருடமும் ஜெயாவேல்சாமி தலைமையில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரை செல்கின்றனர்.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகல ஆகிய 7மாவட்டங்களையும் இணைத்து 48 நாட்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815 கிலோமீற்றர் தூரத்தை நடைப்பயணமாக கடக்கும் இப்புனித பாதயாத்திரை இலங்கையின் மிக நீண்ட தூர புனிதயாத்திரையாகக் கருதப்படுகின்றது. கடந்த 23 வருடங்களாக சைவமரபு பாரம்பரியத்துடன் இடம்பெற்றுவரும் இப்பாதயாத்திரை கதிர்காமக் கந்தன் ஆலய கொடியேற்றத் தினத்தில் கதிர்காமத்தைச் சென்றடைவது வழமையாகும். நேற்றுமுன்தினம் சந்நதியில் அதிகாலை நடைபெற்ற விசேட பூஜையினைத் தொடர்ந்து கருணாசாரங்கன் வேலாயுதமானது கதிர்காம பாதயாத்திரைக் குழுத்தலைவர் ஜெயாவேல்சாமியிடம் சம்பிரதாய பூர்வமாக ஒப்படைக்கப்பட்டு பாதயாத்திரை ஆரம்பமானது .மோகன் சுவாமியால் மகேஸ்வர பூஜை நடத்தப்பட்டது. இதேவேளை கதிர்காம ஆடிவேல்விழா உற்சவத்திற்கான கன்னிக்கால் அல்லது பந்தல் கால் நடும் வைபவம் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

## 'உதவும் பொற்கரங்கள்' தலைவருக்கு கனடாவில் வழங்கப்பட்ட உயர்விருதுகள்



கனடாவின் பிரம்ரன் மாநகரத்தின் Brampton 50th Birthday Celebration விழாவின் போது நகரத்தின் சிறந்த சாதனையாளர்கள் மற்றும் தொண்டர் சேவையில் அளப்பரிய பங்காற்றியவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த 9 ஆம் திகதி பிரம்ரன் மாநகரில் அமைந்துள்ள றோஸ் தியேட்டரில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவின் போது மட்டக்களப்பைச் சேர்ந்தவரும், உதவும் பொற்கரங்கள் அமைப்பின் தலைவருமான (CEO, Helping Golden Hands) சமூக சேவையாளர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை விருது வழங்கி பாராட்டப்பட்டார்.

அவருக்கு ஒரே மேடையில் அதி உயர்ந்த விருதுகளான 'பிரம்ரன் ஐம்பதாவது பிறந்தநாள் சிறந்த குடியுரிமைக்கான விருது', 'Best Citizen Brampton 50th Birthday Celebration Award' மற்றும் முப்பத்தைந்து வருட நீண்டகால சேவைக்கான தொண்டர் விருது (35 Years Long Services Volunteer Award) ஆகிய இரண்டு விருதுகள் வழங்கப்பட்டன.

கனேடிய அரசாங்கத்தில் அதி உயர் பதவியில் நீண்டகாலமாக பணியாற்றிவருபவரும் கனேடிய அமெரிக்கா நாடுகளின் கணக்காளர் நெறிக்கான அதிஉயர் விருதினை பெற்றுக்கொண்டவரும், சிரேஷ்ர ஊடகவியலாளருமான இலங்கேஸ் தருமலிங்கம் அவர்களின் பரிந்துரையின் பிரகாரம் இந்த உயரிய இரு விருதுகள் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களுக்கு கிடைத்தமை மிகப்பெரிய சாதனையாகும்.

இவ்விருதுகள் குறித்து மாநகர முதல்வர், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏராளமான முக்கியஸ்தர்கள் பாராட்டுதல்களை தெரிவித்துள்ளனர்.

– செ.துஜியந்தன்
(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

## கல்முனையில் நேற்று மக்கள் பேரணி!

### போராட்டம் இன்றுடன் 50 தினங்கள் நிறைவு




(காரைதீவு குறுப் நிருபர்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் மீது நிருவாக அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதாக கண்டனம் தெரிவித்து பொதுமக்கள் சிவில் அமைப்புக்கள் நடத்தி வரும் போராட்டம் இன்று (13) திங்கட்கிழமை ஐம்பது நாட்களை எட்டுகிறது.

அதையொட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை பேரணியொன்று கல்முனை நகரில் நடைபெற்றது. பேரணிக்கு பொலிசார் பாதுகாப்பு வழங்கினர். போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. சுமார் 4000 பொதுமக்கள் போராட்டத்தில் பங்கேற்றனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை 49 ஆவது நாளாக அப்போராட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலக முன்றலில் நடைபெற்றது. நேற்று அப்பேரணி வடக்கு பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து தரவைப் பிள்ளையார் ஆலயம் வரை சென்று மீண்டும் பிரதேச செயலகத்தை வந்தடைந்தது. மக்கள் கோஷங்களை எழுப்பி பதாதைகளை தாங்கிய வண்ணம் சென்றனர்.

## ஈச்சிலம்பற்று ஆலயத்தில் தமிழரசு கட்சியினர் சந்திப்பு

(தம்பலகாமம் குறுப் நிருபர்)



இலங்கை தமிழ் அரசு கட்சியின் கலந்துரையாடல் ஒன்று திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று பிரதேசத்திலுள்ள சென்பக அம்மன் கோயிலில் இடம்பெற்றது.கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் ச. குகதாசன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

விசேட பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்ட கட்சி முக்கியஸ்தர்கள் கட்சி நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். கட்சியின் முன்னெடுப்புக்கள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இதில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் உட்பட கட்சி ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## திருகோணமலை ரொட்றி கழகத்தின் 45 ஆவது தொடக்க ஆண்டு சாசன விழா




(தம்பலகாமம் குறுப் நிருபர்)

திருகோணமலை ரொட்டறி கழக 45 ஆவது 'தொடக்க ஆண்டு' (Charter Day) விழா, ரொட்டறி இல்லம், டைக் வீதி, திருகோணமலையில் அண்மையில் நடைபெற்றது. வைத்திய கலாநிதி ஆர். ரோஹான்குமார் (சத்திர சிகிச்சை நிபுணர்_ திருகோணமலை பொது வைத்தியசாலை) பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இவ்வைபவத்தில் திருகோணமலை ரொட்டறி கழகத் தலைவர் வைத்திய கலாநிதி சௌந்தரராஜன் ரோட்டரி கழகம் சார்பில் வரவேற்பு உரை நிகழ்தினார்.

காலஞ்சென்ற முன்னாள் ரோட்டரி அங்கத்தவர்கள் நினைவு கூரப்பட்டார்கள். திருகோணமலை ரோட்டரி கழகத்தின் செயலாளர் என்.டி. ரகுராம் திருகோணமலை ரோட்டரி கழகத்தின் 2023 – 2024 ஆம் ஆண்டின் நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறினார்

ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் தி/ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் சிறந்த பெறுபேறு பெற்ற செல்வி கே. தான்ய பணப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். ரொட்டறி கழகத்தில் 25 வருடங்களுக்கு மேல் சிறப்பாக சேவையாற்றிய 12 அங்கத்தவர்கள் கௌரவிக்கப்படடார்கள்.

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த 13 வயது செல்வன் ஹரிஹரன் தன்வந் கௌரவிக்கப்பட்டார்.

தபால் நிலையத்துக்கு எதிரில் ஒரு புதிய பேருந்து தரிப்பு நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு 500,000 ரூபா அன்பளிப்பை SKY ROUTE TRAVELS சார்பில் அகிலன் வழங்கினார்.

திருகோணமலை ரோட்டரி கழகத்தின் பொதுசன தொடர்பாளர் டொக்டர் ஈ. ஜீ. ஞானகுணாளன் சிறப்பு விருந்தினர் வைத்திய கலாநிதி ஆர். ரோஹான்குமாரை அறிமுகப்படுத்தி உரையாற்ற அழைத்தார்.

விபத்து அவசர (ACCIDENT & EMERGENCY UNIT) சிகிச்சைக்கும், இதய (CARDIOLOGY UNIT) சிகிச்சை நிலையத்துக்கும் நிதி ஒதுக்கப்பட்டு இருப்பதாக அவர் தெரிவித்தார். அத்துடன் மேலதிகமாக மருத்துவ உபகரணம் கொள்வனவு செய்வதற்காக நிதி ஒதுக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இறுதியாக அடுத்த வருட தலைவர் எஸ். ஜெகதீஸ்வரன் நன்றியுரை நிகழ்த்தினார்.

## இலுக்குச்சேனை பாடசாலை அதிபருக்கு கௌரவிப்புவிழா



அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை கல்வி வலயத்தின் இறக்காமம் கல்விக்கோட்டத்தின் கீழுள்ள சது/இலுக்குச்சேனை GMMS வித்தியாலயத்தில் அதிபராக பல வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் ஏ. ஹாறுத்தீன் அவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கல்லூரி அதிபர் யூ.எல்.பயாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு அதிதிகளாக இறக்காமம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல். மஹ்மூதுலெவ்வை, உதவி கல்விப் பணிப்பாளர் எஸ். எல். நிசார் மற்றும் பாடசாலை ஆசிரியர், அதிபர்கள் கலந்து கொண்டனர்.

ஹாறுத்தீன் அவர்கள் 1988 08.07 அன்று ஆரம்பக் கல்வி ஆசிரியராக இறக்காமம் அல் அஷ்ரப் மகாவித்தியாலயத்திற்கு நியமிக்கப்பட்டார். 1983 ஆம் ஆண்டு கல்வி அபிவிருத்தி சபை என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு பாடுபட்டார்.

பாடசாலை சமூகத்துடன் இணைந்து பௌதீக வளங்களை பெறுவதற்கும் ஆசிரியர் வளங்களைப் பெறுவதற்கும் வழிகாட்டினார்.

மிகவும் பின்தங்கிய அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலையான சது/இலுக்குச்சேனைGMMS பாடசாலைக்கு 2003 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிபராக நியமிக்கப்பட்டார். பாடசாலை வளர்ச்சிக்காக பெரிதும் உழைத்தார்.

அவரது பதவிக் காலத்தில் மாணவர்கள் பொதுப்பரீட்சைகளில் திறமைச் சித்தி பெற்றனர்.

தரம் 5 ஆகஇருந்த இப்பாடசாலை கடந்த 2019 ஆம் வருடம் தரம் II பாடசாலையாக உயர்த்தப்பட்டது.

திறமையான சேவை செய்ததற்காக ஏ.ஹாறுத்தீன் அவர்களுகக்கு 'ஆசிரியர். பிரதீபா பிரபா' பட்டம் வழங்கப்பட்டது.

(அம்பாறை விசேட நிருபர்)

## அரிஓம் சிவசக்தி லஷ்மி நாரயணன் நற்பணிமன்றம் ஆற்றும் சமூகப்பணி

(கிண்ணியா தினகரன் நிருபர்)



கஷ்டப் பிரதேச மாணவர்களின் கல்வி நிலையினை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரிஓம் சிவசக்தி லஷ்மி நாராயணன் நற்பணி மன்றத்தின் கல்விப் பிரிவினை கிண்ணியா பிரதேச செயலாளர் ஆலங்கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள நற்பணிமன்ற காரியாலயத்தில் ஆரம்பித்து வைத்தார்.

இந்நற்பணி மன்றத்தின் மூலம் பூவரசந்தீவு, சமாவெச்சதீவு, நெடுந்தீவு, ஆலங்கேணி, ஈச்சந்தீவு, இடிமன் மற்றும் பைசல் நகர் போன்ற கிராமப் புறங்களை உள்ளடக்கியதாக வறிய மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் முற்றிலும் இலவசமாக திறமை வாய்ந்த ஆசிரியர்களை கொண்டு கற்பிக்கப்படவுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் குறித்த நற்பணி மன்றத்தினால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.எம். கனி, சிறப்பு அதிதிகளாக திருகோணமலை ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி மற்றும் அதிபர்கள், பள்ளிவாசல் பரிபாலன தலைவர் எம்.ஏ. அப்துல் ஹாதீ, மௌலவிமார், இந்துகுருமார் மற்றும் ஆசிரியர்கள், ஊர்ப்பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மு.காவின் வரிப்பத்தான்சேனை மத்தியகுழு புனரமைப்பு கூட்டம்



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வரிப்பத்தான்சேனை பிரதேச மத்திய குழு புனரமைப்புக்கான முன்னேற்பாடு கூட்டம் வரிப்பத்தான்சேனை முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளரும், முன்னாள் இறக்காமம் பிரதேச சபையின் தவிசாளருமான எம்.ஐ.நைசர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம். எஸ். உதுமாலெப்பை, மாவட்ட குழுவின் செயலாளரும்,முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், இறக்காமம் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் என்.ஆசிக், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஐ.எல். நசீர், வரிப்பத்தான்சேனை பிரதேச கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள், கொள்கை பரப்புச் செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும் இளைஞர் அமைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

# நாகை – காங்கேசன்துறை கப்பல் சேவை: 17 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

**யாழ்.விசேட நிருபர்**

நாகை - காங்கேசன்துறை கப்பல் சேவை சில சட்டரீதியான அனுமதிகள் தாமதமானமையால் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கப்பல் சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.காங்கேசன் துறைக்கும் தமிழகத்தின் நாகப்பட்டினத்திற்கும் இடையிலான கப்பல் சேவை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாக இருந்தது.

இந்நிலையில் தவிர்க்க முடியாத சில சட்டரீதியான அனுமதிகள் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் கப்பலின் தாமதமான வருகையாலும் இன்றைய தினம் கப்பல் சேவை இடம்பெறாது எனவும், 17ஆம் திகதி முதலே சேவைகள் ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் கப்பல் பயணத்திற்கு பதிவு செய்த பயணிகள் 17ஆம் திகதிக்கு பின்னர் அவர்கள் விரும்பிய திகதிக்கு பதிவினை மாற்றி பயணிக்க முடியும். அல்லது கப்பல் பயணத்திற்கு செலுத்திய கட்டணத்தை மீளப் பெறமுடியும் என கப்பல் சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

## வடக்கின் உதயம்

# தனக்குத் தானே தீ மூட்டிய இளம் குடும்பப் பெண்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்துவில் பகுதியில் கடந்த சனிக்கிழமையன்று இரவு தனக்குத் தானே தீ மூட்டிய இளம் குடும்பப் பெண் ஒருவர் கடும்காயங்களுடன் உயிர்பிழைத்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக மேற்படி பெண் தனக்குத் தானே தீ மூட்டியதாக தெரிய வருகிறது. படுகாயமடைந்த பெண்ணை உறவினர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இப்பெண் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாட்டிறைச்சி கடையை ஒழிப்பவர்களுக்கே வாக்கு

## சிவசேனை யாழில் போராட்டம்



**யாழ். விசேட நிருபர்**

பசுவதைக்கு எதிராக யாழில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. நல்லை ஆதீனத்திற்கு முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சிவசேனையின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் சிவசேனையின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன், நாக விகாரை விகாராதிபதி, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் உள்ளிட்டவர்களுடன் சிவசேனை அமைப்பினர் கலந்து கொண்டனர்.

# பாதுகாப்பு ஏற்பாடுகளின்றி இயங்கும் தொழிற்சாலைகள் ஆபத்தானவை

## பொதுச்சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

அடிப்படை தொழிற்சாலைப் பாதுகாப்பு வசதிகளின்றி இயங்கும் தொழிற்சாலைகள் மனித உயிருக்கும் சுற்றுச்சூழலுக்கும் ஆபத்தானவை என பூநகரிப் பிரதேச மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

அண்மையில் முழங்காவில் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவொன்று திடீர் விஜயம் மேற்கொண்டிருந்தபோதே அவர்மேற்படி தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தொழிற்சாலைகள் ஒவ்வொன்றும் அடிப்படை தொழிற்சாலைப் பாதுகாப்புக் கட்டமைப்புக்களைக் கொண்டிராது பொறுப்பற்று தமது செயற்பாட்டில் ஈடுபடுவது மனித உயிர்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பெரும் அச்சுறுத்தலாகும். எனவே உரிய தரப்பினரின் ஆலோசனைகள் வழிகாட்டலைப் பெற்று சட்ட விதிகளுக்கமையவே இயங்கவேண்டும்.



தொழிற்சாலைகளில் அனைத்து இயந்திரப் பட்டிகளுக்கும் கவசமிடுவதால் இயந்திரத்தால் ஏற்படக்கூடிய விபத்துக்களை தவிர்க்கலாம். அரைக்கும் ஆலை இயந்திரங்கள் உள்ள பகுதியிலும் உணவுப்பொருட்களை கையாளும் பகுதியிலும் நிரந்தர உட்கூரை அமைப்பை ஏற்படுத்துவதால் உணவு மாசுபடுதலைத் தடுக்க முடியும்.

அத்துடன் தூசுக் கட்டுப்பாட்டுக்காக வளி வெளியேற்றும் மின்விசிறிகள் பொருத்தப்பட்டு ஆலையிலுள்ள தூசிகளை உறிஞ்சி குழாய் மூலம் நீர்த்தொட்டியில் கரைப்பதாலும், நெல்தீட்டும் இடத்தில் வெளியேறும் உமியை பூரணமாக அடைக்கப்பட்ட தொட்டியினுள் வெளியேற்றுவதாலும் தொழிலாளிகளுக்கும், அயலில் வசிப்போருக்கும் சுவாசப் பிரச்சினைகள் ஏற்படாது தவிர்ப்பதோடு சுற்றுச்சூழலின் வளி மாசுபடுதலையும் குறைக்க முடியும்.

இரந்திரங்களின் அதிகரித்த ஒலி அயலிலுள்ளவர்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்காத விதத்தில் கட்டட அமைப்பு ஏற்படுத்தப்படுவதோடு, தொழிலாளர்களை ஒலி மாசிலிருந்து பாதுகாக்க ஒலியை உறிஞ்சக்கூடியவாறான உட்சுவரமைப்பை ஏற்படுத்துவதுடன், வேலை செய்வோர் காதினுள் சொருகும் ஒலிக்கட்டுப்பாட்டு உபகரணங்கள், முகக்கவசம் உட்பட தனிநபர் பாதுகாப்பு அங்கிகளை அணிந்து வேலை செய்வதை உறுதி செய்ய வேண்டும் என மேலும் வலியுறுத்தியிருந்தார்.

## யாழில் பண மோசடிக் குற்றச்சாட்டு

# தென்னிலங்கைக் கட்சியொன்றின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக யாழில் பண மோசடியில் ஈடுபட்ட தென்னிலங்கை அரசியல் கட்சி ஒன்றின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பதாக கூறி 09 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை பெற்று மோசடி செய்துள்ளார் என மேற்படி நபர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது குறித்து பாதிக்கப்பட்ட தரப்பினரால் யாழ்.மாவட்ட பெருநிதி குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து, குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் தென்னிலங்கை பிரதான கட்சி ஒன்றின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எனவும், நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன்,



வேறு நபர்களிடமும் பண மோசடிகளில் ஈடுபட்டாரா என்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# முப்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான பாலை மரக்குற்றிகளை மீட்ட சாவகச்சேரி பொலிஸார்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

அனுமதியின்றி சட்டவிரோதமாக டிப்பர் வாகனத்தில் கடத்தப்பட்ட சுமார் முப்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான பாலை மரக் குற்றிகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 4.30மணியளவில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.



புத்தூர் வீதி ஊடாக மணலுக்குள் மறைத்துக் கடத்தப்பட்ட சுமார் 150 மரக்குற்றிகளே சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகம் புளியடிச் சந்திப் பகுதியில் வைத்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களான டிசாந்தன் (PC 8453) மற்றும் இந்திக்க (PC 77094) ஆகியோரே மேற்படி மரக் கடத்தலை முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன், தப்பி ஓடிய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் மின்னல் தாக்கி ஒருவர் காயம்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் உடுவில் பகுதியில் மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகி தென்னை மரம் ஒன்று தீ பற்றி எரிந்துள்ளதுடன், ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில வாரங்களாக கடும் வெப்பமான காலநிலை நிலவி வரும் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை உடுவில் பகுதியில் இடி மின்னலுடன் மழை பொழிந்துள்ளது.

அதன் போது, மின்னல் தாக்கத்தால் வீடொன்றில் இருந்த தென்னை மரம் தீ பற்றி எரிந்துள்ளதுடன், வீட்டில் இருந்த நபர் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# யாழ். மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 888 முறைப்பாடுகள்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கடந்த 2023ஆம் ஆண்டு 888 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது, அவற்றில் 873 முறைப்பாடுகளுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 10.47 மில்லியன் ரூபாய் தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

அத்துடன் கடிதம் மற்றும் தொலைபேசி ஊடாக தமக்கு கிடைக்க பெற்ற 126 முறைப்பாடுகளுக்கு தீர்வுகள் காணப்பட்டதாகவும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் யாழ்.பிராந்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.

# விளைவேலி மருதடி விநாயகர் திருவிழா நாளை ஆரம்பம்

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.



இன்று 13ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு சாந்தி வழிபாடு இடம்பெறவுள்ளதுடன் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.30க்கு கொடியேற்றம் இடம்பெற்று 20ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 23ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம்பெறவுள்ளன.

# வவுனியா சிறைச்சாலையில் உணவகம் மற்றும் சிகையலங்கார நிலையம்; திறந்து வைத்தார் ஆணையாளர் நாயகம்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா சிறைச்சாலையில் உணவகம், சிகையலங்கார நிலையம் என்பன திறந்து வைக்கப்பட்டதுடன், விடுதிக்கான அடிக்கல்லும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தால் நாட்டி வைக்கப்பட்டது.

வவுனியா ஏ9 வீதியோரமாக சிறைச்சாலையுடன் இணைந்த வளாகத்தில் கடந்த சனிக்கிழமையன்று இந்நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா சிறைச்சாலையில் நீண்டகாலமாக தண்டனை பெற்று தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை கொண்டு உணவகம் மற்றும் சிகையலங்கார நிலையம் என்பன நிர்மாணிக்கப்பட்டுள்ளன. உணவகம் மற்றும் சிகையலங்கார நிலையம் என்பவற்றினை நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளே நடத்தவுள்ளனர். அவர்கள் சிறையில் உள்ள காலத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கும், அவர்களது மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் இதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த இரு நிலையங்களையும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துசார உப்புல் தெனிய திறந்து வைத்தார்.

அத்துடன், விடுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் கே.ஏ.எஸ்.அபயரட்ண தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துசார உப்புல் தெனிய, இராணுவத்தின் வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தினேஷ் நாணயக்கார, சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பொறுப்பதிகாரி ஏ.டீ.புத்திக்க பெரேரா, பௌத்த மதகுருமார், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், சிறைச்சாலை நலன் பேணும் அமைப்பினர், சிறைக் கைதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# 'உள்ளச் சிதறல்கள்' நூல் வெளியீட்டு விழா

**தலைமன்னார் விஷேட நிருபர்**

பேசாலை எழுத்தாளர் ஐ. மதிவளனின் 'உள்ளச் சிதறல்கள்' எனும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை காலை 9.30க்கு பேசாலையில் நடைபெற்றது.

பேசாலை ஜோன் மேரி ஹோட்டலில் பேசாலை வளர்கலை மன்றத்தின் அனுசரணையுடன் இம்மன்றத் தலைவர் இ.கெனிசியஸ் லியோன் தலைமையில் நடைபெற்றபோது, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக அருட்பணி ஜே.டெனிஸ் குரூஸ் அடிகளாரும், சட்டத்தத்தரணிகள் அன்ரனி மடுத்தீன், பிறிமுஸ் சிராய்வா மன்னார் மாவட்ட தேனி மாற்றுத்திறனாளிகள் மாவட்ட இணையத் தலைவர் ஏ.றொபட் உட்பட பலரும் இதில் கலந்துகொண்டனர்.



எழுத்தாளர் மதிவளனின் கன்னி முயற்சியாக வெளிவரும் 'உள்ளச் சிதறல்கள்' எனும் கவிதைத் தொகுப்பு நூலை பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வெளியிட்டு வைத்தார்.

# பலஸ்தீனுக்கு ஐ.நா.வில் முழு அங்கத்துவம் அளிக்க 143 நாடுகளுடன் இணைந்து வாக்களித்த இலங்கை

ஐக்கிய நாடுகள் சபையில் பலஸ்தீனுக்கு முழுமையான அங்கத்துவம் வழங்குவதை சாதகமாக மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என பாதுகாப்பு சபையை கோரும் வகையில் ஐ.நா. பொதுசபைக்கு கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை ஆதரவாக வாக்களித்துள்ளது.

காஸா மீதான இஸ்ரேல் யுத்தம் ஆரம்பித்த பின்னர் ஐ.நா. பொதுச்சபையில் கொண்டு வரப்பட்ட மூன்றாவது தீர்மானத்திற்கும் இலங்கை ஆதரவு நல்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் பலஸ்தீனுக்கும் பலஸ்தீன மக்களுக்கும் தொடராக அளித்துவரும் ஆதரவின் வெளிப்பாடே இந்த வாக்களிப்பின் ஊடாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

'நாடு என்ற வகையில் இவ்வாக்களிப்பில் பலஸ்தீனுக்கு ஆதரவு அளித்ததன் ஊடாக சர்வதேச சமூகத்தின் பெரும்பான்மையினருடன் இணைந்துள்ளதை இலங்கை வெளிப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, நிரந்தர சமாதானத்தை அடைவதற்கும், மனித துன்பங்களைப் போக்குவதற்கும் ஒரே வழி, பேச்சுவார்த்தை மூலமான இரு நாட்டுத் தீர்வொன்றே என்ற தனது நிலைப்பாட்டில் இலங்கை எப்போதும் உறுதியாக உள்ளது' என்றும் தெரிவித்துள்ளார்

பலஸ்தீன் 2012 முதல் ஐ.நா. சபையில் பார்வையாளர் அந்தஸ்தைப் பெற்ற நாடாக உள்ளது. ஆனால் பலஸ்தீனில் முழுமையான அங்கத்துவம் கோரி 2011 இல் பலஸ்தீன் விண்ணப்பித்தது. ஆனாலும் அது அச்சமயம் சாத்தியமாகவில்லை. என்றாலும் அந்த விண்ணப்பத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு ஐ.நா.வுக்கான பலஸ்தீன தூதுவர் கடந்த ஏப்ரல் மாதம் ஐ.நா.வுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததோடு இத்தீர்மானத்தை 140 நாடுகள் ஆதரிக்கும் என்றும் சுட்டிக் காட்டியிருந்தார்.

அந்த வகையில் பலஸ்தீனுக்கு ஐ.நா.வில் முழுமையான அங்கத்துவம் வழங்குவது தொடர்பில் 15 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் கடந்த ஏப்ரல் 18 இல் அல்ஜீரியா கொண்டு வந்த பிரேரணைக்கு 12 நாடுகள் ஆதரவு அளித்ததோடு 02 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில் இப்பிரேரணை நிறைவேற்றப்படவிருந்த சூழலில் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனை அமெரிக்கா செல்லுபடியற்றதாக்கியது.

இப்பின்னணியில் தான் இப்பிரேரணையை சாதகமாக மீள்பரிசீலனை செய்யுமாறு கோரும் யோசனை பொதுச்சபைக்கு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஐ.நா. சபையில் முழுமையான அங்கத்துவம் வழங்கும் அதிகாரம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலிடம் தான் உள்ளது.

அதேநேரம் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி ஹமாஸ் இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் மேற்கொண்டதோடு பணயக் கைதிகளையும் பிடித்து சென்றது. அதனைத் தொடர்ந்து காஸா மீது யுத்தத்தை இஸ்ரேல் ஆரம்பித்தது. யுத்தத்தை நிறுத்தி அமைதி வழியில் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு உலக நாடுகள் இஸ்ரேலை வலியுறுத்தி வருகின்றன.

அந்த வகையில் காஸாவில் மனிதாபிமான யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி 2023 ஒக்டோபர் 27 ஆம் திகதி ஜோர்தான் ஐ.நா. பொதுச்சபைக்கு கொண்டு வந்த தீர்மானத்தை 121 நாடுகளுடன் இணைந்து இலங்கையும் ஆதரவு நல்கி நிறைவேற்றியது.

அதன் பின்னர் 2023 டிசம்பர் 12 ஆம் திகதி காஸாவில் உடனடி மனிதாபிமான யுத்த நிறுத்தத்தை வலியுத்தி ஐ.நா. பொதுசபைக்கு கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை 153 நாடுகளுடன் இணைந்து இலங்கையும் ஆதரவளித்து நிறைவேற்றியது.




இவ்வாறான பின்புலத்தில் கடந்த வெள்ளியன்று (10.5.2024) கொண்டு வரப்பட்ட பலஸ்தீனுக்கு முழுமையான அங்கத்துவம் வழங்குவதற்கான பிரேரணையை 143 நாடுகளுடன் இலங்கையும் இணைந்து வாக்களித்து நிறைவேற்றி இருக்கிறது.

65 நாடுகளின் இணை அனுசரணையில் 22 அரபு நாடுகள் முன்மொழிந்த இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 143 வாக்குகளும் எதிராக அமெரிக்கா, ஆஜென்டீனா, இஸ்ரேல், பப்புவா நியூகினி, ஹங்கேரி உள்ளிட்ட 9 நாடுகளும் வாக்களித்தன. 25 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஆனால் பிரான்ஸ், ஜப்பான், தென் கொரியா, ஸ்லோவேனியா ஆகிய நாடுகள் பலஸ்தீனத்தை தனித்தனியாக அங்கீகரிக்காத போதிலும் இத்தீர்மானத்தை ஆதரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸால் அறிமுகப்படுத்தப்பட்ட இத்தீர்மானத்தில், 'பலஸ்தீன இராச்சியம் சாசனத்தின் 4 வது பிரிவின்படி ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக தகுதி பெற்றுள்ளது, எனவே அதனை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



காஸா மீது 08 மாதங்களாக இஸ்ரேல் யுத்தத்தை முன்னெடுத்துவரும் சூழலில் ஐ.நா. பொதுச்சபைக்கு கொண்டு வரப்பட்ட இத்தீர்மானத்திற்கு உலக நாடுகளுடன் இணைந்து இலங்கையும் வாக்களித்திப்பது வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வாகப் பார்க்கப்படுவது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.



அதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவர் தலைமையிலான அரசாங்கமும் யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள காஸா மற்றும் பலஸ்தீன் மக்களின் மனிதாபிமான நலன்களில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றன.

அந்த வகையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள காஸா சிறுவர்களுக்கென தனியான நிதியமொன்றை இலங்கையில் அமைத்த பெருமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே சாரும்.

கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதி இதற்கான அறிவிப்பு உத்தியோகபூர்வமாக விடுக்கப்பட்டதோடு இந்நிதியத்தின் ஊடாக ஒரு மில்லின் அமெரிக்க டொலர்களை ஒரு மாதத்திற்குள் திரட்டிக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டது. அதற்கேற்ப ரமழான் காலத்தில் அரசாங்க நிறுவனங்களில் இப்தார் நோன்பு துறக்கும் நிகழ்ச்சிகளுக்கு செலவிடப்படும் நிதியை இந்நிதியத்திற்கு வழங்குமாறு ஜனாதிபதி செயலகம் கேட்டுக்கொண்டது.

அதற்கேற்ப அரசாங்க நிறுவனங்கள் மாத்திரமல்லாமல் தனியார் நிறுவனங்கள் பலவும் இந்நியத்திற்கு நிதியுதவி அளித்தன. அதன்பயனாக கடந்த ஏப்ரல் முதலாம் திகதி ஒரு மில்லியன் டொலர்கள் (சுமார் 30 கோடி ரூபா) ஜனாதிபதி தலைமையில் ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி முன்னிலையில் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவரிடம் கையளிக்கப்பட்டது. மேலும் இந்நிதியத்திற்கு தொடர்ந்தும் நிதியுதவிகள் நாட்டின் நாலாபுறமும் இருந்தும் அளிக்கப்பட்டு வருகின்றன. அதேநேரம் கொழும்பிலுள்ள முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களுடன் கடந்த ஜனவரியில் கலந்துரையாடிய ஜனாதிபதி, காஸா யுத்தம் முடிவுற்ற பின்னர் அங்குள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்கென பாடசாலையொன்றை அமைத்து கொடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள காஸா மக்களுக்கென கடந்த ஜனவரியில் ஒரு தொகுதி தேயிலையும் வெளிவிவகார அமைச்சின் ஊடாக பலஸ்தீனுக்கு கையளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவை இவ்வாறிருக்க, மன்னாரில் கடந்தாண்டு (2023) ஒக்டோபர் 22 இல் நடைபெற்ற தேசிய மீலாதுன் விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி, 'இஸ்ரேல் – ஹமாஸ் மோதலில் பலஸ்தீன மக்கள் பாதிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மோதல்களை நிறுத்தி அமைதியை நிலைநாட்ட ஐ.நா முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு இலங்கை பூரண ஆதரவை வழங்கும்.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் காரணமாக பலஸ்தீன மக்கள் காஸா பகுதியில் சிக்கித் தவிக்கின்றனர். அந்த மக்களின் துயரத்தை நாங்கள் அங்கீகரிக்க முடியாது. இப்போராட்டத்தில் சாதாரண பலஸ்தீன மக்கள் பலியாகிவிடக் கூடாது. அந்த மக்களுக்கு தேவையான உணவுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப் பிரச்சினையைத் தீர்த்து அப்பிரதேசங்களில் அமைதியை ஏற்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளரின் செயற்பாடுகளுக்கு, எமது பூரண ஆதரவை வழங்குவோம் என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். பலஸ்தீன நாடு ஒன்று உருவாக வேண்டும் என்பதையும் குறிப்பிட வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

அதேநேரம் இந்து சமுத்திரத்தில் நிபுணத்துவம் பெற்ற சர்வதேச ஆராய்ச்சி நிறுவனமான Geopolitical Cartographer கொழும்பு சிட்டி சென்டரில் கடந்தாண்டு ஒக்டோபர் 13 ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி, உக்கிரமடைந்து வரும் ஹமாஸ் – இஸ்ரேல் மோதலுக்கு தீர்வு காண உலகளாவிய ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தியதோடு 2023.10.09 இல் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் எனும் இரு நாட்டுக் கொள்கைக்கான இலங்கையின் நீண்டகால ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இவ்வாறு காஸா மற்றும் பலஸ்தீன மக்களின் நெருக்கடிக்களை மனிதாபிமானக் கண்கொண்டு நோக்கும் இலங்கை அப்பிரச்சினைக்கு தீர்வுகாண உலகின் பெரும்பான்மை நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

அதன் ஒரங்கமாகவே கடந்த வெள்ளியன்று ஐ.நா.வில் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு உலகின் பெரும்பான்மை நாடுகளுடன் இணைந்து இலங்கையும் வாக்களித்தது என்றால் மிகையாகாது.

**மர்லின் மரிக்கார்**

## வைத்திய அதிகாரிகள் இருவருக்கு கல்முனையில் பாராட்டு விழா

(பாலமுனை விசேட நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய ஆயுர்வேத வைத்தியசாலைகளின் இணைப்பாளராக பணியாற்றிய டொக்டர் எம்.ஏ.நபீல் மற்றும் பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரியாக பணியாற்றிய டொக்டர் எம்.எச்.எம். சரூக் ஆகியோர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

பிராந்திய ஆயுர்வேத வைத்தியசாலைகளின் இணைப்பாளராக பணியாற்றிய டொக்டர் எம்.ஏ.நபீல் பதவியுயர்வு பெற்று கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் பிரதி ஆணையாளராகப் பதவியேற்றுள்ளார். பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரியாக பணியாற்றிய டொக்டர் எம்.எச்.எம்.சரூக் வருடாந்த இடமாற்றத்தின் பிரகாரம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

குறித்த இரு வைத்திய அதிகாரிகளும் கல்முனை பிராந்திய மக்களுக்காக ஆற்றிய சேவைக்காக கல்முனை பிராந்திய பிரிவுத் தலைவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட சேவை நலன் பாராட்டும் பிரியாவிடை நிகழ்வும் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



நீண்ட காலமாக பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளராகவிருந்து கல்முனை பிராந்தியத்தில் ஆயுர்வேத துறையினை முன்னேற்றுவதற்கும் அதன் வளர்ச்சிக்கும் டொக்டர் நபீல் அர்ப்பணிப்புடன் ஆற்றிய சேவைகள் குறித்தும் அதேபோன்று டொக்டர் சரூக் முன்னெடுத்த அளப்பரிய பணிகள் குறித்தும் பலரும் பாராட்டிப் பேசினர். அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவித்தனர்.

## காரைதீவின் பாரம்பரியமான கண்டல் காடுகளில் தென்கிழக்கு பல்கலை மாணவர்கள் களப்பயணம்

அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் மிக முக்கியமான கண்டல் சூழற்றொகுதியை தன்னகத்தே வைத்துள்ள ஒன்றிரண்டு பிரதேசங்களில் காரைதீவும் ஒன்றாகும். அதன் வனப்பும், தாவரங்களும், விலங்குகளும், பறவைகளும் தனிச் சிறப்புக்குரியவை. இவை தனியே கிண்ணை மரங்களை கொண்ட காடாகும்.



காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் வழிகாட்டலில், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம்.றியாஸ் அஹமட், காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், காரைதீவு சுற்றுச்சூழல் கழக உறுப்பினர்கள், காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி மற்றும் சண்முகா மகாவித்தியாலய பாடசாலைகளின் சுற்றாடல் முன்னோடிக் கழக ஜனாதிபதி பதக்கத்திற்காக ஆய்வுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மாணவர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் காடறிதல் எனும் சூழலியல் நடை களப்பயணம் மேற்கொள்ளப்பட்டது.

பிரதேசத்தின் அற்புத வனத்தின் மீதான ஆய்வுகள் பல்கலைக்கழக மாணவர் மட்டத்தில் தொடங்கப் பட்டிருப்பதாகவும் அதற்குரிய அத்தனை செழிப்புக்களையும், பெறுதிகளையும் இந்தக் காடு வைத்திருக்கின்றது எனவும் பயணம் மேற்கொண்டோர் தெரிவித்தனர்.

பெரும்பாலான எல்லாக் கிராமங்களுமே காட்டை மூடி ஏப்பம் விட்ட சமயத்தில், காரைதீவின் இந்தக் கண்டல் காடு, காரைதீவுக்கு பாரம்பரியமாகும். இந்தப் பாரம்பரியத்தை அழிந்து போகாமல் காப்பது அனைவரின் கடமையாகும் எனவும் வளவாளராக கலந்து கொண்ட சிரேஷ்ட விரிவுரையாளர்களினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(எம்.எம்.ஜெஸ்மின்)

# சம்மாந்துறையில் நூல் வெளியீட்டு விழா

**இறக்கமாம் தினகரன் நிருபர்**

சம்மாந் துறை நம்பிக்கையாளர் சபை உறுப்பினர் எம்.எம் நௌஷாட் எழுதிய "சம்மாந் துறை ஸகாத் நிறுவனத்தின் வகிபாகம் ஓர் ஆய்வு" எனும் தலைப்பிலான நூல் வெளியீட்டு விழா சம்மாந்துறை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் (11) இடம் பெற்றது.

சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்சூறா தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.அமீர் (நளீமி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் கலாநிதி பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நூலில் முதல் பிரதியை முன்னாள் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான ஏ.எம். எம் நௌஷாட் பிரதம அதிதியின் கரங்களினால் பெற்றுக் கொண்டார்.

குறித்த நூலில் ஏற்புரையை எம்.எம் நௌஷாட் வழங்கியதுடன் ,இதன் ஆய்வுரையினை ஜாமிஆ நளீமியா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஷ்ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி) வழங்கினார்.

இந்நிகழ்வில் தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மொழித் துறை தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் மற்றும் நம்பிக்கையாளர் சபை தலைவரும் முன்னாள் அரசாங்க அதிபருமான ஐ.எம் ஹனிபா,உலமா சபை தலைவர் எம்.எல்.எச் பஷீர் (மதனி) , நம்பிக்கையாளர் சபை செயலாளர் இஸ்ஹாக் (நளீமி), சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே முஹம்மட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






## அட்டாளைச்சேனை சம்புக்களப்பு வீதிக்கு மின்விநியோகத் திட்டம்



**(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)**

அட்டாளைச்சேனை சம்புக்களப்பு வீதிக்கு மின்சாரம் வழங்கும் வேலைத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம். பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள சம்புநகர், மீலாத் நகர், ஆலம்குளம், தீகவாபி உள்ளிட்ட சில எல்லைப் புறக் கிராமங்களையும், அம்பாறை நகரினையும் இணைக்கும் பாதையாகவும், விவசாயக் காணிகளுக்குச் செல்லும் மக்களின் பிரதான பாதையாகவுமுள்ள இவ்வீதி நீண்ட காலமாக இரவு வேளைகளில் இருளில் மூழ்கிக் காணப்பட்டது.

இவ்வீதி மின்சார வசதியற்றுக் காணப்பட்ட கடந்த காலத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்பட்டதுடன், இரவு நேர வீதிப் போக்குவரத்தின் போது விபத்துக்களும் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த இவ்வீதிக்கான மின் இணைப்பு வேலைத் திட்டத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைத்த முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா, இப்பகுதியில் அமையப் பெற்றுள்ள கொல்களத்திற்கான நீர் இணைப்பினையும் ஆரம்பித்து வைத்தார்.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட வீதியில் அச்சம் நீங்கியுள்ளது. பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம். பாயிஸ் உள்ளிட்ட துறைசார்ந்தவர்களுக்கு தமது நன்றியறிதலை பிரதேச மக்கள் தெரிவித்து வருகின்றனர்.


இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டுமானப் பணிகளுக்காக

I. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா நிறைவேற்று பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் கி.மீ.1500 வீதி அபிவிருத்தி வேலைத்திட்டதின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

- I. RDA/SP/1500KM/WP/193 - பஹல யாகொட தொண்டுவ வீதியை மேம்படுத்தல்
- ii. RDA/SP/1500KM/WP/195 - மீகஹவத்த கட்டுகுருந்த பூங்கா வீதியினை வீதியை மேம்படுத்தல்
- iii. RDA/SP/1500KM/WP/197 - கெனணிய வெதுமுல்ல உல்லாச வீதியினை வீதியை மேம்படுத்தல்
- iv. RDA/SP/1500KM/WP/198 - அமுணுகும்புர விகாரைக்கு அருகிலுள்ள வீதியினை வீதியை மேம்படுத்தல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக பொருட்களை வழங்கல்

I. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா நிறைவேற்று பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் கி.மீ.1500 வீதி அபிவிருத்தி வேலைத்திட்டதின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

I. ABC வழங்கல்

- i. RDA/SP/1500KM/WP/194 - பஹல யாகொட தொண்டுவ வீதியை மேம்படுத்துவதற்காக Graded Aggregates for Base Courses (ABC) வழங்கல்
- ii. RDA/SP/1500KM/WP/196 - மீகஹவத்த கட்டுகுருந்தவத்தை வீதியை மேம்படுத்துவதற்காக Graded Aggregates for Base Courses (ABC) வழங்கல்
- iii. RDA/SP/1500KM/WP/199 - அமுணுகும்புர விகாரையின் வீதியை மேம்படுத்துவதற்காக Graded Aggregates for Base Courses (ABC) வழங்கல்

கொங்கிரீட் வழங்கல்

- I. RDA/SP/1500KM/WP/200 - சிவுருமுல்லயலிருந்து கினிகம வரை ஊருவல்லோய ஊடாக செல்லும் வீதியை மேம்படுத்துவதற்காக Graded 30 கொங்கிரீட் வழங்கல்

3. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - www.mohsl.gov.lk
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - www.rda.gov.lk

**தலைவர்,
பிராந்திய கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.
தொ.பே 033 2225033**



### 2024/2025 ஆம் ஆண்டுக்காக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வளிச்சீராக்கிகளுக்கான தடுப்பு பராமரிப்பு மற்றும் நன்னிலைப்படுத்தலின் பராமரிப்பு ஒப்பந்ததாரர்களுக்கான அழைப்பு

1. கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறு 2024/2025 ஆம் ஆண்டுக்காக மட்டக்களப்பு – பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வளிச்சீராக்கிகளுக்கான தடுப்பு பராமரிப்பு மற்றும் நன்னிலைப்படுத்தலின் பராமரிப்பு ஒப்பந்ததாரர்களை பதிவு செய்வதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) முறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்
3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனுதாரர் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்தில் (ICTAD) வளிச்சீராக்கி விபரக்குறிப்பில் "EM4 அல்லது அதற்கு மேல்" பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00இற்கு இடையே வேலை நாட்களில் மட்டக்களப்பு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.
6. மீளளிக்கப்படாத கட்டணமாக 2,500.00 ரூபாவை செலுத்தி கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்து 2024.06.03 ஆம் திகதி வரை மு.ப. 09.00 மற்றும் பி.ப. 03.00இற்கு இடையே வேலை நாட்களில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக, நிதிப் பிரிவிலில் இருந்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
7. விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 63 நாட்களுக்கு விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெறுகைக் குழு தலைவரின் பெயருக்கு மட்டக்களப்பு, திருகோணமலை வீதி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2024.06.04 அன்று மு.ப. 10.00 என்பதோடு விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
10. அனைத்து விலைமனுக்களும் 91 நாட்களுக்கு (2024.06.04 – 2024.09.02) செல்லுபடியானதாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட 40,000.00 இலங்கை ரூபா தொகைக்கு மட்டக்களப்பு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயருக்கு வழங்கப்பட்ட விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது "நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதாகவும்" விலைமனு ஆவணத்தில் தரப்பட்ட வடிவத்திலும் இருத்தல் வேண்டும்.
11. விலைமனு திறக்கப்படும் சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.
12. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.05.27 ஆம் திகதி மு.ப. 11.00க்கு இடம்பெறும்.
13. பிராந்திய பெறுகைக் குழுவின் முடிவு இறுதியான முடிவாகும். பிராந்திய பெறுகைக் குழுவுக்கு தமது சொந்த முடிவாக எந்த ஒரு ஒற்றை அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்க அதிகாரம் உள்ளது.
14. 065-2222997 என்ற இலக்கத்தில் இருந்து எந்த ஒரு தெளிவினையும் பெற முடியும்.

**தலைவர்
பிராந்திய பெறுகைக் குழு
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்
மட்டக்களப்பு.**
2024.05.13



## விலைமனுக்கோரல்

### வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

**விலைக்கேள்வி இலக்கம்: 110/T/2023**

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக டிஜிட்டல் திரைகள் வழங்கீடு மற்றும் நிறுவுதல்**
**(Supply, Installation of Digital Screens at Bandaranaike International Airport)**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக டிஜிட்டல் திரைகள் வழங்கீடு மற்றும் நிறுவுவதற்காக விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

விலைக்கேள்வி ஆவண இணைகோப்பு மீள திருப்பிச் செலுத்தப்படாத ரூபா மூவாயிரத்து ஐந்நூறு (ரூபா 3,500.00) காசாக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்கு செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன் அதற்காக விலைக்கேள்வியாளரால் எழுத்துமூலமான கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவினால் 2024.05.14 ஆந் திகதி முதல் 2024.06.03 ஆந் திகதி வரை ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்களை வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2024.06.04ஆந் திகதி செவ்வாய் பி.ப 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் உடனடியாக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளை திறக்கும் சந்தர்ப்பத்தில் அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்விகள் முன்வைத்தலுடன் தொடர்புடைய தெளிவுபடுத்தல்கள் 2024.05.21ஆம் திகதி மு.ப 10.00 இற்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் அமைந்துள்ள புதிய நிர்வாகக் கட்டிடத்தின் கலந்துரையாடும் கூடத்தில் நடாத்தப்படும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியிற்கு கேள்வியின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா இரண்டு இலட்சம் (ரூபா 200,000/-) பெறுமதிவாய்ந்த வங்கி பிணை முறி, விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் தொலைபேசி இலக்கம் 011-2264103 அழைப்பதன் மூலம், head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் அல்லது www.airport.lk இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,
வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,
பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,
கட்டுநாயக்க**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் | எதிர்பாரா செலவுகள் இன்றி பொறியியலாளரின் மதிப்பீடு (ரூ. மில்) | CIDA தரம் | விலைக் கோரல் பிணை முறி (ரூபாவில்) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/SP/1500KM/14 | கோதியவாதை வீதி, மேலாக ABC பரப்புதல் மற்றும் சிறுகற்கள் மற்றும் தாரிடுதல் | 7.97 | C7 மற்றும் C6 | 100,000.00 | 91 |
| RDA/SP/1500KM/15 | சமத்தானை வீதி (0+000 - 0+500km) (அரியன் செம்படு வீதி). மேலாக ABC பரப்புதல் மற்றும் சிறுகற்கள் மற்றும் தாரிடுதல் | 6.64 | C7 மற்றும் C6 | 80,000.00 | 91 |
| RDA/SP/1500KM/16 | வீரபத்திரர் கோயில் வீதி, மேலாக ABC பரப்புதல் மற்றும் சிறுகற்கள் மற்றும் தாரிடுதல் | 5.29 | C7 மற்றும் C6 | 64,000.00 | 91 |
| RDA/SP/1500KM/17 | சதையகாடு வீதிக்கு சிறுகற்கள் மற்றும் தாரிடுதல் | 4.79 | C7 மற்றும் C6 | 55,000.00 | 91 |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 மே 13ஆம் திகதி முதல் 2024 மே 27ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் **www.rda.gov.lk** எனும் இணையதள பக்கத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

---

# பெறுகை அறிவித்தல்

## அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம இலங்கை

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு இலங்கை நிர்மாணம் மற்றும் பயிற்சியளிக்கும் நிறுவனத்தில் பதிவைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2024-05-27ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

மேற்படி முகவரியிலுள்ள நிறுவனப் பிரிவில் 2024-05-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கேள்விதாரர்கள் தமது வேண்டுகோள் கடிதம், தகைமைகளை நிரூபிக்கக்கூடிய சாட்சிகள் மற்றும் கேள்விக் கட்டணத்தைச் செலுத்தியமைக்காக அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| ஆவணக் கோவை இலக்கம் | செயற்றிட்டம் | தகுதிகள் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | கேள்விப் பிணை முறியின் பெறுமதி | சராசரி மதிப்பீட்டுத் தொகை ரூபா. மில் |
|---|---|---|---|---|---|
| EH/TEN/17/2024 | RENOVATION OF DOCTOR'S QUARTERS NO 04 | C-8, C7 AND C6 | 2,000.00 | 131,000.00 | 8.74 M |
| EH/TEN/20/2024 | RENOVATION OF DOCTOR'S QUARTERS NO 08 | C-9, C8 AND C7 | 2,000.00 | 74,000.00 | 4.94 M |

மேலதிக விபரங்களை தயவு செய்து பணிப்பாளர், அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம எனும் முகவரியில் விசாரித்தறியலாம். தொலைபேசி இல. 011-2840233. எவ்வித அறவீடுகளும் இன்றி கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தவிசாளர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**அபேக்ஷா வைத்தியசாலை,**
**மஹரகம.**

---

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

### 01 தொன் வைபிரேடிங் ரோல் மற்றும் பிளேட் கம்பெக்டர் இயந்திரத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக வாடகை அடிப்படையில் 01 தொன் வைபிரேடிங் ரோல் மற்றும் பிளேட் கம்பெக்டிங் இயந்திரத்தை வழங்கப் பெற்றுக்கொள்வதற்காக வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இல. | விபரம் | கேள்விப் படிவக் கட்டணம் (அதிகார சபையில் பதிவு செய்துள்ளவர்கள் தவிர) | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | பணமாக | வங்கிப் பிணை முறி மூலமாக |
| PRDA/WP/PRO/ 2024/26 | நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக வாடகை அடிப்படையில் 01 தொன் வைபிரேடிங் ரோல் மற்றும் பிளேட் கம்பெக்டிங் இயந்திரத்தை பெற்றுக்கொள்ளல் | ரூபா 1,000.00 + VAT + SSCL (ஒரு அலுவலகத்திற்கு) | ரூபா 6,000.00 | ரூபா 12,000.00 |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2024.05.13ஆம் திகதியிலிருந்து 2024.05.27ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகாரசபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2024-05-28ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் அன்றைய தினமே அவ்வேளையிலேயே இவ்வலுவலகத்தில் இடம்பெறும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-2321980**

---

# அறிவித்தல்

## தனியார் துறையில் தற்போது செயல்நிலை சேவையில் உள்ள தாதியர்/ தாதியர் உத்தியோகத்தர்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்

1988ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க மற்றும் 2005ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க (திருத்தப்பட்ட) இலங்கை தாதியர் சபை சட்டத்தின் பிரகாரம் இலங்கை தாதியர் சபையின் எதிர்வரும் 03 வருடங்களுக்காக வெற்றிடமாகவுள்ள தனியார் துறைக்கான தாதியர் சபை பிரதிநிதியொருவரை தெரிவு செய்து நியமித்துக்கொள்வதற்கு இலங்கை தாதியர் சபை திட்டமிட்டுள்ளது. இதற்காக இலங்கை தாதியர் சபை அல்லது இலங்கை மருத்துவ சபையின் பதிவைப் பெற்றுள்ள தாதியர் / தாதியர் உத்தியோகத்தர்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை தாதியர் சபை தீர்மானித்துள்ளது.

உங்கள் நிறுவனத்தில் செயல்நிலை சேவையில் உள்ள தாதியர் / தாதியர் உத்தியோகத்தர்களின் தகவல்களை பின்வரும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் பூர்த்தி செய்து 2024-06-03ஆம் திகதிக்கு முன் slnc@sltnet.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அறிவிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

''பதிவாளர்'' இலங்கை தாதியர் சபை, 1ஆம் மாடி, அடிப்படைக்குப் பின்னரான தாதியர் கல்லூரி, ரீஜன்ட் வீதி, கொழும்பு-10.

| முழுப் பெயர் | தேசிய அடையாள அட்டை இல. | தற்போது சேவையாற்றும் வைத்தியசாலை | பதவி | இலங்கை தாதியர் சபையின் பதிவிலக்கம் | இலங்கை மருத்துவ சபையின் பதிவிலக்கம் | நிறுவனத் தலைவரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

மேலும், எக்காரணத்தைக் கொண்டும் இந்த காலப்பகுதி நீடிக்கப்பட மாட்டாது எனவும், இந்தத் தகவல்களை வழங்காதிருப்பதனால் ஏற்படும் சிரமங்கள் தொடர்பில் இலங்கை தாதியர் சபை பொறுப்புக் கூறாது எனவும் கவனத்துடன் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**இலங்கை தாதியர் சபை.**

---

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

### டயர் மற்றும் டியூப்களைக் கொள்வனவு செய்தல்

**விலைமனு இல. PRDA/WP/PRO/2024/28**

இந்த அதிகாரசபையின் சகல அலுவலகங்களுக்கான வாகனம் மற்றும் இயந்திராதிகளுக்குத் தேவையான டயர்கள் மற்றும் டியூப்களை வழங்குவதற்காக இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | விபரம் | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|
| | | | பணமாக | வங்கிப் பிணை முறி மூலமாக |
| PRDA/WP/PRO/ 2024/28 | அதிகார சபையின் சகல அலுவலகங்களுக்கான வாகனம் மற்றும் இயந்திராதிகளுக்குத் தேவையான டயர்கள் மற்றும் டியூப் வகைகளை (30 வகைகள்) மற்றும் அளவுகள் கேள்விப் படிவத்தில் தரப்பட்டுள்ளன. | ரூபா 2,000.00 + VAT + SSCL | ரூபா 60,000.00 | ரூபா 120,000.00 |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2024.05.13ஆம் திகதியிலிருந்து 2024.05.28ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணமான ரூபா 1,100.00 + VAT + SSCL செலுத்தி (அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர) இவ்வதிகாரசபையின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இந்தப் பெறுகைக்குத் தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை 50 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் வேளைகளில் கேள்விதாரரினால் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இந்தக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் 2023-05-29ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-2321980**

---

# கேள்வி கோரல் அறிவித்தல்

## விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் திணைக்களத்திற்குத் தேவையான கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**01. கொள்வனவுகள்**

| விடய இல. | விடயம் | விலைமனு பாதுகாப்பு தொகை (ரூபா) | விலைமனு மீளப் பெறமுடியாத கட்டணம் (ரூபா) | விலை. மனு வழங்கும் காலம் | விலைமனு திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1.1 | வருடாந்த தேவைப்பாடுகளின் கொள்வனவு - விலங்கு வைரவியல் ஆய்வுகூடம் (AVL) | 40,000/- | 3,500/- | 2024.05.13 முதல் 2024.06.03 வரை | 2024.06.04 மு.ப. 11.00 |
| 1.2 | வருடாந்த தேவைப்பாடுகளின் கொள்வனவு - பற்றீரியாவியல் - 2024 | 69,000/- | 3,500/- | | |
| 1.3 | வருடாந்த தேவைப்பாடுகளின் கொள்வனவு – CVIC - 2024 | 69,000/- | 3,500/- | | |
| 1.4 | வருடாந்த தேவைப்பாடுகளின் கொள்வனவு - மூலக்கூற்று உயிரியல் - 2024 | 35,000/- | 3,000/- | | |
| 1.5 | ஆய்வு தேவைப்பாடுகளுக்கான கொள்வனவு - பற்றீரியாவியல் மற்றும் நோயியல் - 2024 | 43,000/- | 3,500/- | | |
| 1.6 | ஆய்வு தேவைப்பாடுகளுக்கான கொள்வனவு - புல் மற்றும் தீவனம் | 25,500/- | 2,500/- | | |
| 1.7 | வருடாந்த தேவைப்பாடுகளின் கொள்வனவு - பால் தொழில்நுட்ப ஆய்வுகூடம் - 2024 | 40,000/- | 3,500/- | | |
| 1.8 | காளை இறக்குமதிக்கான கேள்வி - 2024 | 900,000/- | 15,000/- | | |

01. கேள்விப் பத்திரங்கள் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிதிப் பணிப்பாளர் பணிமனையில் இருந்து அலுவலக நேரத்தில் (மு.ப 9.00 முதல் பி.ப 3.00 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.
02. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை முடிவுத் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது நிதிப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுல் இடலாம். விலைமனுக்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விடயத்தின் பெயரையும் மற்றும் விடயத்தின் இலக்கத்தையும் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
03. மேலதிக தகவலுக்காக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் இணையதளத்தை பார்வையிடவும். (www.daph.gov.lk)

**பணிப்பாளர் நாயகம்/தலைவர் (தி.பொ.கொ.கு)**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**
**இலக்கம் 1020, த.பெ.இலக்கம் 13,**

**தொலைபேசி இல. : 081-2388197/081-2385227**
**081-2388120/081-2388189**
**081-2385701 நீடிப்பு 290/291**

---

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

## போதனா வைத்தியசாலை - களுத்துறை

# கேள்விக்கான அழைப்பு

01. களுத்துறை போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகளுக்கான அழைப்பு விடுக்கப்படுகின்றன.

| கேள்வி இணைப்பு இலக்கம் | கேள்விப் பெயர் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| THK/AG/Pro01/2024 | Supply, Delivery, Installation and Commissioning of 60 Air Condition Machines | 3,000.00 | 140,000.00 |
| THK/FIN/FD/2024/01 | Supply, Delivery and Installation of 20 desktop Computers | 2,000.00 | 40,000.00 |

02. கேள்வி கோரல் தேசியபோட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் நடத்தப்படும்.
03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை போதனா வைத்தியசாலை, களுத்துறை கணக்காளரிடம் பெற்றுக் கொள்ளக் கூடியதுடன் கேள்வி ஆவணங்களை மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு செலுத்திய பின்னர் 2024.05.13 முதல் 2024.05.30 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் கொள்வனவு செய்யலாம்.
04. கேள்விகளைச் சமர்ப்பிக்கும்போது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, களுத்துறை பெயரில் 2024.09.30 வரை செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த இலங்கைக்குள் செயற்படும் வர்த்தக வங்கியிலிருந்து மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்குச் சமமான கேள்விப் பிணையொன்றை பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு வேறு வேறாக இரு உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி பொறியிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் கேள்வி இணைப்பு இலக்கம் மற்றும் கேள்விப் பெயரைக் குறிப்பிட்டு 2024.05.31 மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம்.
06. தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. மேலதிக விபரங்களுக்கு களுத்துறை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் 034-2222261/62, 034-2226619, 034-221952ஐ அழையுங்கள்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**களுத்துறை.**

---

# பெறுகை அறிவித்தல்

## விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
## தேசிய இளைஞர் படையணி

### தேசிய இளைஞர் படையணியின் மாகாண அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக 09 மாத காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் 09 வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல் – 2024/2025

**தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் இல. - 03**

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய இளைஞர் படையணியின் பின்வரும் 09 மாகாண அலுவலகங்களுக்குத் தேவையான வாகனங்களை 2024-07-01ஆம் திகதி முதல் 2025-03-31ஆம் திகதி வரையான 09 மாத காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுள்ள வாகன வழங்குநர்களிடம்/நிறுவனங்களில் இருந்து 2024-05-13ஆம் திகதி முதல் 2024.06-04ஆம் திகதி மு.ப. 11.00 வரை இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | மாகாண அலுவலகம் | அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 01 | வட மாகாண அலுவலகம் | வவுனியா தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 02 | தென் மாகாண அலுவலகம் | வீரகெட்டிய தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 03 | மேல் மாகாண அலுவலகம் | யக்கல தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 04 | கிழக்கு மாகாண அலுவலகம் | திருகோணமலை தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 05 | வடமத்திய மாகாண அலுவலகம் | கெக்கிராவ தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 06 | வடமேல் மாகாண அலுவலகம் | வாரியபொல தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 07 | சபரகமுவ மாகாண அலுவலகம் | கேகாலை தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 08 | ஊவா மாகாண அலுவலகம் | பண்டாரவளை தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |
| 09 | மத்திய மாகாண அலுவலகம் | செங்கடகல தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் |

02. குறித்த சேவையை விலைக்கோரல் மாதிரிப் படிவத்தில் இணைக்கப்பட்டுள்ள விபரங்களின் பிரகாரம் வழங்குதல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு மீளளிக்கப்படாத 1000.00 ரூபா விலைமனுக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். (ஒவ்வொரு மாகாணத்திற்கும் வெவ்வேறாகக் கட்டணம் செலுத்தி விலைமனுக்களைக் கொள்வனவு செய்தல் வேண்டும்) அந்தத் தொகையை 2024.05.13ஆம் திகதி முதல் 2024.06.03ஆம் திகதி வரையான அரச அலுவலக வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் தேசிய இளைஞர் படையணி தலைமை அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவின் சிறாப்பருக்குச் செலுத்திய பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்து விலைமனுக்களை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் தேசிய இளைஞர் படையணி தலைமையகத்தின் பாதுகாப்புப் பிரிவில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
03. முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் தெளிவாக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் முத்திரைக்குறி பொறியிடப்பட்ட விலைமனுக்களை நகல் பிரதியுடன் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு (கீழ்நிலை), தேசிய இளைஞர் படையணி தலைமையகம், இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு 2024.06.04ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்பலாம் அல்லது தேசிய இளைஞர் படையணியின் தரை மாடியில் பிரதான கேட்போர் கூடத்திற்கு அருகில் வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கள் உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம். அன்றைய தினமே அதாவது 2024.06.04ஆம் திகதி விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டவுடன் தேசிய இளைஞர் படையணி தலைமையக கேட்போர் கூடத்தில் அந்த விலைமனுக்கள் திறக்கப்படும்.
04. விலைமனுக்களுடன் விலைக்கோரல் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் மூலப் பிரதியுடன் விலைமனுதாரரால் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் அதாவது 2024-06-04ஆம் திகதி முதல் 2024-09-02ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் தலைவர், தேசிய இளைஞர் படையணி, இல. 420, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு - 07 என்ற பெயரில் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு மாகாணத்திற்கும் நான்காயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 4,500.00) பெறுமதியுடைய விலைக்கோரல் பிணைமுறியொன்றை ஒவ்வொரு மாகாணத்திற்கும் வெவ்வேறான வகையில் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. விலைமனுக்களுடன் விலைக்கோரல் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் மூலப் பிரதி மற்றும் கீழ்க்காணும் ஆவணங்களின் தெளிவான புகைப்படப் பிரதிகளை விலைமனுதாரரினால் உண்மைப் பிரதியென உறுதி செய்து இணைத்து அனுப்புதல் வேண்டும். தேவையான போது அவ்வாவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்க முடியுமாயிருத்தல் வேண்டும்.
    I. வாகனப் பதிவுச் சான்றிதழின் உண்மைப் பிரதியென உறுதி செய்த புகைப்படப் பிரதியொன்று
    II. முழுமையான காப்புறுதிச் சான்றிதழின் உண்மைப் பிரதியென உறுதி செய்த புகைப்படப் பிரதியொன்று
    III. இந்த வருடத்திற்கு இயைபான வாகனத்தின் வருமான அனுமதிப் பத்திரத்தின் உண்மைப் பிரதியென உறுதி செய்த புகைப்படப் பிரதியொன்று
    IV. வெட் வரிக்காக பதிவுசெய்திருப்பின் அச் சான்றிதழின் உண்மைப் பிரதியென உறுதிசெய்த புகைப்படப் பிரதியொன்று
06. 2024-05-21ஆம் திகதி மு.ப. 11.00 இற்கு தேசிய இளைஞர் படையணி தலைமையகத்தில் முன் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் (Pre-Bid Meeting) இடம்பெறும்.
07. சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல்கள் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் அதாவது 2024-06-04ஆம் திகதி முதல் 2024-08-19ஆம் திகதி வரையான 77 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.
08. மேற்படி 4 மற்றும் 5ஆம் இலக்கங்களில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிக்காத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
09. இதுபற்றிய இறுதி தீர்மானத்தை தேசிய இளைஞர் படையணி திணைக்கள பெறுகைக் குழு (கீழ்நிலை) தன்னகத்தே கொண்டுள்ளது.
10. இதுபற்றிய விசாரணைகள் இருப்பின் 011-2688885/0112690294 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தேசிய இளைஞர் படையணியின் மேலதிக பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) அவர்களைத் தொடர்புகொள்ளலாம்.

**திணைக்களப் பெறுகைக் குழு (கீழ்நிலை),**
**தேசிய இளைஞர் படையணி தலைமையகம்,**
**இல - 420, பௌத்தாலோக்க மாவத்த,**
**கொழும்பு - 07.**
2024-05-13.

---

## வ/ப மஸ்கெலிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - மஸ்கெலிய

### லொறியை விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல்

**வகை** - 1618 வகைக்கு உரித்தான லங்கா அசோக் லேலண்ட்
- Lanka ashoklyeland

**இலக்கம்** - LP-3196
**கொள்வனவு** - 17 தொன்

கேள்விப் பத்திரங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2024.06.06.

விசாரணைகள் மற்றும் பரீட்சிப்பதற்கு வார நாட்களில் மு.ப. 9.30 - பிப. 5.00 வரை.

**தொ.பே. இலக்கம்:**
**052-2277360, 071-3467226**
**071-6546380**

---

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் - ஹம்பாந்தோட்டை

### மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

மக்கள் பங்கி ஹம்பாந்தோட்டை பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் பின்வரும் கிளைகள் / சேவை மையங்களில் 28.02.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் 12.06.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் இடத்தில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை செய்யப்படும் திகதி 13.06.2024**

| ஏலவிற்பனை செய்யப்படும் இடம் | தங்காலை கிளை - அரங்கம் |
|---|---|
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | ஹம்பாந்தோட்டை, தங்காலை, அம்பலாந்தோட்டை அங்குணுகொலபெலஸ்ஸ், சூரியவெவ, மித்தெனிய, ரன்ன, வீரகெட்டிய, வலஸ்முல்லை |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | வீரவில, தங்காலை, ஹுங்கம, கட்டுவன |

இந்த ஏல விற்பனையை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி, பிராந்திய தலைமைக் காரியாலயம் . ஹம்பாந்தோட்டை,**
**தங்காலை கிளை 12 ஆம் மாடி, 164A, மாத்தறை விதி, தங்காலை**
**தொலைபேசி இல. 047-2220902 / 0472220903**

www.peoplesbank.lk 1961
PEOPLE'S BANK
Pride of the Nation

---

# சட்டமா அதிபர் திணைக்களத்தில் கனிஷ்ட உதவி அரச சட்டத்தரணி பதவிக்கான விண்ணப்பங்களைக் கோருதல்

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து 2024-05-10 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலினைப் பார்க்கவும்.

**சிரேஷ்ட பிரதி மன்றாடியார் அதிபதி (நிருவாகம்)**
**சட்டமா அதிபர் திணைக்களம்**
**கொழும்பு 12.**

---

## 2025 வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

## பிங்கிரிய பிரதேச சபை

1987 இல.15 பிரதேச சபை சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய, 2020.10.29ம் திகதி மற்றும் இல.2199/15 என்ற பிரதேச சபை வரவு - செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் செயற்படுத்தப்படும் விதி இல.06 இன் பிரகாரம் பிங்கிரிய பிரதேச சபையின் செயலாளரான என்னால் 2025ம் ஆண்டின் வரவு - செலவுத்திட்டத்திற்கான அபிவிருத்தி ஆலோசனைகள் பொதுமக்களிடம் இருந்து கோரப்படுவதாக அறிவித்துக்கொள்கிறேன். உங்களது 2025ம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஆலோசனைகளை அல்லது ஆலோசனைகள் 2025 ஜுன் 30ம் திகதிக்கு முன்பு எனக்கு கிடைக்குமாறு தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

**கே.ஆர்.பீ.ஜீ.ஆர்.கருணாநாயக்க**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**பிங்கிரிய**

---

## சொரணாதொட்ட பிரதேச சபை

### 2025ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளல்

சொரணாதொட்ட பிரதேச சபையின் 2025ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதால் இதற்கு உங்களின் முன்மொழிவுகள் இருக்குமானால் 2024-06-30ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அழைப்பு விடுக்கப்படுகின்றது. முன்மொழிகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**சபை செயலாளர்,**
**சொரணாதொட்ட பிரதேச சபை,**
**துங்ஹிந்த, சொரணாதொட்ட, பதுளை.**

**சபை செயலாளர்,**
**சொரணாதொட்ட பிரதேச சபை,**
**துங்ஹிந்த, சொரணாதொட்ட, பதுளை.**
**2024-05-10.**

---

### பிரதேச சபை வரவு செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் செயற்படுத்தப்படும் விதிக் கோவையின் 6(1) பிரிவுடன் சம்பந்தப்பட்ட அதிகாரப் பிரதேசத்தின் பிரஜைகளிடம் விடுக்கப்படும் அறிவித்தல்

2025ம் ஆண்டிற்காக அளவ்வ பிரதேச சபையில் தயாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்ட அறிக்கையின் மூலதன செலவு மதிப்பீட்டுடன் மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்படுத்தப்படுவதற்கு எண்ணியுள்ள ஆலோசனைகள் இருப்பின் 2024.06.30ம் திகதிக்கு முன்பு எனக்கு சமர்ப்பிக்குமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2024.05.07ம் திகதி அளவ்வ பிரதேச சபை தலைமையகத்தில்

**தொலைபேசி 037-2278175**
**பெக்ஸ்: 037-2278747**
**மின்னஞ்சல் முகவரி: alawwa_ps@yahoo.com**

**செயலாளர்**
**பிரதேச சபை**
**அளவ்வ**

---

## பிசுகால் ஏல விற்பனை

### கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம்

எல்.ஓ.எல்.சி. பெக்டர்ஸ் லிமிடெட்
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
இலக்கம்: 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய

பிரதான வர்த்தக இடம்
இலக்கம் 504, நாவல வீதி, ராஜகிரிய

மனுதாரர்

வழக்கு எண்: CHC/778/2019/MR"
நிறைவேற்றுதல் எண்: 15/2022 -எதிராக

01. கெல்ரோ இன்டர்நெசனல் (பிறைவெட்) லிமிடெட், 51 வலயம், புலர்டன் கைத்தொழில் வலயம், நாகொட, களுத்துறை.
02. கல்ஹேனகே மஹேந்திர பெரேரா, இலக்கம் 15, சமரனாயக்க பிளேஸ், களுத்துறை – தெற்கு
03. அங்குலுகஹ கமகே ரத்னா ஜயராணி, இலக்கம் 15, சமரனாயக்க பிளேஸ், களுத்துறை – தெற்கு

பிரதிவாதி

2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி இந்த வழக்கில் உள்ளடக்கப்பட்ட தீர்ப்புக் கூறலின்படி அந்த 01ஆவது, 02ஆவது மற்றும் 03ஆவது பிரதிவாதிகளின் மனுதாரருக்கு அறவிடும்படி கூறி உத்தரவிடப்பட்ட ரூபா 27,806,132/20 தொகை மற்றும் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை 12.5% வருடாந்த வட்டி மற்றும் வழக்கு கட்டணத்தை அறவிடுவதற்கு அந்த 01ஆவது, 02ஆவது மற்றும் 03ஆவது பிரதிவாதிகளின் அசையும் மற்றும் அசையா சொத்துகள் மற்றும் வீடுகள், காணிகள், பொருட்கள், வசூலிக்கப்பட வேண்டி கடன் மற்றும் பொறுப்புகளை தடை செய்து மற்றும் தேவை ஏற்படின் விற்று பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் 01ஆவது, 02ஆவது மற்றும் 03ஆவது பிரதிவாதிகளினால் இந்த வழக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கும் சமரசத்திற்கு அமைய எந்த ஒரு பணமும் செலுத்தாது விலகி சமரசத்தை மீறி இருப்பதால் அந்த 01ஆவது, 02ஆவது மற்றும் 03ஆவது மனுதாரர்களுக்கு எதிராக வெளியிடப்பட்டிருக்கும் நிறைவேற்றுதல் உரிமத்தின் அடிப்படையில் கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் பிரதி பிசுகால் மூலம் 2022 டிசம்பர் 20ஆம் திகதி தடைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் 01ஆவது பிரதிவாதிக்கு சொந்தமான

இங்கு கீழுள்ள அட்டவணையில் விரிவாக குறிப்பிடப்பட்டிருக்கும் அசையும் சொத்துகள் 2024 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் திகதி மு.ப. 11.30க்கு இந்த சொத்துகள் வைக்கப்பட்டிருக்கும் 51 வலயம், புலர்டன் கைத்தொழில் வலயம், நாகொட, களுத்துறை 01ஆவது பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**மேல் குறிப்பிடப்பட்ட அட்டவணை**

| | | |
|---|---|---|
| 01 | கிரவுண்டர் வோல்டின் Dashun shaoe வகை இயந்திரம் (DS 802) | 01 |
| 02 | Time control in sole molding machine (Dasun Ds 606 A) | 06 |
| 03 | Round Knife cutting machine (Sn 1810091) | 01 |
| 04 | Daming shoe machinery (Sn 86-57785103333) | 01 |
| 05 | Shole பிரீசின் Ycq 02 வகை தெளிவற்ற இயந்திரம் | 01 |
| 06 | Wiew Hydralic swing gim cutting (DS 802) | 01 |
| 07 | Zoje வகை தையல் இயந்திரம் (S/N – 110901024) | 01 |
| 08 | Zoje வகை தையல் இயந்திரம் (S/N – 140721007) | 01 |
| 09 | Zoje வகை தையல் இயந்திரம் (S/N – 140601001) | 01 |
| 10 | 5 அடி உயர அபான்ஸ் பே.்.ன் | 01 |
| 11 | Kingrich இன்ஜெக்ஷன் மோல்டின் (பாதணி அடிப் பாகம் உற்பத்தி செய்யும் இயந்திரம்) | 01 |
| 12 | பாதணி அடிப் பாகம் பதப்படுத்து சம் ஒட்டும் இயந்திரம் (வகை தெளிவில்லை) | 01 |
| 13 | Model scj 63x100-50 கொண்ட ட்ரிமின் இயந்திரம் | 01 |
| 14 | Dasun சூ பெசின் இயந்திரம் (Ds 603 Q) | 01 |

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி

பதிவாளர்/ பிரதி பிசுகால்
வர்த்தக உயர் நீதிமன்றம்-கொழும்பு

---

## வாரியபொல பிரதேச சபை

### 2025ம் ஆண்டிற்காக

### வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல்

1982 இல. 15 பிரதேச சபை சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய வடமேல் மாகாண கௌரவ ஆளுநரால் 2020.10.29ம் திகதிய இல. 2199/15 என்ற இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் (அதி விசேட) வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு இருந்த பிரதேச சபை வரவு செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் செயற்படுத்தப்படும் விதி இல. 06இன் பிரகாரம் வாரியபொல பிரதேச சபையினால் 2025ம் ஆண்டுடன் சம்பந்தப்பட்டதாக தயாரிக்கப்படும் வரவு செலவுத்திட்ட அறிக்கை மற்றம் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்படுத்துவதற்கான ஆலோசனைகள் பொதுமக்களிடமிருந்து கோரப்படுகின்றன. உங்களால் அபிவிருத்தி திட்மிடலுக்கு மற்றும் வரவு செலவுத்திட்ட அறிக்கைக்கு உட்படுத்துவதற்கு உத்தேசிக்கின்ற ஆலோசனைகளை 2024.06.30ம் திகதிக்கு முன்பு எனக்கு வழங்குமாறு தயவுடன் அறிவிக்கிறேன்.

| | |
|---|---|
| **அலுவலக முகவரி** | **: பிரதேச சபை, வாரியபொல** |
| **அலுவலக பெகஸ் இலக்கம்** | **: 037-2267275** |
| **மின்னஞ்சல் முகவரி** | **: pwariyapola@gmail.com** |
| **இணையதளம்** | **: www.warips.lk** |

**எல்.எம்.சீ.எஸ்.என்.கே. கலபடகம**
**செயலாளர்,**
**பிரதேச சபை, வாரியபொல**

2024.05.08
**பிரதேச சபை அலுவலகத்தில்**

---

# For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343

---

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# பெறுகை அறிவித்தல்

## அரநாயக்க பிரதேச சபை சபரகமுவ மாகாண சபை

01. கீழ்க்காணும் வேலை விடயத்திற்காக அரநாயக்க பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் 2024.05.13 முதல் 2024.05.31 மு.ப. 10.30 வரை கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இல. | வேலை விடயம் | மதிப்பிடப்பட்ட வேலை பெறுமதி (ரூ. மில்லியன்) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டடணம் (ரூ.) | மீளளிக்கப்படும் கேள்வி பிணை முறி (ரூ.) | ஒப்பந்தப் பதிவு பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | அரநாயக்க திப்பிட்டிய பொது வர்த்தக கட்டிடத் தொகுதியின் தரைமாடியில் மக்கள் வங்கியை நடத்திச் செல்வதற்காக வழங்கவுள்ள பகுதியின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்தல் | 11.24 | 5,000.00 | 112,500.00 | C5/C6 |

02. இக் கேள்வி கோரல் திறந்த போட்டி பெறுகை முறைமையின் கீழ் இடம்பெறுவதுடன் இக் கைத்தொழிலின் பெறுமதி ரூ. மி. 50 இற்கு குறைவான படியால் அரச நிதி சுற்றுநிருப இல. 04/2016(ii) மற்றும் 04/2016(iii) இன் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் குறித்த (CIDA) தரப்படுத்தல் முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு கட்டிட நிர்மாணத்திற்காக கேள்விதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அச் சுற்றுநிருபத்திற்கு அமைவாக பின்னர் விநியோகிக்கப்படும். அரச நிதி சுற்றுநிருபம் 03/2020, 3/2020(i) மற்றும் 4/2016(iv) என்ற சுற்றுநிருபத்தின் பெறுகை விடயங்களும் பொருந்தும்.

03. 2024.05.13 முதல் 2024.05.30 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்த்து மேற்குறிப்பிட்டவாறு கட்டணங்களை செலுத்திய பின்னர் அரநாயக்க பிரதேச சபை அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. சகல கேள்விதாரர்களும் இக் கைத்தொழிலுக்காக மேற்படி கேள்வி பிணைமுறி பெறுமதியுடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பிணைமுறியாக அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணை முறியொன்றை 2024.05.31 முதல் 2024.09.26 வரை செல்லுபடியாகுமாறு செயலாளர், அரநாயக்க பிரதேச சபையை பயனாளியாக பெயர் குறிப்பிட்டு பெற்றுக் கொண்ட கேள்விப் பிணைமுறியொன்றின் மூலம் அல்லது குறித்த கைத்தொழிலின் பெயரில் செலுத்தப்பட்ட கேள்விப் பிணைத் தொகையாக அரநாயக்க பிரதேச சபைக்குச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி ஆவணத்துடன் பிணை முறியை சமர்ப்பிக்கும்போது காசு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் அல்லது கேள்விப் பிணை முறியின் மூலப்பிரதியை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை அறனாயக்க பிரதேச சபைக்கு வருகை தந்து அல்லது தொ.பே. இல. 035-2258876, 035-2258095 இடம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படுவோருக்கு வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

08. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.05.31 மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன் அரநாயக்க பிரதேச சபை அலுவலகத்தில் பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்துடன் விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழின் பெயர் மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

07. 2024.05.31 மு.ப. 10.35 இற்கு அரநாயக்க பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

08. கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை அரநாயக்க பிரதேச சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

09. சகல விண்ணப்பங்களும் 2024.08.28ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதேச சபை, அரநாயக்க.**
2024.05.11

# பெறுகை அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை - குருநாகல்

குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுவினால் பின்வரும் மருத்துவ / சத்திரசிகிச்சை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| # | இலக்கம் | மருத்துவ உபகரணங்கள் | எண்ணிக்கை | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | மீளளிக்கப் படாத விலைக் கோரல் ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1. | THK/FS02/2024/02 | Ultrasound Scan Machine - High End | 1 | 200,000.00 | 6,000.00 |
| 2. | THK/FS02/2024/03 | ENT Workstation with Stroboscope | 1 | 250,000.00 | 6,000.00 |
| 3. | THK/FS02/2024/04 | Flexible HD Bronchoscope | 1 | 100,000.00 | 6,000.00 |
| 4. | THK/FS02/2024/06 | Anesthetic Machine | 1 | 80,000.00 | 6,000.00 |
| 5. | THK/FS02/2024/07 | Intra Operative Monitoring System | 1 | 120,000.00 | 6,000.00 |

02. இதன் பொருட்டு தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை NMRA பதிவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டுள்ள நிறுவனங்கள் மட்டுமே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பப் படிவத்தின் பொருட்டு மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை இந்த வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் இயைபுடைய விண்ணப்பப் படிவங்கள் மற்றும் தொழில்நுட்ப விபரக்குறிப்புகளை கணக்குப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். 2024-06-13ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை மட்டும் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

03. 5,000,000.00 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான விலைமனுக்களுக்கு PCA3 சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும் வரையில் எந்தவொரு அரசாங்க வங்கியிலோ அல்லது தனியார் வங்கியிலோ வைப்புச் செய்து விலைமனுப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. சகல விண்ணப்பப் படிவங்களும் 2024.06.14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, குருநாகல் எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறல்லாவிடில் இந்த வைத்தியசாலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உபகரணத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. இது தொடர்பான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-06-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

07. 2024-06-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வைத்தியசாலையின் புதிய கேட்போர் கூடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுமென்பதுடன் அச்சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

08. இந்தக் கேள்வி தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

09. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 037-2222261 நீடிப்பு 2261 எனும் தொலைபேசி இலக்கத்தில் கணக்குப் பிரிவைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். (இந்த அறிவித்தல் www.kurunegalahospital.health.gov.lk எனும் வைத்தியசாலையின் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குருநாகல்.**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு**

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்திற்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டத்தின் சார்பாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் | தற்செயலான செலவுகள் சகிதம் பொறியிய லாளரின் மதிப்பீடு (ரூ. மில்) | CIDA தரம் (பெருந் தெருக்கள்) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா மில்.) | ஒப்பந்தக் காலம் (நாட்காட்டி நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/KMTT/AR/GOSL/L1 | கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டத்தின் அணுகல் வீதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்கள் (லொட் 01) | 1,250 | Ci அல்லது அதற்கு மேல் | 18.0 | 365 |

2. கண்டி மாவட்டத்தில் கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டத்தின் அணுகல் வீதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்களின் (லொட் 01) பின்வருபவை இந்த வேலையில் உள்ளடங்குகின்றன.
   - கொழும்பு - கண்டி வீதி (A001) (113+760km முதல் 115+180m வரை).
   - அணுகல் வீதி - உயர் பாடசாலை சந்தி முதல் KMTT வரை
   - சங்கபோதி மாவத்தை (0+000 - 0+310)
   - கண்டி வைத்தியசாலை வீதியைச் சுற்றி போகம்பர மைதானம் (0+000 - 0+635)
   - Bogambara Underpass
   - எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை (0+145 – 0+300)
3. விலைக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் நடாத்தப்படும்.
4. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக தெரிவு செய்யப்படும் வெற்றிகரமான விலைமனுதாரர் தற்போது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் (CIDA) பெருந்தெருக்கள் விசேடத்துவத்தில் மேற்கூறிய அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தரத்தில் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பின்வரும் அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024-05-14ஆம் திகதி முதல் விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

   செயற்றிட்டப் பணிப்பாளர், கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, எம்பில்மீகம, பிலிமத்தலாவ

   தொலைபேசி: 081 2056361 மற்றும் தொலைநகல்: 081 2056360
6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-05-30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு எம்பில்மீகம, பிலிமத்தலாவ, வீதி அபிவிருத்தி அதிகார சபை, கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம், செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் தேவையானால் அதற்குப் பின் தள விஜயம் ஏற்பாடு செய்யப்படும்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தின் செல்லுபடியாகும் பண வைப்புச் சீட்டை (பண வைப்புச் சீட்டின் ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயர் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்) 2024-05-14ஆம் திகதி முதல் 2024-06-18ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை, கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம், செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

   விலைமனு ஆவணங்களுக்காக மீளளிக்கப்படாத 100,000.00 ரூபா (VAT சகிதம்) கேள்விக் கட்டணத்தை பின்வரும் வங்கிக் கணக்கிற்கு ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும்.

   அ. கணக்கின் பெயர் : செயலாளர், போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டத்தின் அணுகல் வீதி அபிவிருத்தி

   ஆ. கணக்கிலக்கம் : 7041595

   இ. வங்கியின் பெயர் : இலங்கை வங்கி, பிலிமத்தலாவ

   விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது செல்லுபடியாகும் பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அது பரீட்சித்துப் பார்க்கப்படும். செல்லுபடியாகும் பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதி சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

   1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், சித்திகரமான கேள்விதாரர்கள் அல்லது முகவர்கள் மாத்திரம் கம்பனிகளின் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
8. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது 2024-11-19ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. இரு பிரதிகளிலான விலைமனுக்களை 2024-06-18ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு, போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, 7ஆம் மாடி, ''மஹநெகும மஹமெதுர'', டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் 2024-10-22ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு,**
**7ஆம் மாடி, ''மஹநெகும மஹமெதுர'',**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**

# இலங்கை வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளின் பெயர்களுக்கு எதிரேயுள்ள திகதிகளில் அடகு வைக்கப்பட்டு அதற்கடுத்த கூட்டிலுள்ள திகதிகள் வரை மீட்கப்படாதுள்ள நகைகள் அட்டவணையின் இறுதிக் கூட்டில் உள்ள திகதியில் அதே கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். (ஏலங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.)

| இலங்கை வங்கி | நகைகள் அடகு வைக்கப்பட்டுள்ள காலப்பகுதி | ஏலவிற்பனைத் திகதியும் இடமும் |
|---|---|---|
| சிலாபம்<br>கல்பிட்டி<br>மதுரங்குளி<br>நுரைச்சோலை<br>புத்தளம்<br>மாதம்பை<br>வென்னப்புவ<br>பலவிய<br>உடப்பு<br>மாரவில<br>தொடுவாவ<br>ஆனைவிழுந்தான்<br>கட்டுநேரிய<br>மஹவ<br>கொச்சிக்கடை<br>வய்க்கால்<br>தங்கொட்டுவ<br>கிரிமெட்டியான<br>பிங்கிரிய<br>நாத்தாண்டிய | 15.03.2023 வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் (12 மாதங்கள்) மீட்பதற்கான இறுதித் திகதி 14.06.2024<br><br>15.03.2023 வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் (6 மாதங்கள்) மீட்பதற்கான இறுதித் திகதி 14.06.2024<br><br>15.03.2023 வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் (3 மாதங்கள்) மீட்பதற்கான இறுதித் திகதி 14.06.2024 | 15.06.2024<br>சிலாபக் கிளை |
| குருணாகல் மேற்தரக் கிளை<br>2ஆம் நகர மேற்தரக் கிளை<br>ஹிரிப்பிட்டிய<br>மாவத்தகம<br>மெல்சிறிபுர<br>ரிதிகம<br>இப்பாகமுவ<br>பொல்பித்திகம<br>மல்கடுவாவ<br>பரகஹதெனிய<br>கும்புக்கெட்டே<br>வெல்லாவ<br>வயம்ப மத்தி | 15.03.2023 வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் (12 மாதங்கள்) மீட்பதற்கான இறுதித் திகதி 14.06.2024<br><br>15.03.2023 வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் (6 மாதங்கள்) மீட்பதற்கான இறுதித் திகதி 14.06.2024<br><br>15.03.2023 வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் (3 மாதங்கள்) மீட்பதற்கான இறுதித் திகதி 14.06.2024 | 15.06.2024<br>குருணாகல் மேற்தரக் கிளை |
| குளியாப்பிட்டிய மேற்தரக் கிளை<br>அலவ்வ<br>கிரிஉல்ல<br>வெல்பல்ல<br>பொல்கஹவெல<br>பொத்துஹர<br>நாரம்மல<br>பன்னல<br>கட்டுப்பொத்த<br>தம்பதெனியா<br>மாக்கந்துர<br>தும்மலசூரிய<br>குளியாப்பிட்டிய 2ஆம் நகரக் கிளை<br>ஹெட்டிபொல<br>வீரபொக்குன<br>வீரம்புகெதர | 15.03.2023 வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் (12 மாதங்கள்) மீட்பதற்கான இறுதித் திகதி 14.06.2024<br><br>15.03.2023 வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் (6 மாதங்கள்) மீட்பதற்கான இறுதித் திகதி 14.06.2024<br><br>15.03.2023 வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் (3 மாதங்கள்) மீட்பதற்கான இறுதித் திகதி 14.06.2024 | 16.06.2024<br>நாரம்மல கிளை |
| கல்கமுவ<br>வாரியபொல<br>நிக்கவரட்டிய<br>மாஹோ<br>கோபெய்கணே<br>ஆனைமடு<br>அம்பன்பொல<br>பள்ளம<br>சாலியவேவ<br>மதவக்குளம<br>ஆண்டிகம | 15.03.2023 வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் (12 மாதங்கள்) மீட்பதற்கான இறுதித் திகதி 14.06.2024<br><br>15.03.2023 வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் (6 மாதங்கள்) மீட்பதற்கான இறுதித் திகதி 14.06.2024<br><br>15.03.2023 வரை அடகு வைக்கப்பட்ட நகைகள் (3 மாதங்கள்) மீட்பதற்கான இறுதித் திகதி 14.06.2024 | 16.06.2024<br>நிக்கவரட்டிய கிளை |

மேற்குறித்த ஏலங்களை இரத்துச் செய்யும், பிற்போடும், ஒன்றிணைக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

**இலங்கை வங்கி**
**பிரதிப் பொது முகாமைளாயர்,**
**அபிவிருத்தி வங்கியியல் மற்றும் கிளை கடன் செயற்பாடுகள் பிரிவு II,**
**தலைமை அலுவலகம், கொழும்பு 01.**
**தொலைபேசி :- 011 2399568, 011 2204545**

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC
தேசத்தின் வங்கியாளர்

# விலைக்கோரலுக்கான அழைப்பு

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

SLECIC

## இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு வாகனம் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்

''இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு வாகனம் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்'' எனும் விடயத்திற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

1. விலைமனுக்களை 2024-05-22ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், நிலை 04, NDB-EDB டவர், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.
2. தலைவர்/முகாமைத்தவப் பணிப்பாளருக்கு வாடகைக்கமர்த்தும் வாகனத்திற்கான விபரக்குறிப்புகள் பின்வருமாறாகும்.

   இயந்திரக் கொள்ளளவு: 1.7 அல்லது அதற்கு மேல்
   ஆசனங்கள் : 05
   எரிபொருள் வகை : ஏதாவது
   வகை : High-end SUV அல்லது கார்

3. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 60 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும். (2024-05-22ஆம் திகதி முதல் 2024-07-21ஆம் திகதி வரை)
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாதிருத்தல் வேண்டும்.
5. சாரதி இன்றி மாதாந்த அடிப்படையில் விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. VAT ஏற்புடையதானால் VAT பதிவு இலக்கத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. வழங்குநர் எரிபொருள் இன்றி வாகனத்தை முழுமையாகப் பராமரித்தல் வேண்டும்.
8. விலைமனுதாரர்கள் குறும் பட்டியலிடப்பட்டதன் பின்னர், வாகனம் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,**
**NDB-EDB டவர், இல. 42, நவம் மாவத்தை,**
**கொழும்பு-02.**
**தொலைபேசி: 0112307524**

# இலங்கை வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளின் பெயர்களுக்கு எதிரேயுள்ள திகதிகளில் அடகு வைக்கப்பட்டு அதற்கடுத்த கூட்டிலுள்ள திகதிகள் வரை மீட்கப்படாதுள்ள நகைகள் அட்டவணையின் இறுதிக் கூட்டில் உள்ள திகதியில் அதே கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். (ஏலங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.)

| கிளை | நகைகள் அடகு வைக்கப்பட்டுள்ள காலப்பகுதி | மீட்பதற்கான இறுதித் திகதி | ஏலவிற்பனைத் திகதி மற்றும் ஏலவிற்பனை இடம் |
|---|---|---|---|
| மத்திய முகாம்<br>பொல்வத்தை<br>அம்பாறை<br>காரைதீவு<br>உகண<br>கொனாகொல்ல<br>மருதமுனை<br>ஹிங்குரானை<br>சம்மாந்துறை<br>மல்வத்தை<br>சாய்ந்தமருது<br>ஒலுவில்<br>நிந்தவூர்<br>அட்டாளைச்சேனை<br>தம்பிலுவில்<br>பொத்துவில்<br>கல்முனை<br>அக்கரைப்பற்று<br>இறக்காமம்<br>நாவிதன்வெளி | 31.03.2023 வரை 12 மாதங்களுக்கு அடகு வைக்கப்பட்ட நகைகள் | 31.05.2024 (வெள்ளிக் கிழமை) | 01.06.2024 & 02.06.2024 (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை)<br>அம்பாறை கிளை |
| வவுணதீவு<br>மட்டக்களப்பு<br>கல்லாறு<br>கரடியனாறு<br>வெல்லாவெளி<br>கொக்கட்டிச்சோலை<br>வாகரை<br>களுவாஞ்சிக்குடி<br>செங்கலடி<br>ஆரையம்பதி<br>மாமாங்கம்<br>ஏறாவூர்<br>வாழைச்சேனை<br>பழுகாமம்<br>கல்லடி<br>ஓட்டமாவடி<br>கிரான்<br>மட்டக்களப்பு நகரக் கிளை<br>காத்தான்குடி | 31.03.2023 வரை 12 மாதங்களுக்கு அடகு வைக்கப்பட்ட நகைகள் | 31.05.2024 (வெள்ளிக் கிழமை) | 02.06.2024 (ஞாயிற்றுக்கிழமை)<br>மட்டக்களப்பு கிளை |
| கந்தளாய்<br>மூதூர்<br>சேருநுவர<br>திருகோணமலை மேற்தரக் கிளை<br>திருகோணமலை நகரக் கிளை<br>கிண்ணியா<br>சீனக்குடா<br>தம்பலகாமம்<br>தோப்பூர்<br>ஆலங்கேணி<br>முள்ளிப்பொத்தானை<br>உப்புவெளி<br>நிலாவெளி<br>புல்மோட்டை<br>மொறவெவ | 31.03.2023 வரை 12 மாதங்களுக்கு அடகு வைக்கப்பட்ட நகைகள் | 31.05.2024 (வெள்ளிக் கிழமை) | 01.06.2024 & 02.06.2024 (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை)<br>திருகோணமலை மேற்தரக் கிளை |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏல விற்பனைகளை இரத்துச் செய்யும், பிற்போடும், ஒன்றிணைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

**இலங்கை வங்கி**
**பிரதிப் பொது முகாமையாளர்**
**அபிவிருத்தி வங்கியியல் மற்றும் கிளை கடன் செயற்பாடுகள் – பிரிவு II**
**தலைமை அலுவலகம்,**
**கொழும்பு 01.**
**தொலைபேசி – 011-2399568 / 011-2204545**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## பிசுகால் ஏல விற்பனை

### கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம்

எல்.ஓ.எல்.சி. பெக்டர்ஸ் லிமிடெட்
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
இலக்கம்: 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய

பிரதான வர்த்தக இடம்
இலக்கம் 504, நாவல வீதி, ராஜகிரிய

வழக்கு எண்: HC (சிவில்) 532/2019/MR — மனுதாரர்

நிறைவேற்றுதல் எண்: 05/22 -எதிராக

"சன்குயின் கார்மன்ட்" என்ற பெயர் வடிவம் மற்றும் வர்த்தகப் பெயரின் கீழ் தனியார் வர்த்தகம் ஒன்றை நடத்தி வரும்
01. ஹேவா தேவகே ஜகத ஜயசுந்தர, இலக்கம் 25/1, ஸ்ரீ சுதர்மாராம வீதி, கௌடான, தெஹிவளை.
02. ரனேபுர தேவகே தர்மபாலி பிரியதர்ஷனி, 474, ஈரியவட்டிய, கிரிபத்கொட, களனி.
03. சிலோன் சன்குயின் பிறைவெட் லிமிடெட் ஈரியவட்டிய, கிரிபத்கொட, களனி.

பிரதிவாதி

2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி இந்த வழக்கில் உள்ளடக்கப்பட்ட தீர்ப்புக் கூறலுக்கு அமைய குறிப்பிடப்பட்ட 01ஆவது மற்றும் 02ஆவது பிரதிவாதிகளிடம் இருந்து மனுதாரருக்கு அறவிடும்படி உத்தரவிடப்பட்ட,

அ. 01ஆவது மற்றும் 02ஆவது பிரதிவாதிகளுக்கு எதிராக ஒன்றாக மற்றும்/ அல்லது வெவ்வேறாக ரூபா 387,832,290.30 தொகை மற்றும் 2019 ஜூன் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை 4% வருடாந்த வட்டியும்

ஆ. இங்கு கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் அசையா மற்றும் அசையும் சொத்துகளும் (மொத்த கையிருப்பு) அவைகளுக்கு சொந்தமான அனைத்து உரிமை சலுகை வீதிகள் மற்றும் இணைப்புகளும் அந்தக் சொத்துகளுக்கு அல்லது அவைகளில் செயற்பாடு அல்லது அவைகளின் அனைத்து பாகங்களுக்கும் 01ஆவது பிரதிவாதியிடம் உள்ள அனைத்து தோட்ட உரிமை நிலை தொடர்பில் உரிமை மற்றும் கோரிக்கை ஆகியவையும் 2019 ஜூன் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் குறிப்பிடப்பட்ட முழுத் தொகையை செலுத்தி முடிக்கும் வரை 4% மாதாந்த வட்டியுடன் ரூபா 387,832,290.30 தொகையை அறவிடுவதற்காக கடப்பாடு பெற்று கீழ்பட்டு இருப்பதாக உத்தரவு மற்றும் தீர்ப்புக் கூறல் ஒன்று 01ஆவது பிரதிவாதிக்கு எதிராக பெற்றுத் தரும்படியும்,

இ. தீர்ப்புக் கூறப்படும் திகதியில் இருந்து 02 மாதங்களுக்குள் அந்த தொகையான ரூபா 387,832,290.30 தொகையை தொகை மற்றும் அந்தத் தொகைக்கான மேலதிய வட்டி மற்றும் கட்டணத்துடன் மனுதாரருக்கு செலுத்தும்படி 01ஆவது பிரதிவாதி கௌரவ நீதிமன்றத்தின் மூலம் உத்தரவாக மற்றும் அந்தக் கொடுப்பனவை மேற்கொள்ள 01ஆவது பிரதிவாதி தவறினால் அந்த அசையா சொத்துகள் பிசுகாலினால்/ கௌரவ நீதிமன்றம் உத்தரவிட்டு நியமித்த அதிகாரம் பெற்ற ஏலதாரர் ஊடாக அந்த விற்பனை நிபந்தனை அடிப்படையில் பகிரங்க ஏல விற்பனையில் விற்கும் உத்தரவை பிறப்பிக்கும்படியும்,

ஈ. அந்த பிசுகால்/ அதிகாரம் பெற்ற ஏலதாரருக்கு கீழ் "குறிப்பிடப்பட்டவாறு கட்டளையிட்டு அதிகாரத்தை தரும்படியும் அதாவது -

i. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த அசையா மற்றும் அசையும் சொத்துகள் (மொத்த கையிருப்பு) அதன் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு விற்பதற்கு முதலில் முன் வைப்பதற்கும் அந்த மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு வாங்குவதற்கு கூறுவிலையிடுவோர் இல்லாவிட்டால் ஆணை ஒன்று வெளியிடப்படும் சந்தர்ப்பத்தில் முடிவு அறிவிக்கப்படுவதன் கீழ் அறவிடப்பட வேண்டிய முழு பணத்திற்கு விற்பதற்கு முன்வைக்கப்படும்படியும் அந்த விற்பனையின்போது கூறுவிலையிடுபவர் இல்லாதபோது அதன் பின் அதிகம் கோரப்படும் கூறுவிலையிடுபவருக்கு அல்லது கூறுவிலையிடுபவர்களுக்கு விற்கும்படியும் மற்றும்

ii. அந்த சொத்துகளை வாங்குவதற்காக கூறுவிலையிடுவதற்கு மனுதாரர் அல்லது மனுதாரர் சார்பில் வேறு ஒரு நபருக்கு இடம் அளிப்பதற்கு மற்றும் பிரதிவாதி வாங்குபவராக மாறினால் மனுதாரர் உரிமை கோர அல்லது கட்டணத்தின் அளவு வரை நன்மையை பெற்றுத்தரும்படியும்

உ. அந்த விற்பனையில் வாங்குபவர் அல்லது வாங்குபவர்கள் விற்பனை நிபந்தனைக்கு அமைய செயற்பட்ட பின் மற்றும் வாங்குபவர் மனுதாரராயின் பிரதிவாதிக்கு சார்புடைய நான்மையை அங்கீகரித்து நீதிமன்ற உத்தரவு ஒன்று முன்வைக்கப்பட்ட பின் மற்றும் வாங்குபவர் அல்லது வாங்குபவர்கள் மூன்றாம் தரப்பினர் அல்லது தரப்பாக இருந்தால் அவர்களுக்காக வாங்கும் விலை முறையான வகையில் நீதிமன்றத்தில் வைப்புச் செய்துள்ளது என்பதை நீதிமன்ற உத்தரவு ஒன்று அல்லது நீதிமன்ற உத்தரவு பிறப்பித்த பின் வாங்குபவர் அல்லது வாங்குபவர்கள் அல்லது வாங்குபவர்களின் பெயருக்கு சட்டத்தின் பிரகாரம் முறையான வடிவத்திலான உறுதி ஒன்று அல்லது ஒப்படைப்பதை எழுதிக் கையொப்பம் இடும்படியும் பிசுகால்/ ஏலதாரருக்கு உத்தரவிட்டு அதிகாரத்தை வழங்கும்படியும்

ஊ. கீழுள்ளவாறு விற்கப்படுகின்ற அடகு சொத்துகள் அதனை கொள்வனவு செய்த மனுதாரருக்கு அல்லது வாங்குபவருக்கு ஒப்படைக்கும்படி பிசுகாலுக்கு உத்தரவிடும்படியும்

எ. விற்பதன் மூலம் கிடைக்கின்ற பணம் மனுதாரரின் உரிமை கோரிய வட்டி மற்றும் கட்டணத்தை செலுத்துவதற்கு பயன்படுத்தும்படியும்.

ஏ. ஏதேனும் கணக்கை பெறுவது தொடர்பிலும் ஏலத்தை நடத்த வேண்டிய நபர் மற்றும் விற்பனை செய்ய வேண்டிய முறை மற்றும் இடம் தொடர்பில் வாங்குபவருக்கு வழங்க வேண்டிய ஒப்படைகளை கொடுக்க வேண்டியது எந்த நபர்களுக்கு என்பது தொடர்பில் விற்பனை நிபந்தனைகள் தொடர்பில் மற்றும் வாங்குபவரின் பெயருக்கு எழுதி கையொப்பம் இட்டு கொடுக்க வேண்டிய கொடுப்பனவுகளின் வடிவங்கள் தொடர்பில் மற்றும் உத்தரவு பிறப்பிக்க வேண்டியது என்று நீதிமன்றம் கருதுகின்ற வேறு ஏதேனும் ஒரு விடயம் அல்லது விடங்கள் தொடர்பில் தேவையான அல்லது பொருத்தப்பாட்டுக்கு அமைய வேறு ஏதேனும் உத்தரவு பிறப்பிக்கும் மற்றும் முன்னர் வழங்கப்பட்ட உத்தரவுகளை மாற்றும் உரிமையும் இந்த வழக்கில் உள்ளடக்கப்பட்ட தீர்ப்பு மூலம் கௌரவ நீதிமன்றத்தினால் கௌரவ நீதிமன்றத்திற்கு தக்க வைக்கும்படியும் மற்றும் மனுதாரருக்கு அறவிடப்பட வேண்டிய பணம் மற்றும் வட்டியுடன் வழக்கு கட்டணத்தையும் அறவிடுவதற்கு அந்த 01ஆவது பிரதிவாதிக்கு சொந்தமான இங்கு குறிப்பிடப்பட்ட மூன்றாவது மற்றும் நான்காவது அட்டவணையில் சிறந்த முறையில் குறிப்பிடப்படும் மொத்த கையிருப்பை தடைக்கு கொண்டுவந்து தேவை ஏற்படின் விற்று மற்றும் அவ்வாறு மொத்த கையிருப்பை தடைக்கு கொண்டவந்து விற்பதன்மூலம் அறவிட முடியாத பிரதிவாதிகள் சொந்தமாக அறவிட வேண்டிய எஞ்சிய ஏதேனும் தொகை ஒன்று இருப்பதாயின் அந்தத் தெகையை அறவிடுவதற்கு 01ஆவது மற்றும் 02ஆவது பிரதிவாதிகளுக்கு சொந்தமான அசையா மற்றும் வீடுகள் பொருட்களை தடைக்கு கொண்டுவந்து தேவை ஏற்படின் விற்பதன் மூலம் பெற வேண்டும் என்றும் 01ஆவது மற்றும் 02ஆவது பிரதிவாதிகளினால் தற்போது இந்த வழக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள சமரசத்திற்கு அமைய ரூபா 59,455,000/- தொகையை மனுதாரருக்கு செலத்தி இருப்பதோடு அதனை குறைத்து அறவிடுவதற்காக அந்த வழக்கில் எனக்கு வழங்கப்பட்டிருக்கும் நிறைவேற்றலின் அதிகாரத்தின் கீழ் மேல் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 02ஆவது பிரதிவாதியான ரனேபுர தேவகே தர்மபாலி பிரியதர்ஷனி என்ற நபருக்கு சொந்தமான இங்கு கீழுள்ள அட்டவணையில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்துகளின் உரிமை, உரித்து மற்றும் அது சார்ந்த அனைத்தும் கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் பிரதி பிசுகால் ஆகிய என்னால் 2022 ஆம் ஆண்டு ஜூலை 07 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருக்கும் தடைக்கு உட்பட்டு

**2024 ஜூலை மாதம் 04 ஆம் திகதி பி.ப. 2.00க்கு 02ஆவது பிரதிவாதிக்கு சொந்தமான இந்த சொத்துகள் அமைந்திருக்கும் மேல் மாகாணம் கம்பஹா மாவட்டத்தின் களனி பிரதேச சபை எல்லைக்குள் இலக்கம் 239 ஏ ஈரியவட்டிய கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள (மிகவும் சரியாக கொஸ்கஹவத்த) கொஸ்கஹவத்த ஆகிய கொரககஹவத்த என்ற காணி என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படுகிறது.**

**சொத்தின் அமைவிடம்**

இந்தக் காணி களனி ஈரியவெட்டிய இலக்கம் 474 கொண்ட இடத்தில் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு முறை**

ஏலம் முடிவுற்ற உடன் வெற்றிகரமான கொள்வனவாளரினால் (i) கொள்வனவு விலையில் நூற்று இருபத்து ஐந்தையும் (25%) (ii) சிவில் வழக்கு ஏற்பாட்டின் 258 ஆம் இலக்க உறுப்புரைக்கு (A) அறவிடல்களும் (iii) விற்பனைக்கான அனைத்து செலவுகளையும் பணமாக செலுத்த வேண்டும். கொள்வனவு விலையில் எஞ்சிய நூற்று எழுபத்து ஐந்து (75%) பணத்தை விற்ற திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் அந்த வழக்கின் சார்பில் நீதிமன்றத்தில் வைப்புச் செய்தல் வேண்டும்.

**மேல் குறிப்பிடப்பட்ட அட்டவணை**

**அ. மீள் வாங்குபவருக்கு உரித்தாக்கப்படும் காணி - லொட் 1 ஏ**

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தின் கொழும்பு காணி பதிவு அலுகலக எல்லைக்குள் சியனே கோரலே அதிகாரி பத்துவே களனி பிரதேச செயலாளர் அலுவலக எல்லைக்குள் களனி பிரதேச சபையின் தலுகம உப அலுவலக எல்லைக்குள் ஈரியவெட்டிய கிராமம் மற்றும் இலக்கம் 239 ஏ கொண்ட ஈரியவெட்டிய கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள (மிகச் சரியானது கொஸ்கஹவத்த) கொஸ்கஹவத்த எனும் கொரககஹவத்த என்ற காணியில் அளவிட்டு ஒதுக்கப்பட்ட டி.சி.எம்.எஸ். விமலரத்ன அதிகாரம் பெற்ற அளவையாளர் மூலம் அளவிட்டு அமைக்கப்பட்ட இலக்கம் 233/2011 மற்றும் 2011.11.24 ஆம் திகதிய திட்டத்தின் லொட் 1 ஏ என காட்டப்பட்டுள்ள காணிக்கு எல்லைகள் **வடக்கு:** மெய் நோனாவுக்கு சொந்தமான காணியும், **கிழக்கில்:** பி.டி. குமுதுனி ஜயசிங்க மற்றும் டி.எஸ். வீரசிங்கவுக்கு சொந்தமான காணியும், **தெற்கில்:** லொட் 1 பி மற்றும் 1 சி கொண்ட காணியும், **மேற்கிற்கு:** எச்.டி. ஜகத் ஜயசுந்தரவுக்கு சொந்தமான காணியும் ஆகிய, எல்லைகளுக்குள் அமைந்துள்ள அளவில் பர்ச்சஸ் பதினாறு புள்ளி ஐந்து பூஜ்ஜியம் (ஏக்கர்: 00 ரூட் 00 பர்ச்சஸ் 16.50) ஆகிய காணியும் அதில் அமைந்துள்ள மரம் செடிகொடிகள் பழங்கள் ஆகிய அனைத்தும் உள்ளடங்கிய முழுமையான காணியுமாகும். இது அலுபோகஹஹேன் வீதியின் வரிப்பண இலக்கம் 56/13/ஏ கொண்ட சொத்தாக களனி பிரதேச சபையில் பதிவு செய்திருக்கும், கொழும்பு காணி அலுவலகத்தின் இலக்கம் ஜீ - 10/102 கொண்ட திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆ. பொதுப் பாதை வீதித் தேவை**

மேல் குறிப்பிடப்பட்ட லொட் 1 கொண்ட காணிக்காக அனைத்து பாதைகள் வீதித்தேவையுடன் இங்கு கீழ் குறிப்பிடப்பட்ட நிலங்கள் வீதிகளாக பயன்படுத்தும் உரிமையும் இங்கு வாங்குபவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

I. மேல் குறிப்பிடப்பட்ட ஈரியவெட்டியவில் அமைந்துள்ள குறித்த கொஸ்கஹவத்த எனும் கொரககஹவத்த என்ற காணியில் அளந்து பிரிக்கப்பட்ட டி.சி.எம்.எஸ். விமலரத்ன அதிகாரம் பெற்ற அளவையாளரினால் அளந்து அமைக்கப்பட்ட இலக்கம் 233/2011 மற்றும் 2011.11.24 ஆம் திகதி திட்டத்தின் லொட் 1 சி என்று காட்டப்பட்டுள்ள வீதிக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் எல்லைகள் வடக்கு: லொட் ஏ யும், கிழக்கு: லொட் 1 பி யும், தெற்கிற்கு மற்றும் மேற்கிற்கு: வீதியும் ஆகிய குறித்த எல்லைக்குள் அமைந்துள்ள அளவில் பர்ச்சஸ் பூஜ்ஜியம் புள்ளி ஏழு இரண்டு (ஏக்கர்: 00 ரூட் 00 பர்ச்சஸ் 07.2) ஆகிய நலப்பகுதி வீதி ஒன்றாக பயன்படுத்துவதற்கு உரிமை உள்ளது. இது கொழும்பு காணி அலுவலகத்தின் இலக்கம் ஜீ - 10/103 கொண்ட திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ii. மேற்கூறிய லொட் 1 சி கொண்ட காணியின் தெற்கு மற்றும் மேற்கு எல்லைகளாக காண்பிக்கப்படும் 10 - 15 அடி அளவில் அகலமான வீதி ஒன்றாக ஈரியவெட்டிய தேவாலய வீதி வரை பிரவேசிக்கும் வீதியின் உரிமையும் உள்ளது.

**முன் உரிமை சார்ந்த மேலதிக உறுதி செய்தல்**

மேலுள்ள (அ) இன் கீழ் விபரிக்கப்பட்ட இந்த உறுதியின் வாங்குபவருக்கு உரிமையாக்கப்படும் லொட் 1 கொண்ட பர்ச்சஸ் 16.50 ஆகிய காணி அடிப்படையில் அவருக்கு 2012.11.22 ஆம் திகதி சின்தக விஜேசூரிய பகிரங்க நொத்தாரிசினால் உறுதி செய்யப்பட்ட இலக்கம் 1362 கொண்ட விற்பனை அடிப்படையில் உரித்தாகியுள்ளது.

விரைவில் வாங்குபவருக்கு தேவையாக இருந்த அடிப்படை தேவை ஒன்றை பூர்த்தி செய்யும் நோக்கில் குறித்த சொத்து 2013-02-15 ஆம் திகதி பீ.ஜி.ஜே.ஏ ரொத்ரிகோ கொழும்பு நொத்தாரிஸ் மூலம் உறுதி செய்யப்பட்ட இலக்கம் 5029 கொண்ட விற்பனையில் வட்டகொடகெதர நிஷாமாலி ஷிரோமா என்பவருக்கு வழக்கப்பட்டதோடு அந்த அனைத்து நிதிக் கடப்பாடுகளை நிவர்த்தி செய்வதன் அடிப்படையில் இந்த உறுதி வந்த பின் சொத்தின் ஆரம்ப உரிமையாளரான நான் உறுதியின் வாங்குபவருக்கு ஒப்படைத்துள்ளேன்.

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி

பதிவாளர்/ பிரதி பிசுகால்
வர்த்தக உயர் நீதிமன்றம் - கொழும்பு

The Housewives' companion
Classifieds on
Daily News

### பிரதேச சபை வரவு செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் செயற்படுத்தும் விதிக் கோவையின் 6 (1) பிரிவின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தின் பிரஜைகளுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

2025ம் ஆண்டிற்காக நாரம்மல பிரதேச சபையில் தயாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்ட அறிக்கையின் மூலதன செலவு மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற ஆலோசனைகள் இருப்பின் 2024.06.30ம் திகதிக்கு முன்னர் எனக்கு சமர்ப்பிக்குமாறு தயவுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

2024.05.07ம் திகதி நாரம்மல பிரதேச சபை தலைமையகத்தில்

**தொலைபேசி 037-2249275**
**பெக்ஸ்: 037-2249681**
**மின்னஞ்சல் முகவரி: narammalaps@gmail.com**

**செயலாளர்**
**பிரதேச சபை**
**நாரம்மல**

## கல்கமுவ பிரதேச சபையில் 2025ம் ஆண்டிற்கு வரவு செலவுத்திட்ட அபிவிருத்தி திட்டமிடலைத் தயாரிப்பதற்காக ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல் சார்பாக பொதுமக்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

கல்கமுவ பிரதேச சபையினால் 2025ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட அறிக்கையை தயாரித்தல் விடயங்கள் இந்நாட்களில் இடம்பெறுவதுடன் மேற்படி வரவு செலவுத்திட்ட அறிக்கையில் மூலதன செலவு மதிப்பீடு மற்றும் மிகுதி அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்படுத்துவதற்கு ஏதுவாக்கும் முகமாக கல்கமுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள உங்களது ஆலோசனைகள் இருப்பின் அவற்றை எழுத்து மூலம் 2024 ஜூன் 30ம் திகதிக்கு முன் கையோடு அல்லது தபாலில் அல்லது மின்னஞ்சல் மூலம் galgamuwaps@yahoo.com கல்கமுவ பிரதேச சபைக்குக் கிடைக்குமாறு 'செயலாளர், பிரதேச சபை, கல்கமுவ' என்ற முகவரிக்கு அனுப்புமாறு இத்தால் அறிவிக்கிறேன்.

**எ.பீ. நிமல் ரத்னாயக்க,**
**செயலாளர்,**
**பிரதேச சபை, கல்கமுவ.**

**முகவரி: பிரதேச சபை, கல்கமுவ,**
**தொ. பே. இலக்கம் 037 2254081**
**மின்னஞ்சல் முகவரி - galgamuwaps@yahoo.com**

## 2011ஆம் ஆண்டு 40ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும் நிதி மோசடியை தடுக்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

இல. 152/A, நுகரகல சிறிபுர எனும் முகவரியில் வசிக்கும் விதானகே பிரியந்த சேனாரத்ன விதான என்பவரின் பொறுப்பில் இருந்த பின்வரும் வாகனங்கள் மேற் கூறப்பட்ட சட்டத்தின் 35ஆம் இலக்க அத்தியாயத்தின் பிரகாரம் சட்டவிரோத செயற்பாடுகள் அல்லது ஏதாவது சட்ட விரோத செயற்பாடுகளினால் பெற்றுக் கொண்ட பணத்தினால் பெறப்பட்டு உரிமையாக்கிக் கொண்டுள்ளது தெரிய வந்துள்ளதால் அந்தச் சட்டத்தின் 7(1) மற்றும் 8(2)ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் 2024.03.20ஆம் திகதி முதல் பொலன்னறுவை மேல் நீதிமன்றத்தில் HC/30/2024/SPL/01 இலக்க வழக்கின் கீழ் வலுவிழக்கும் கட்டளை உறுதி செய்யப்பட்டு நீடிக்கப்பட்டுள்ளது.

1. NC DAC 6675 மஹேந்திரா வகை கெப் வாகனம்
2. 28-8684 இசுசு வகை ELF மோட்டார் லொறி
3. 206-4719 பஜாஜ் வகை முச்சக்கர வண்டி
4. UP RE 8966 மஹேந்திரா வகை இலக்கமற்ற டிரேலருடனான டிராக்டர்
5. NC UX 8494 பஜாஜ் வகை XCD மோட்டார் சைக்கிள்
6. NC BIH 7388 ஹொண்டா வகை ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள்
7. EP BHE 07884 ஹொண்டா வகை ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள்
8. NC BAQ 8153 பஜாஜ் வகை பல்சர் மோட்டார் சைக்கிள்
9. KOMATSU PC3 ஸ்கவேட்டர் இயந்திரம்

இந்த வாகனங்கள் தொடர்பில் தமது உரிமைத்துவத்தை நீதிமன்றத்தில் நிரூபிப்பதற்கு உண்மையான மூன்றாம் தரப்பினருக்க வசதிகள் வழங்கும் பொருட்டு அறிந்து கொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

**நீதிமன்ற கடடளையின் பிரகாரம்**

**உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்,**
**பொலன்னறுவை மாவட்டம் 01.**

## கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம் உட்துறைமுக வீதி, திருகோணமலை

### வெளிப்படுத்துகை விண்ணப்பங்கள் கோரல்

### அரச தனியார் பங்களிப்பின் கீழ் திருகோணமலையில் கடற்கரை நீர் விளையாட்டுக்களை ஸ்தாபித்தல்

உள்ளூராட்சி, கிராமிய அபிவிருத்தி, சுற்றுலா அமைச்சின் கீழ் அமைந்துள்ள கிழக்கு மாகாண சுற்றுலா பணியகமானது, திருகோணமலையில் கடற்கரை நீர் விளையாட்டுக்களை ஸ்தாபிக்கும் அரச மற்றும், தனியார் பங்களிப்பின் கீழ் செயற்படுத்துவதற்கான செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளது.

முகாமைத்துவம் செய்வதற்காக கிழக்கு மாகாண சுற்றுலா பணியகமானது மேற்கூறப்பட்ட துறையில் முதலீடு செய்ய விரும்பும் தனியாரின் விருப்பை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள் விண்ணப்பங்களை கோரியுள்ளது. இதில் துறைசார் முன் அனுபவம், தொழில் திறமை, நிதி நிலைமை மற்றும் முகாமைத்துவ தகைமைகள் கருத்தில் கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள கிழக்கு மாகாண சபையின் www.ep.gov.lk இணையதளத்தில் பார்வையிடலாம்

**பொது முகாமையாளர்**
**கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம்**
**உட்துறைமுக வீதி**
**திருகோணமலை**
**13.05.2024**

Sunday Observer adz it's what you want
தினகரன் வாரமஞ்சரி
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# அன்டர்சன் ஓய்வு முடிவு



மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக லோட்ஸ் மைதானத்தில் எதிர்வரும் ஜூலையில் நடைபெறவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறுவதாக 41 வயதான இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவித்துள்ளார்.

2003 ஆம் ஆண்டு சிம்பாப்வேயுக்கு எதிராக தனது கன்னி டெஸ்ட் போட்டியில் ஆடிய அன்டர்சன் 21 ஆண்டு கிரிக்கெட் வாழ்வில் 700 விக்கெட்டுகளை வீழ்த்தி டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி வேகப்பந்து வீச்சாளர் என்று சாதனை படைத்துள்ளார். அவர் அதிக டெஸ்ட் போட்டிகளில் ஆடியவராக சச்சின் டெண்டுகருக்கு அடுத்து (200) இரண்டாவது இடத்தில் உள்ளார். அன்டர்சன் இதுவரை 188 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்காக கடைசியாக ஒரு முறை ஆடப் போவதாக இன்ஸ்டாகிராமில் குறிப்பிட்டு தனது ஓய்வை அவர் உறுதி செய்துள்ளார்.

# இலங்கை ஏ அணி 234 ஓட்டங்கள்



ஆப்கானிஸ்தான் ஏ அணிக்கு எதிரான ஒரே ஒரு உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் இலங்கை ஏ அணி முதல் இன்னிங்ஸுக்காக 435 ஓட்டங்களை பெற்று வலுவான நிலையில் உள்ளது.

கொழும்பு, பீ. சரா ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் (11) ஆரம்பமான நான்கு நாட்களைக் கொண்ட இந்தப் போட்டியின் இரண்டாவது நாளான நேற்றைய தின ஆட்டம் மழை காரணமாக பெரும்பாலான நேரம் தடைப்பட்டது. இந்நிலையில் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த ஆப்கான் அணி நேற்றைய நாள் அட்ட நேர முடிவின்போது 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்திருந்தது.

போட்டியின் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த இலங்கை ஏ அணியின் முதல் 4 விக்கெட்டுகளும் 106 ஓட்டங்களுக்கு பறிபோன நிலையில், மத்திய வரிசை வீரர்கள் கைகொடுத்தனர். சொனால் தினுஷ 145 ஓட்டங்களை பெற்றதோடு விசாட் ரன்திக 63 ஓட்டங்களை பெற்றார்.

பின் வரிசையில் வந்த வனுஜ சஹன் 75 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் இலங்கை ஏ அணி 101.3 ஓவர்களில் 435 ஓட்டங்களை பெற்றது.

ஆப்கான் ஏ அணி சார்பில் இடது கைது சுழற்பந்துவீச்சாளர் சியா உர் ரஹ்மான் 6 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இன்று போட்டியின் மூன்றாவது நாளாகும்.

# தேசிய பாடசாலை கால்பந்தில் சம்பியனானது யாழ். மகாஜனா





**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

நெஸ்ட்லே மைலோ அனுசரணையில் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்து தொடரின் 12 வயதுக்கு உட்பட பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணம், தெல்லிப்பளை மகாஜனா சாம்பியனானது.

இப்போட்டி கொழும்பு குதிரைப் பந்தைய விளையாட்டுத் திடலில் கடந்த சனிக்கிழமை (11) நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் குருணாகல் மலியதேவ பெண்கள் கல்லூரி அணியை எதிர்கொண்ட மகாஜனா 2–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. முதல் பாதியில் 1–0 என முன்னிலை பெற்ற மகாஜனா அணி இரண்டாவது பாதியில் மேலும் ஒரு கோலை புகுத்தியது.

இதன்போது யாழினி ஒரு கோலையும் கேதாரணி ஒரு கோலையும் அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.

கடந்த ஒரு தசாப்தமாக பணியாற்றிய அதிபர் ம. மணிசேகரன் ஓய்வுபெறும் தருணத்திலேயே அந்த பாடசாலை அணி சம்பியனாக தெரிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜொலிபோய்ஸ் சம்பியன்



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று ஜொலிபோய்ஸ் விளையாட்டுக்கழக இளைஞர்களின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட 25 வயதுக்குட்பட்ட வீரர்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஜெலிபோய்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசங்களை சார்ந்த 06 விளையாட்டு கழகங்கள் கலந்து கொண்ட இந்த சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டியில் மருது அணியை ஜெலிபோய்ஸ் அணி வீழ்த்தியது. இதில் தொடர் நாயகனாக ஜொலிபோய்ஸ் அணியின் தினுஜன் தினு தெரிவு செய்யப்பட்டார்.

# தங்கம் வென்றார் காலிங்க குமாரகே





ஜப்பானில் நடைபெறும் ஒசாகா கிராண்ட் பிரிக்ஸ் தடகளப் போட்டியில் நேற்று (12) நடந்த ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் இலங்கையின் காலிங்க குமாரகே தங்கப்பதக்கம் வென்றார்.

இந்தப் போட்டியை காலிங்க குமாரகே 45.92 விநாடிகளில் நிறைவு செய்து முதலிடத்தை பிடித்தார். எனினும் அவருக்கு பாரிஸ் 2024 ஒலிம்பிக் விளையாட்டு விழாவிற்கான உரிய அடைவு மட்டத்தை எட்ட முடியாமல் போனது. ஆண்களுக்கான 400 மீற்றரில் ஒலிம்பிக் போட்டிக்கான அடைவு மட்டம் 45.00 விநாடிகளாகும்.

எவ்வாறாயினும் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் அவர் இதுவரை பெற்றுள்ள தரவரிசைப் புள்ளிகளின் அடிப்படையில் ஒலிம்பிக் தகுதியைப் பெறுவார் என இலங்கை மெய்வல்லுனர் சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. அதேபோன்று, இம்மாதம் 19ஆம் திகதி ஜப்பானில் நடைபெறவுள்ள சீக்கோ க்ரோன் ப்றீ மெய்வல்லுனர் போட்டியிலும் காலிங்க குமாரகே பங்குபற்றவுள்ளதால், அதில் திறமைகளை வெளிப்படுத்தி ஒலிம்பிக் அடைவு மட்டத்தை அவர் எட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே, பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குகொண்ட நதீஷா ராமநாயக்கவிற்கு 4ஆவது இடத்தையே பெற்றுக் கொள்ள முடிந்தது. போட்டித் தூரத்தை நிறைவு செய்ய 54.02 விநாடிகளை அவர் எடுத்துக்கொண்டார்.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபெற இருந்த தருஷி கருணாரத்ன, சுகயீனத்தைக் காரணம் காட்டி கடைசி நேரத்தில் போட்டியில் இருந்து விலகிக் கொண்டார்.



## சர்வதேச செய்திகள்

# ரபாவின் மேலும் பல இடங்களில் இருந்து மக்களை வெளியேற இஸ்ரேல் உத்தரவு

## இதுவரை 300,000 பேர் வெளியேற்றம்: காசாவில் தாக்குதல் உக்கிரம்

ரபா மீதான வெளியேற்ற உத்தரவை விரிவுபடுத்தி இருக்கும் இஸ்ரேல், காசாவில் நேற்றும் (12) கடும் தாக்குதல்களை நடத்தியது. சனநெரிசல் மிக்க தெற்கு நகரான ரபா மீதான முழு அளவிலான படையெடுப்பு வரலாற்று அழிவுகளை ஏற்படுத்தும் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

மத்திய நகரான டெயிர் அல் பலாஹ்வில் நேற்று இரு மருத்துவர்கள் கொல்லப்பட்டதாக காசாவின் சிவில் பாதுகாப்பு நிறுவனம் கூறி இருக்கும் அதேநேரம் காசா நகருக்கு அருகில் உக்கிர மோதல் இடம்பெற்றதாகவும் இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் கடும் சூடு நடத்தியதாகவும் ஏ.எப்.பி. செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் உள்ள வீடு ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது. இதில் கொல்லப்பட்ட பலரும் சிறுவர்கள் என்பதோடு மேலும் பலம் காயமடைந்துள்ளனர். வடமேற்கு ரபாவின் ஹஷாஷ் குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீதே இஸ்ரேல் குண்டு போட்டுள்ளது. இதேவேளை வடக்கு காசாவின் ஜபலியா அகதி முகாம் மீது இஸ்ரேல் சரமாரி தாக்குதல்களை நடத்தியதாக அங்கிருந்து வரும் செய்திகள் குறிப்பிடுகின்றன. இஸ்ரேலிய போர் விமானங்கள் ஜபலியாவின் கிழக்கு பகுதியில் கார்ப்பட் குண்டு தாக்குதல்களை நடத்தி பலரையும் கொன்றதாக உள்ளூர் தரப்பை மேற்கோள்காட்டி வபா செய்தி வெளியிட்டுள்ளது.

ஒரு பகுதியில் இலக்குகளைத் துல்லியமாகக் குறிவைத்து போர் விமானங்கள் மூலம் குண்டு வீசாமல், அப்பகுதி முழுவதையும் குண்டு வீசி அழிப்பது கார்ப்பட் குண்டுவீச்சு என அழைக்கப்படுகிறது. இதில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை உடன் உறுதி செய்ய முடியவில்லை என்று அந்த செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

மத்திய ஜபலியாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மருத்துவ வசதி ஒன்றுக்கு அருகில் அம்புலன்ஸ்கள் மீதும் இஸ்ரேலிய ஆளில்லா விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக வபா கூறியது.

ஜபலியாவில் ஹமாஸ் தோற்கடிக்கப்பட்டு விட்டதாக இஸ்ரேல் முன்னதாக கூறிய நிலையிலேயே அங்கு மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்தேச எதிர்ப்பையும் மீறி இஸ்ரேலிய துருப்புகள் ரபாவின் கிழக்கு பகுதிக்கு நுழைந்ததோடு அங்குள்ள எகிப்துடனான உதவிகள் வரும் எல்லைக் கடவையையும் மூடியது.

கடந்த வாரம் கிழக்கு ரபாவில் இருந்து மக்களை வெளியேறுவதற்கு இஸ்ரேல் இராணுவம் உத்தரவிட்ட நிலையில் அங்கிருந்து இதுவரை 300,000 பேர் வரை வெளியேறிய நிலையில் அந்த வெளியேற்ற உத்தரவை மேலும் பல இடங்களுக்கு இஸ்ரேல் விரிவுபடுத்தியுள்ளது.

மக்கள் நீர் தொட்டிகள், படுக்கைகள் மற்றும் மற்ற உடைமைகளை வாகனங்களில் ஏற்றி மீண்டும் ஒரு முறை வெளியேற்றத்திற்கு தயாராகி வருகின்றனர்.

"எமக்கு எங்கே போவது என்று தெரியவில்லை" என்று ரபாவில் இருந்து வெளியேறத் தயாராகும் பரீத் அபூ ஈதா தெரிவித்தார். அவர் ஏற்கனவே காசா நகரில் இருந்தே ரபாவுக்கு இடம்பெயர்ந்து வந்தவராவார்.

"காசாவில் பாதுகாப்பான அல்லது மக்கள் நிரம்பாத இடம் ஒன்று இல்லை. நாம் செல்வதற்கு எந்த இடமும் இல்லை" என்றும் அவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

ரபாவின் வடமேற்குக் கரையில் உள்ள அல் மவாசியின் 'மனிதாபிமான வலயத்திற்கு' செல்லும்படியே மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ரபாவின் மத்திய மற்றும் மேற்கு ஆகிய புதிய பகுதிகளுக்கு இஸ்ரேல் தனது ஊடுருவலை விரிவுபடுத்தி இருப்பதாக ஹமாஸ் குற்றம்சாட்டியுள்ள அதேநேரம் கிழக்கு ரபாவில் பல டஜன் பயங்கரவாதிகளை ஒழித்ததாக இஸ்ரேல் இராணுவ பேச்சாளர் டானியல் ஹகரி தெரிவித்துள்ளார்.

ரபாவில் முழு அளவிலான படை நடவடிக்கையை இஸ்ரேல் ஆரம்பித்தால் 'வரலாற்று மனிதாபிமான நெருக்கடி ஒன்றை' காசா எதிர்கொள்ளும் அச்சுறுத்தல் இருப்பதாக ஐ.நா தலைவர் அன்டோனியோ குட்டரஸ் எச்சரித்துள்ளார். காசாவில் இஸ்ரேலின் போருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் சுவீடனில் நடைபெற்ற யூரோவிஷன் பாடல் போட்டிக்கும் பரவியது. அந்த நிகழ்வு இடம்பெறும் அரங்குக்கு வெளியில் பெரும் எண்ணிக்கையான ஆர்ப்பாட்டக்காரர்கள் திரண்டனர்.

டெல் அவிவில் உள்ள ரசிகர்களும் பெரிய திரையில் அந்த நிகழ்ச்சியை பார்த்தபோதும், அந்தப் போட்டியில் பங்கேற்ற இஸ்ரேலிய போட்டியாளர் ஈடன் கொலன் வெற்றிபெறவில்லை. 'ஈடன் சிறப்பாக



இருந்தார்... ஆனால் அவர்கள் எம்மை வெறுக்கிறார்கள்' என்று 20 வயதான இஸ்ரேலிய ரசிகர் ஒருவர் குறிப்பிட்டார்.

### வலுக்கும் சர்வதேச எதிர்ப்பு

ரபாவில் இஸ்ரேலிய படை நடவடிக்கை தொடர்பில் சர்வதேச அளவில் சீற்றம் அதிகரித்துள்ளது.

ரபா பொதுமக்கள் பாதுகாப்பற்ற பகுதிக்குச் செல்ல உத்தரவிடப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட ஐரோப்பிய ஒன்றிய தலைவர் சார்ல்ஸ் மிக்கல், அது ஏற்க முடியாதது என்று சமூக ஊடகத்தில் கண்டித்தார்.

ரபாவில் உள்ள தள மருத்துவமனை ஒன்றில் இருந்து 22 நோயாளிகளை அழைத்துச் செல்லும் பணியை ஆரம்பித்திருக்கும் எல்லைகள் அற்ற மருத்துவர் அமைப்பு, அந்த நகரில் இஸ்ரேலின் படை நடவடிக்கை உயிர்காப்பு மருத்துவ உதவிகளை வழங்குவதை சாத்தியமில்லாததாக்கும் என்று எச்சரித்தது.

இஸ்ரேலின் ஏற்க முடியாத விரிவாக்கத்தை காரணம் காட்டி ரபா எல்லைக்கடவையில் இருந்து உதவிகள் செல்வதில் இஸ்ரேலுடன் ஒத்துழைப்பதற்கு எகிப்து மறுத்துள்ளதாக எகிப்தின் அல்கெஹரா செய்மதி தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

காசா பகுதியில் நிலைமை மோசமடைவதற்கு இஸ்ரேல் பொறுப்பேற்க வேண்டும் என்று எகிப்து மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ரபா எல்லைக் கடவையை கைப்பற்றிய இஸ்ரேல் அதனை மூடியதோடு உதவிகள் செல்லும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள மற்றொரு எல்லைக் கடவையான கெரெம் ஷலோமையும் கட்டுப்படுத்துகிறது. இதனால் முற்றுகையில் உள்ள காசாவுக்கு வெளி உலகில் இருந்து உதவிகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்தே காசாவில் போர் வெடித்ததோடு அப்போது கடத்தப்பட்ட சுமார் 250 பணயக்கைதிகளில் தொடர்ந்தும் சுமார் 128 பணயக்கைதிகள் காசாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக இஸ்ரேல் கணித்துள்ளது.

### கிழக்கு ரபா சுற்றிவளைப்பு

பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான மத்தியஸ்தர்களின் முயற்சிகள் ஸ்தம்பித்திருக்கும் சூழலில், இஸ்ரேல் வான் தாக்குதலினால் காயத்திற்கு உள்ளான பணயக்கைதி ஒருவர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் இஸ்ரேலிய ஆடவரான நவாட் பொபல்வெல் ஒரு மாதத்திற்கு முன் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்த நிலையில் உயிரிழந்ததாக இசதீன் அல் கஸ்ஸாம் படை குறிப்பிட்டுள்ளது. எதிரிகள் காசா பகுதியில் உள்ள மருத்துவமனைகளை அழித்திருப்பதால் அவருக்கு முறையான சிகிச்சை அளிக்க முடியாமல்போனது என்றும் அந்தப் படை கூறியது. இது தொடர்பில் இஸ்ரேல் உடன் எந்த பதிலையும் அளிக்கவில்லை. பணயக்கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தம் ஒன்றை எட்டுவதற்கு இஸ்ரேல் அரசுக்கு அழுத்தம் கொடுத்து இஸ்ரேலில் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் இஸ்ரேல் சர்வதேச சட்டத்தின் விதிமுறைகளை மீறியதாக மதிப்பிடுவது நியாயமானது என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கடந்த வெள்ளிக்கிழமை கூறியது, ஆனால் ஆயுத ஏற்றுமதியைத் தடுக்க போதுமான ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்றும் அது சுட்டிக்காட்டியது.

காசா மீதான படை நடவடிக்கையை இஸ்ரேல் முன்னெடுத்தால் குறிப்பிட்ட குண்டுகள் மற்றும் பீரங்கி செல்களை இஸ்ரேலுக்கு வழங்குவதை நிறுத்தி வைப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வெளிப்படையாக எச்சரிக்கை விடுத்து இரண்டு நாட்களிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் ரபா மீது படையெடுக்க தயாராகும் நிலையில் பைடன் நிர்வாகம் ஏற்கனவே இஸ்ரேலுக்கான 3,500 குண்டுகளை வழங்குவதை நிறுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபா மீது படை நடவடிக்கையை முன்னெடுப்பதில் உறுதியாக இருக்கும் இஸ்ரேல் போர் வெற்றிக்கு ரபாவில் உள்ள ஹமாஸ் படைப் பிரிவுகளை ஒழிப்பது அவசியம் என்று கூறுகிறது. இந்நிலையில் ரபாவின் கிழக்கு மற்றும் வடக்கு பகுதிகளை பிரிக்கும் பிரதான வீதியை இஸ்ரேலிய டாங்கிகள் கடந்த வெள்ளிக்கிழமை கைப்பற்றியது. இதன்மூலம் அந்த நகரின் கிழக்கு பகுதியை சுற்றிவளைப்பதற்கு இஸ்ரேலால் முடிந்துள்ளது.

காசாவில் கடந்த எட்டு மாதங்களாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை தற்போது 35 ஆயிரத்தை தாண்டி இருப்பதாக பலஸ்தீன சுகாதார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து நடத்தும் தாக்குதல்களில் தகர்க்கப்பட்ட கட்டடங்களின் இடிபாடுகளில் சுமார் 10,000 உடல்கள் சிக்கி இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. காசா சிவில் பாதுகாப்பு நிறுவனம் சி.என்.என். தொலைக்காட்சிக்கு இதனைத் தெரிவித்துள்ளது.

'பல மாதங்களாக நாம் சாதாரண உபகரணங்களுடன் பணியாற்றி வருகிறோம், அது எமது நேரம் மற்றும் முயற்சிகளை விரயம் செய்கிறது' என்று அந்த நிறுவனத்தின் பேச்சாளர் மஹ்மூத் பசல் தெரிவித்தார். சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின் 70 தொடக்கம் 80 வீதமான திறனை இஸ்ரேல் அழித்து விட்டதாகவும் அவர் கூறினார்.

'ஐக்கிய நாடுகள் மற்றும் மனிதாபிமான குழுக்கள் உடன் தலையிட்டு தேவையான மீட்பு உபகரணங்கள் வருவதை அனுமதிப்பதற்கு நாம் கோருகிறோம். எனவே எமக்கு தொடர்ந்து பணியாற்றவும் இடிபாடுகளின் கீழ் காணமால்போயிருப்பவரை மீட்பதற்கும் சிவில் பாதுகாப்பு வாகனங்கள் இயங்குவதற்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கு எம்மால் முடியுமாக இருக்கும்' என்றும் பசல் தெரிவித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 13ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

EDB SRI LANKA

## வெற்றிடங்கள்

கீழ் குறிப்பிடப்பட்ட பதவிக்காக இந்த சபையின் சேவையில் இணைவதற்கு நிரூபிக்கப்பட்ட திறன் மற்றும் தொழில்முறை திறன்களுடன் போட்டித்தன்மை மற்றும் அதிக ஊக்கமுடைய இலங்கை பிரசைகளிடம் இருந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. பணிப்பாளர் பதவி - தகவல் தொழில்நுட்பம் (HM 1 – 1)

**தொழில் விபரம்:**

அமைப்புக்கு தகவல் தொழில்நுட்ப (IT) சேவையை வழங்குவது, வர்த்தக வலைசாலை பராமரித்தல், ஏ.அ.ச. இணையதளத்தை இற்றைப்படுத்தல், e-communication, e-promotion முதலியவற்றின் ஏற்பாடுகள், தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் மேம்பாடு மற்றும் செயற்படுத்தலுக்கான மூலோபாய திட்டமிடல் மற்றும் தீர்மானம் எடுத்தலுக்கு பொறுப்பாவார். அமைப்பின் தற்போதைய மற்றும் எதிர்கால வர்த்தக இலக்குகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான தீர்வுகளை வழங்கல், e-government கொள்கைக்கு சாதகமான தகவல் தொழில்நுட்ப கொள்கை சீரமைப்பை பராமரித்தல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்: (கீழுள்ள 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞானம்/ முகாமைத்துவ தகவல் அமைப்பு துறையில் இளமாணிப் பட்டம்.

   அத்துடன்

   தொடர்புடைய துறையில் பட்டப்பின் படிப்பு பட்டம் ((முதுமாணி)

   மற்றும்

   முதல் பட்டத்தை பெற்றதன் பின் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

2. பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் முழு அங்கத்துவம்.

   மற்றும்

   கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

### 02. பணிப்பாளர் பதவி - சட்டம் (HM 1 – 1)

**தொழில் விபரம்:**

உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், பிணைகள், (i) ஆலோசனை சேவைகள்; (ii) கடன்கள் உள்ளடங்கியவற்றை தயாரிப்பது தொடர்பில் சட்ட அம்சங்களில் ஏ.அ.ச. செயற்பாட்டு பிரிவுகள் மற்றும் சபைக்கு உதவி மற்றும் ஆலோசனை வழங்கல், ஏற்றுமதியாளர்களுக்கு உதவும் மானியங்கள் மற்றும் ஏனைய அம்சங்கள்; இலங்கை/ வெளிநாடுகளில் ஏற்றுமதி தொடர்பில் செயற்படுத்தப்படும் திட்டங்கள்/ நிகழ்ச்சிகளுக்கு தொடர்புடைய சட்ட அம்சங்கள்; ஏற்றுமதியாளர்களின் வர்த்தக விடயங்களில் ஆலோசனை ஏற்பாடு; சிவில் செயற்பாடுகளில் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களை தயாரித்தல்; நீதிமன்றங்கள்/ தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் ஏனைய சட்ட அமைப்புகளில் சபை சார்பில் தோன்றுதல்; கம்பனிகள் பதிவாளர் மற்றும் காணிப் பதிவாளர் விடயங்களில் தலைப்பு சரிபார்ப்பை ஆராய்தல், ஒழுக்காற்று விசாரணைகளின் போது சட்ட ஆலோசனை வழங்கல்; உயர் முகாமைத்துவத்தால் வழங்கப்படும் வேறு ஏதேனும் ஒப்படை.

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட சட்டத் துறையில் இளமாணிப் பட்டம் மற்றும் சட்டத்தரணி.

அத்துடன்

தொடர்புடைய துறையில் பட்டப்பின் படிப்பு பட்டம் ((முதுமாணி)

மற்றும்

முதல் பட்டத்தை பெற்றதன் பின் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

**01 மற்றும் 02 பதவிகளுக்கான சம்பள அளவு** (HM 1 – 1)

ரூபா 80,295/- 15 x 2,270 - ரூபா 114,345/-

**01 மற்றும் 02 பதவிகளுக்கான தேர்வு முறை** (HM 1 – 1):
கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம்.

**01 மற்றும் 02 பதவிகளுக்கான வயதெல்லை** (HM 1 – 1):

35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பெருந்தாது.

### 03. உதவி பணிப்பாளர் பதவி - நிதி (MM 1 – 1)

**தொழில் விபரம்:**

கணக்கேடுகள் பராமரிப்பு பிரிவை மேற்பார்வையிடல். சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் தொடர்புபட்ட பணியை மேற்பார்வையிடல். வரவு செலவு திட்டம், பணப்பாய்வு மற்றும் மற்ற அறிக்கைகள்/ தேவையான தகவல்களை தயாரித்தல், வழங்கப்பட்ட அதிகாரத்திற்குள் ரொக்கச்சீட்டுகளுக்கு சான்றளித்தல், பணிப்பாளரின் (நிதி) வழிகாட்டலின் கீழ் ஏற்றுமதி அபிவிருத்தி நிதியத்தின் முகாமைத்துவத்திற்கு சம்பந்தப்பட்ட கடமைகளில் பங்கேற்றல். உயர் முகாமைத்துவத்தால் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் ஒப்படை.

**தகைமைகள் மற்றும் அனுபவம்: (கீழுள்ள 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கு/ வர்த்தகம்/ நிதி/ வர்த்தக முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம்

   மற்றும்

   முதல் பட்டத்தை பெற்ற பின் அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனம் ஒன்றில் பதவிக்கு தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

2. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் உள்ளக பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் பதவிக்கு தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**பதவிக்கான சம்பள அளவு** (MM 1 – 1)

ரூபா 53,175/- 10x 1,375–15 x 1,910 - ரூபா 95,574/-

### 04. ஏற்றுமதி ஊக்குவிப்பு அதிகாரி பதவி - சட்டம் (JM 1 – 1)

**தொழில் விபரம்:**

மேலதிகாரியின் மேற்பார்வையின் கீழ் பிரிவு/ அலகின் திட்டமிடல் மற்றும் நிறைவேற்று நடவடிக்கை செயற்பாடுகள். தொடர்புடைய தயாரிப்பு பிரிவுக்கு தொடர்புடைய ஒருங்கிணைப்பு செயற்பாடுகள். தொடர்புடைய துறைகளுக்கான தரவு/ தகவல் இற்றைப்படுத்தல். பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதுடன் தொடர்புபட்ட வேறு பணிகளில் பங்கேற்றல். பிரிவுத் தலைவரினால் அமர்த்தப்பட்ட ஏனைய பணிகள்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ சர்வதேச உறவுகள்/ பொருளியல்/ வர்த்தகம்/ விஞ்ஞானம்/ விவசாயம்/ வர்த்தக நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம்.

### 05. கணினி நிரலர் பதவி - (JM 1 – 1)

**தொழில் விபரம்:**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் அனைத்து பிரிவுகள்/ அலகுகளின் நடவடிக்கை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு கணினி நிரல்கள்/ பயன்பாடுகளை வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்தல். அவ்வாறான நிரல்களை பராமரித்தல் மற்றும் அவற்றின் புத்தாக்கம் அவசியமாகும். பிரிவுத் தலைவரினால் வழங்கப்படும் வேறு பதவிகள்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்: (கீழுள்ள 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட கணினி விஞ்ஞானம்/ பொறியியல்/ தகவல் தொழில்நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் இளமாணிப் பட்டம்.
2. மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை தரம் 7 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.
3. மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை தரம் 6 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   மற்றும்

   கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பு ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.
4. மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை தரம் 5 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   மற்றும்

   கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பு ஒன்றில் குறைந்தது பத்து (10) ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**பதவிக்கான சம்பள அளவு** (JM 1 – 1)
ரூபா 42,600/- 10 x 755 18 x 1135 - ரூபா 70,580/-

**வயதெல்லை** (MM 1-1 மற்றும் JM 1-1):
22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

### 06. பண்டகப் பொறுப்பாளர் பதவி (MA 2 – 1)

**தொழில் விபரம்:**
பொருட்களை ஏற்பது மற்றும் முறையான பாதுகாப்பு. பொருட்களை வழங்கல் மற்றும் அகற்றல். அனைத்து ரசீதுகளுக்குமான பதிவுகள், பதிவுகள் அல்லது கணக்குகளை பராமரித்தல், முறையான ஆவணங்கள் மூலம் ஆதரிக்கப்படும் தேவையான முறையில் சேமிப்புகளின் வழங்கல்கள் மற்றும் அகற்றல்கள். முறையான அங்கீகாரங்களுடன் விநியோக பட்டியல்களை விநியோகித்தல். கைவசம் உள்ள இருப்புகளின் எந்த ஒரு நேரத்திலும் பௌதீக அளவில் எஞ்சியுள்ளவற்றை சரிபார்ப்பதற்கு கிடைக்கச் செய்தல்.

**தகைமைகள்:**
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் தேசிய தொழில் தகைமை (NVQ) தரம் 5 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

**பதவிக்கான சம்பள அளவு** (MA 2 – 1)
ரூபா 30,310/- 10 x 300 – 7 x 350 – 4 x 495 – 20 x 660 = ரூபா 50,940/-

### 07. முகாமைத்துவ உதவியாளர் பதவி - தொழில்நுட்பம் அல்லாதது (MA 1–1)

**தொழில் விபரம்:**
குறித்த பிரிவுகளினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு தொடர்புடைய அனைத்து எழுதுனர் மற்றும் தட்டச்சு வேலைக்கு பங்கேற்றல். ஆவணங்களை பராமரித்தல் முதலியன.

**தகைமைகள்:**
a) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமை சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

b) க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொதுப் பரீட்சை தவிர) மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**பதவிக்கான சம்பள அளவு** (MA 1 – 1)
ரூபா 27,910/- 10 x 300 – 7 x 350 – 4 x 495 – 20 x 660 – ரூபா 48,540/-

**வயதெல்லை** (MA 2-1 மற்றும் MA 1-1):
18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**மேலுள்ள பதவிக்கு பொருந்தும் மற்ற தகைமைகள்**
- இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உள தகுதியை பெற்றிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**ஏனைய நன்மைகள்:**
- 2016.10.27 ஆம் திகதிய PED 1/2015 (i) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின்படி வாகனம் ஒன்று பெற்றுத்தரப்படும் (பணிப்பாளர் - IT மற்றும் பணிப்பாளர் - சட்டம் - HM 1-1 ஆகிய பதவிகளுக்கு மாத்திரம்)
- ஏ.அ.ச. இன் மருத்துவ உதவித் திட்டம்.
- சுற்றுநிருபங்களின்படி பயன்படுத்தப்படாத மருத்துவ விடுப்பை பணமாக்கல்/ வருடாந்த கொடுப்பனவுகள்.
- சலுகை வட்டி விகிதங்களில் வீட்டுக் கடன் மற்றும் இடர் கடன்.
- ஊ.சே.நி. - ஊழியர்-10%; சபை-15% மற்றும் ஊ.ந.நி.-சபை 3%

**எவ்வாறு விண்ணப்பிப்பது:**
நீங்கள் மேலுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருந்தால், ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் 08 ஆவது மாடியில் அமைந்துள்ள மனித வள முகாமைத்துவ பிரிவு அல்லது www.srilankabusiness.com என்ற இணையதளத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ("Announcements" பிரிவின்கீழ்) EDB வடிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2024.05.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் குறித்த அனைத்து கல்வி மற்றும் அனுபவத்தை உறுதி செய்கின்ற சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள், குறித்த அனைத்து சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்காதிருத்தல் அல்லது முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச துறை பணியாளர்களின் விண்ணப்பங்கள் தமது நிறுவனத்தின் தலைவர் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த விண்ணப்பத்தின் மேலதிக பிரதி ஒன்றை விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித் திகதிக்கு முன்னர் தலைவர்/ தலைமை நிர்வாக அதிகாரிக்கு அனுப்புவதற்கு விண்ணப்பதாரர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம்: 02/2020 ஐ கொண்ட 2020.10.26 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பாதிருக்கும் பொறுப்பு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் வசமானதாகும்.

**தலைவர்/ தலைமை நிர்வாக அதிகாரி,**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை,**
**NDB – EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை,**
**கொழும்பு 02.**
**தொ.: 011-2300700**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Pay online & Save your precious time
Acc. No. 000000377 Corporate Branch
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail - classified@lakehouse.lk WE ACCEPT

# பெறுகை அறிவித்தல்

**தேசிய சுகாதார விஞ்ஞான கல்வி நிறுவனம் - களுத்துறை**

## கணனி துணைப்பாகங்கள், அலுவலக தளபாடங்கள், மருத்துவ மற்றும் பற்சிகிச்சை உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் – 2024

களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞான கல்வி நிறுவனத்தின் பிராந்திய பெறுகைக் குழுவினால் இந்த நிறுவனத்தின் கீழ் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள், பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் வெளிக்கள நடவடிக்கைகளுக்குத் தேவையான உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக பின்வரும் வகையில் திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

➢ **கணனி இயந்திரங்கள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் (FC/PU-07/2024)**
(கணனி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள். புகைப்படப் பிரதி இயந்திரங்கள், மடிக்கணனிகள், மைக்ரோபோன், மல்டிமீடியா புரஜெக்டர்கள், மல்டி மீடியா புரஜெக்டர் திரைகள், வை பை ரவுட்டர்கள், போர்டபல் சவுன்ட் சிஸ்டம், லேசர் பிரின்டர், ஸ்வைட் மூவர், எக்ஸ்டர்னல் ஹார்ட், வொய்ஸ் ரெக்கோடர், கிளிப் ஒன் மைக், யூபீஎஸ்)

➢ **அலுவலகத் தளபாடங்கள் மற்றும் வீட்டு உபகரணங்கள் (FC/PU-08/2024)**
(சீட் பென்வஸ், உருக்கு அலுமாரி, கண்ணாடி கதவுகள் சகிதம் உருக்கு அலுமாரி, ஆ.்.ப் டோர் கபட், நிறைவேற்றுநர் கதிரைகள், கணனிக் கதிரைகள், விரிவுரை மண்டப கதிரைகள், பிளாஸ்டிக் கதிரைகள், மரத்தாலான மேசைகள், மெலமைன் மேசைகள், கணனி மேசைகள், ஸ்டடி டெஸ்க், பைல் ரெக், குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், பில்டர், வெகியூம் கிளீனர்)

➢ **பற்சிகிச்சை துணைப்பாக உபகரணங்கள் / FC/PU-09/2024)**
(Mobile Dental Chair,Mini Autoclave, Sterilizer,Dental probes,Mouth Mirror tops, Mouth mirror handle, Kidney Trays, Surgical Instruments with lid, Dressing drums Large, Dressing drums small)

➢ **மருத்துவ துணைப்பாக உபகரணங்கள்/வைத்தியசாலை தளபாடங்கள் (FC/PU-10/2024)**
(BP Apparatus, Digital Thermometer, Stethoscope, Infant beam Balance, Spot Lamp, Adult Beam balance, Spinal Board, Pulse Oxymeter, Weighing scale (Bath-room), ECG Machine , Nebulizers, Suction Apparatus, Oropharyngeal airways set, DO Meter, ETU Bed, Injection Trolley, Examination Beds, Instrument Trolley, Emergency Trolley, Dressing Trolley, Patient Trolley, Saline Stand, Patient Screen)

- விலைமனு ஆவணங்களுக்காக மீளளிக்கப்படாத 2,500.00 ரூபா கட்டணம் அறவிடப்படும்.
- இயைபுடைய விலைமனு ஆவணங்களை 2024.05.13ஆம் திகதி முதல் 2024.05.22ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை களுத்துறை, நாகொட, தேசிய சுகாதார விஞ்ஞான கல்வி நிறுவனத்தின் நிதிப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
- 2024-05-27ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இந்தக் கேள்வி 2024-05-27ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன்பின் உடன் திறக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 034-2222264 எனும் தொலைபேசி இலக்கத்தில் நிதிப் பிரிவை (245) தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய சுகாதார விஞ்ஞான கல்வி நிறுவனம் - களுத்துறை.**

# அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவ திட்டத்திற்கு பணியாளர்களை ஆட்சேர்த்தல்

01. பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ திட்டம் பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டுத் திட்டம் (GCWWMIIP) 3வது பகுதிக்கு ஐரோப்பிய முதலீட்டு வங்கியினால் (EIB) நிதியளிக்கப்படுகின்றது. இத்திட்டம் அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நிறைவேற்றப்பட்டு கொழும்பு மாநகர சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சிறந்த கழிவு நீர் முகாமைத்துவ சேவைகளை வழங்குவதன் மூலம், பாரிய கொழும்பில் வசிப்பவர்களின் நகர்ப்புற சூழல் மற்றும் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதே திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 53 மில்லியன் US$ ஆகும். திட்டத்திற்கான காலம் 30 மாதங்களாகும். 2019-03-05ஆம் திகதிய 1/2019ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் திட்ட முகாமைத்துவ பிரிவில் நிலவும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்திற்காக தகுதி வாய்ந்த மற்றும் பொருத்தமான அதிகாரிகளிடமிருந்து அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | வெற்றிட எண்ணிக்கை | சம்பள அளவு |
|---|---|---|
| நிர்மாண முகாமையாளர் | 01 | PS 3 |

**பொது நிபந்தனைகள்:**
- இலங்கைப் பிரஜைகள் மட்டுமே விண்ணப்பிப்பதற்கு தகுதி பெறுவர்.
- வெளிநாட்டு நிதியளிப்புத் திட்டங்களில் அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தெரிவு செய்யும் முறை: தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் குறும்பட்டியலிடப்பட்டு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.
- வயது: விண்ணப்பம் முடிவுறுத்தப்படும் நாளில் 64 வயதிற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.
- வேலைவாய்ப்பு விதிமுறைகள்: இந்த நியமனம் முழுநேர அடிப்படையில் இருக்கும் என்பதுடன் ஒப்பந்த சேவை காலம் ஆட்சேர்ப்பு திகதியிலிருந்து 31-12-2024 வரையாகும் என்பதுடன் செயல்திறன் நிலையின் அடிப்படையில் திட்டத்தின் மீதமுள்ள காலத்திற்கு நீட்டிக்கப்படலாம்.
- அரச / அரசு சார்ந்த துறைகளில் கடமையாற்றும் அதிகாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனத்தின் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
- ஆர்வமுள்ள நபர்கள் தங்கள் சுய விபரங்கள் சகிதம் தொடர்புடைய கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளை 31 மே 2024ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் செயலாளர், அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் மேற்கூறிய சான்றிதழ்களின் மென் பிரதிகளை மேற்குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரம் அல்லது அதற்கு முன் admin.div@pclg.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
- கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் திட்டம் மற்றும் பதவியின் பெயர் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- முழுமையற்ற விண்ணப்பங்கள், கல்வி மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் ஆதாரம் இல்லாத விண்ணப்பங்கள் மற்றும் முடிவுறுத்தல் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.

பின்குறிப்பு: தகைமைகள், அனுபவம், பதவிக்கான சம்பளம் மற்றும் மேலதிக தகவல்களுக்கு 2019-03-05ஆம் திகதிய 1/2019ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தை தயவு செய்து பார்வையிடவும்.

**செயலாளர்,**
**அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,**
**மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.**
**2024-05-07.**

## மாகாண கல்வித் திணைக்களம்
## வடமேல் மாகாணம்
# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**அலுவலக தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்கல்,ஒப்படைத்தல்,மேசைக் கணனிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்கல் ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்,Smart Boards இன் வழங்கல்,ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல், 3-9 தர மாணவர்களுக்கான கணிதம் கற்பித்தல் கற்றல் Tools Kits ஐ வழங்கல்,ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்**

**செயற்றிட்டப் பெயர்:** **பொது கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டம் (GEMP) மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி.**

01 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு அலுவலக தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்கல்,ஒப்படைத்தல்,மேசைக் கணனிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்கல் ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்,Smart Boards இன் வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல், 3-9 தர மாணவர்களுக்கான கணிதம் கற்பித்தல் கற்றல் Tools Kits ஐ வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல் ஆகியவற்றிற்காக வடமேல் மாகாண, மாகாணகல்விப் பணிப்பாளரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

1 ஆம் அட்டவணை:

| தொகுதி | அம்ச இல. | விளக்கம் | அளவு (அலகில்) | விலைமனுப் பிணை (இ.ரூபாவில்) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | நிதி வளம் | மதிப்பீட்டு முறை |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | **அலுவலக தளபாட வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்** | | | | | | |
| | i. | அலுவலக மேசை | 49 | 145,600.00 | 3,500.00 | இ. அரசாங்கம் | அம்சத்தின் முழுமையான அளவானது குறிப்பிடப்படல் வேண்டும் அம்சங்கள் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படும். |
| | ii. | அலுவலக கதிரை | 49 | | | | |
| | iii. | மாணவர் மேசைகள் | 490 | | | | |
| | iv. | மாணவர் கதிரை | 490 | | | | |
| | v. | விரிவுரை மண்டபகதிரை | 450 | | | | |
| 02. | **அலுவலக உபகரண வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்** | | | | | | |
| | i. | நிழற்பட பிரதியாக்கல் இயந்திரம் | 110 | 499,600.00 | 3,500.00 | இ. அரசாங்கம் | அம்சத்தின் முழுமையான அளவானது குறிப்பிடப்படல் வேண்டும் அம்சங்கள் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படும். |
| | ii. | மடிக்கணனி | 131 | | | | |
| | iii. | Tab | 54 | | | | |
| | iv. | Laptop-RESC | 01 | | | | |
| 03. | **மேசைக் கணினிகள் மற்றும் துணைப்பாகங்கள் ஆகியவற்றின் வழங்கல்,ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்** | | | | | | |
| | i | மேசைக் கணினிகள் | 137 | 342,500.00 | 3,500.00 | GEMP | அம்சத்தின் முழுமையான அளவானது குறிப்பிடப்படல் வேண்டும் அம்சங்கள் ஒன்றாக மதிப்பீடு செய்யப்படும். |
| | ii | UPS | 137 | | | | |
| 04. | **ஸ்மாட் போட்டுக்களின் வழங்கல்,ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்** | | | | | | |
| | i. | ஸ்மார்ட் போர்ட்டுக்கள் | 139 | 695,000.00 | 3,500.00 | | அம்சத்தின் முழுமையான அளவானது குறிப்பிடப்படல் வேண்டும் |
